வெளியீடு எண் 183. 559

உ

குருபாதம்

# திருக்குறள் - கதைகள்

நான்காம் உயர்வகுப்புக்குரியது

(IV Form)

[அரசியலார் வகுத்த புதிய பாடத்திட்டப்படி எழுதியது.]

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

சிதம்பரம், வித்துவான்

திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்களால்

எழுதப்பெற்றது.

சர்வதாரி

உ

சிவமயம்

# முகவுரை

இந்த இருபதாம் நூற்றாண்டில் மற்றநாட்டு அறிவுடை மக்கள் அடைந்திருக்கின்ற ஆட்சி நலவுரிமையை இந்தியரும் அடையப் பெருமுயற்சி யெடுத்தவர் மகாத்மா காந்தியடிகள். பிரிவுற்ற இந்தியா முறிவற்று ஒருமையுற உழைத்த அடிகளின் தூய உடலைத் தன் மனக் கோளுக்கு மாறென்று எண்ணி வெறிகொண்ட விநாயக நாதுராம் கோட்ஸே, இறைவனைத் தொழும் தூய வேளையிலே சுட்டுக் கொன்றான். அந்நாள் 1948 ஜனவரி 30உ வெள்ளி மாலை. இந்நாள், நாட்டு வரலாற்றில் சிவப் பெழுத்தாற் பொறித்து வருந்தத்தக்கதொன்றாம்.

உலகத்தார் உள்ளத்துளெல்லாம் விளங்குகின்ற பொய்யா விளக்காகிய காந்தியடிகளுக்கு ஒப்பாவார் திருவள்ளுவரேயாவார் என்பதனைத் தருமபுர ஆதீன மகா சந்நிதானமவர்கள் திருவுள்ளத் தடைத்து உலகப் பொது நூலாகிய திருக்குறளை வெளியிடத் திருவுள்ளங் கொண்டார்கள். இளைஞர்கள் யாவர்க்கும் எளிய முறையிற் பயன்பட வேண்டுமென்று எண்ணினார்கள். நம் மாகாணக்கல்வி யமைச்சர் திரு, அவிநாசிலிங்கஞ் செட்டியார் அவர்கள் கல்வித்துறையில் அமைத்துத்தந்த புதியமுறை நினைவுக்கு வந்தது.

அரசாங்கப் பாடத்திட்டப்படி நான்காம் பாரத்திற்குப் பொறுக்கபெற்ற குறள்கட்கு எளிய வுரையும், இனிய கதையும் அமையுமாறு எழுதும்படி, சிதம்பரம் வித்துவான் திரு, சேதுசுப்பிரமணியபிள்ளை அவர்கட்கு ஆணை தந்தார்கள். அவ்வண்ணம் மகாசந்நிதானமவர்கள் ஆணைக்கிணங்க எழுதப்பெற்ற இந்நூல் காந்தியடிகள் நாள்மலராக வெளிவருகிறது. ஓதற்கெளிமையும், உணர்தற்கருமையு முடைய வேதப்பொருளை விளக்குந் திருக்குறட் பெருமையை அறியும் எவர்தாம் இத்தகைய நூலைப் படித்துப் போற்ற முன்வராமலிருப்பர்?

இந்நினைவுமலர் வெளியீட்டுக்கு முன்னுரை யொன்று எழுதப் பணித்த தருமையாதீன 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் துணைப்பொன்னடி மலர்க்கு என் மனமார்ந்த வணக்கத்தைப் பணிவுடன் செலுத்துகின்றேன்.

அருளறம் பூண்டே அனைத்துலகும் ஆண்ட
தெருளுளம் தாங்குந் திருவன்—பொருள்வளர்
இந்தியர்க் காட்சிநலம் எய்துவித்த காந்தியடி
சிந்திப்போம் வந்திப்போம் சேர்ந்து.

அன்பும் பணிவுமிக்க,
வித்துவான்
பு. சி. புன்னைவனநாத முதலியார்,
துணைத்தலைவர், கீழ்த்திசைப்பல்கலைக்கல்லூரி
தருமபுர ஆதீனம்.

புலவரகம்
மயிலாடுதுறை
28—1—1949.

உ

சிவமயம்

# திருக்குறள் கதைகள்

## மூலமும் உரையும்

---

### கடவுள் வாழ்த்து

**ச**ண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாம சுந்தரி அம்மையாருக்கும் சுமார் மூன்னூறு ஆண்டு களுக்கு முன்பு புதல்வராய்த் தோன்றினர் குமர குருபரர். இவர் ஐந்துவயது வரை ஊமையாய் இருந்து பின் செந்தூர் முருகன் அருளால் ஊமை நீங்கி எல்லாக் கலைகளிலும் வல்லவர் ஆனார். தம் கல்வித்திறமையைப் பல இடங்களிலும் அறிவித்து வெற்றிபெற்ற இவர் தருமபுரத்தை அடைந்தார். அதுசமயம் அங்குக் குருபீடத்தில் அமர்ந்திருந்தவர் மாசிலாமணித் தேசிகர் அவர்கள். தேசிகரவர்கள் இவர் வருகையைக் கண்டு "ஐந்து அறிவையும் கண்கள் கொள்வதெப்படி?", என்றார்கள். அக் கேள்விக்கு விடை தெரியாமையால் "முருகன் அருளால் கிடைத்த கல்வியை அறிந்ததினால் உண்டாகிய பயன் இவர் பாதத்தை வணங்குதலே" என்று பணிந்து அவரையே குருவாகக்கொண்டு

(அறியாத கலைகள்) யாவற்றையும் அறிந்தார். அறிந்ததற்குப் பயனாகத் தாம் "பண்டாரமும்மணிக் கோவை" என்ற நூலையும் இயற்றினார்.

தில்லையில் பிறந்து வாழ்ந்த மணியனுக்குக் காஞ்சிபுரத்தில் வாழும் காலம் வந்தது. இக் காலத்தில் இவன் குடும்பத்தையெல்லாம் தில்லையிலேயேவைத்து இவன்மட்டும் தனியே காஞ்சியில் வாழலானான். இவ்விதம் வாழும்பொழுது "தில்லைக்குச் செல்லவேண்டும்" என்று பலவித முயற்சிகள் செய்தும் அவையாவும் பயன்படாமல் போயின. அச்சமயம், சிலர் "கலியுக தெய்வமாக விளங்கும் செந்தில் முருகனைப்போய் வழிபட்டால் பயன் கூடும்" என்றார்கள். அன்பர்கள்சொற்படி செந்திலாண்டவனைத் தொழுதான். தொழும்நேரத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. "இக்குமரன் அருள் பெற்ற குமரகுருபரர் பணிந்த இடத்தைப் பணிய வேண்டும்" என்பதே ஆகும். இவ் வெண்ணத்தையே துணையாகக்கொண்டு தருமபுரத்தை அடைந்தான். உட்செல்லும்பொழுது மாசிலாமணித் தேசிகர் வழிமுதலாகவந்த 25-வது மகாசந்நிதானமவர்கள் பூசையை முடித்து வெளியேவந்தார்கள். அவர்கள் திருவடிகளில் விழுந்து,

**"இருபான் ஐந்தாய் எய்திய இறைவ!**<br>
**மூவாக் குழவியின் மூகையைத் தவிர்த்த**<br>
**குமரன் சொற்குக் குருவெனக் கண்ட**<br>
**வழிமுதல் வந்த ஒருபெருந் தலைவ!"**

என்ற அடிகளைப்பாடி, ஏனைய வரிகளில் அவன் குறையும் அமைத்துப் பாடிய பாடலைத் திருவடிக்குக் காணிக்கையாகச் செலுத்தினன். அவனைக் குறிப்பாலுணர்ந்த அவர்கள், "எழுந்திரு. இன்னும் ஒருதிங்களில் தில்லையை அடைவாய்" என்று அருளியதோடு திருநீறும் அளித்தார்கள். பிறவியிலே தோன்றித் தன்னை வாட்டிவரும் நோயைத் தீர்க்கும் மருந்தாகிய பொருளையும் வழங்கினர்கள். வழங்கிய பொருளைப்பெற்ற மணியன் "தன்பிறவி நோயைத் தீர்க்கும் மருந்து இப்பாதமே" என்று தெளிந்து இத்தனைநாள் பாழாய்ப்போயிற்றே என்று வருந்தி மீண்டும் ஒருமுறை பணிந்து காஞ்சியை அடைந்தான். அத்தெய்வம் அருளியபடி அக்கால எல்லைக்குள் (1947ஆம் டிசம்பர்மீ 15ம்நாள்) தில்லையில்குடும்பத்தோடு வாழும் செல்வத்தையும் அடைந்தான். அன்றுமுதல் பாதம் பணிதலே கல்வி அறிவின்பயன் என்று அல்லும் பகலுமாகிய எந்நேரமும் அவர்கள் பாதத்தையே எண்ணி வழிபட்டு வருகிறான். இக்கருத்து மக்களுக்கு விளங்கவள்ளுவரும் கூறியுள்ளார்.

**கற்றதனால் ஆய பயன்என்கொல்; வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.** (1)

வாலறிவன் = உண்மை அறிவை உடையவனது
நன்மை தாள் — (பிறவிப்பிணியைத்தீர்க்கும்) நல்ல (மருந்தாகிய) பாதங்களை
தொழார் எனின் = வணங்கார் என்றால்

| | |
|---|---|
| கற்றதனால் | = (அவர்கள் பல அறிவு நூல்களையும்) படித்ததினால் |
| ஆய | = உண்டாகிய |
| பயன் என் | = நன்மையாது? (ஒன்றுமில்லை) |

**கருத்து:** கல்விக்குப் பயன், அறிவு அடைதல்; அறிவிற்குப் பயன், இறைவன் பாதத்தை வணங்குதலாம்.

**கேள்வி:** *கல்வி அறிவின் பயனை அடைந்தவர் எவர்?*

**இலக்கணம்:** தொழாஅர்:— உயிரளபெடை; எவன் என்னும் வினைப்பெயர் என் என்றாய் இல்லை என்னும் பொருளைக் குறித்தது.

---

## வான் சிறப்பு

### மழையின் சிறப்பைக் கூறுதல்

சோழநாட்டில் வாழ்ந்த சிலம்பி என்ற பெண், "கம்பர் வாயால் புகழப்படவேண்டும்" என்று கம்பருக்கு 500 பொன் அளித்து, "தன்னை வாழ்த்தும்படியான ஓர் பாடல் பாடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். பொன்னைப்பெற்ற கம்பர்,

> **"தண்ணீரும் காவிரியே, தார்வேந்தனும் சோழனே**
> **மண்ணாவதும் சோழ மண்டலமே"**

என்று வாழ்த்தினார். இவ்வாழ்த்தைக் கேட்ட அவள், "என்னை வாழ்த்தும்படியாகத் தங்களை

வேண்டிக்கொண்டதற்குத் தாங்கள் தண்ணீரை வாழ்த்துகிறீர்களே" என்றாள். அப்போது கம்பர், "தண்ணீரைமட்டும் வாழ்த்தவில்லை. தண்ணீரைத் தரும் மேகத்தையும் உட்பொருளாக வாழ்த்தினேன். மேகம் மழைபெய்யாவிட்டால் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாவிட்டால் விளைபொருள் இல்லை. இவைகள் இல்லாவிட்டால் உலகில் எந்த உயிரும் பிழைத்திருக்க முடியாது. நீ உயிருடன் பிழைத்திருப்பதற்குக் காரணம் உணவல்லவா? அவ்வுணவு தண்ணீர் இல்லாவிட்டால் எவ்விதம் உண்டாகும்? மேலும், உனக்குப் பசியைநீக்கும் விளைபொருள்களை உண்டாக்கித் தருவதோடு தாகம் எடுக்கும்போது அந்நீரே உணவாகக் குடித்துக் களைப்பு நீங்குவதற்கும் பயன்படுகிறதல்லவா? ஆகையால் தண்ணீரைத்தரும் மேகத்தை உட்பொருளாக அமைத்து நீரை வாழ்த்தினேன்'" என்றார். இதைக் கேட்ட அவள், என் பசியை நீக்கும் விளைபொருள்களை உண்டாக்கி உதவுவதோடு தானும் உணவாகத் தாகத்தை நீக்கி உதவிசெய்யும் தண்ணீரை வாழ்த்தியதைக் குறை கூறினேமோ? என்று வருந்தி, தாங்கள் இவ்விதம் காக்கும் மேகம்தரும் தண்ணீரை வாழ்த்தியதை அறியாமல் குறையாகச் சொல்லிவிட்டேன்" என்று புலவரிடம் மன்னிப்பு வேண்டினள். இதையே, வள்ளுவரும் நல்ல உணவுப்பொருளை உண்டாக்குவதோடு தானும் உணவாக உண்ண உதவுவது மழைநீரே ஆகும் என்று நீரின் உதவியைச் சிறப்பித்துள்ளார்.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.** (2)

| | | |
|---|---|---|
| துப்பார்க்கு | = | உண்பவர்க்கு |
| துப்பு ஆய | = | நன்மை ஆகிய |
| துப்பு | = | உணவுகளை |
| ஆக்கி | = | உண்டாக்கி |
| துப்பார்க்கு | = | உண்பவர்க்கு |
| துப்பு ஆயதும் | = | தானும் உணவாய் இருப்பதும் |
| மழை | = | மழை நீரே ஆகும். |

**கருத்து:** *மழை மக்கள் உண்ண உணவைத் தருவதோடு தானும் உணவாக உண்ண உதவுகிறது.*

**கேள்வி:** *மழை மக்களுக்குச் செய்யும் நன்மைகள் எவை?*

**விளக்கம்:** *'துப்பு' என்ற சொல் பலதரம் வந்தது சொற்பின்வருநிலை அணி. உயர்திணையில் கூறி இருப்பினும் அஃறிணைக்கும் இது பொருந்தும்.*

---

## அறன் வலியுறுத்தல்

பொருளையும், இன்பத்தையும்விட அறம் வலிமையுடையது என்று சொல்லுதல்.

*ஔவையார், திருவெண்ணைநல்லூர்ச் சடையப்பவள்ளல் மனையில்போய் உண்டுகொண்டிருக்கும்போது வள்ளல் பந்தியில் சரியாக உணவு*

அளிக்கிறார்களா? என்று பார்வையிடவந்தார். அப்போது உணவு அருந்திக்கொண்டிருந்த தமிழ்அரசி வள்ளலே! எங்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான உணவு அளிப்பதால் நாங்கள் பொறாமையில்லாமலும், அறுசுவைஉணவு வேண்டுமட்டும் தருவதால் "போதும் போதும்" என்று நாங்கள் ஆசையில்லாது கூறும் மொழியும், இல்லாததை அறிந்து இலையில் போடுவதால் நாங்கள் கோபமில்லாமல் மகிழ்ச்சியும், போடுகிறவர் குறிப்பறிந்து அளிப்பதால் நாங்கள் தீயசொற்கள் பேசாமல் இனிய சொல்லுடன் உண்கிறோம் என்றாள்; இவ்விதம் நான்கு தீய குணங்களும் வரவொட்டாமல் அறம் செய்யும் தாங்களே வள்ளல் என்று புகழ்ந்தாள். அச்சமயம் வள்ளல் நான் அறம் செய்தாலும் நீங்கள் பொறாமை, ஆசை, கோபம், கொடியசொல் ஆகிய இவைகள் இல்லாமல் அமைதியாக உண்டதால், எனது அறமும் சிறந்தோங்கி நானும் வள்ளலாக விளங்குகிறேன் என்று பதில் அளித்தார். வள்ளுவரும் இந்நான்கையும் விலக்கிச்செய்வதே அறம் என்றார்.

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம். (3)**

| | | |
|---|---|---|
| அழுக்காறு | = | பொறாமையும் |
| அவா வெகுளி | = | ஆசையும், கோபமும் |
| இன்னாச்சொல் | = | கொடியசொல் |
| நான்கும் | = | இந்நான்கினையும் |

இழுக்கா = விலக்கி
இயன்றது = இடைவிடாமல் நடைபெற்றதே
அறம் = தர்மமாகும்.

**கருத்து:** பொருமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் இவற்றை விலக்கிச் செய்வதே அறமாகும்.

**கேள்வி:** எவை இழுக்கா இயன்றது அறமாகும்? அறம்செய்வோர் விலக்கவேண்டிய நான்கு எவை?

---

# இல்லறவியல்

## அன்புடைமை

### எல்லாரிடத்தும் அன்புடையராய் இருத்தல்

அங்கவை, சங்கவை என்ற இரண்டு பெண்மணிகளும் தம் தந்தையாகிய பாரியினிடத்தில் வைத்திருந்த அன்பே பாரி இறந்ததும் கபிலரிடம் விருப்பம் உடையராய் வாழும் தன்மையை அளித்தது. அக்கபிலர் அழைத்துப்போய்த் திருக்கோவலூரில் விட்டு வடக்கிருந்து உயிரைவிடச் சென்றதும் அவ்விருப்பமே பசியோடுவந்த ஔவையின் பசியை நீக்கி அவளோடு பழகும் நட்பை உண்டாக்கியது. இந்நட்பே இவர்களுக்கு அளவிடமுடியாத சிறப்பை உண்டாக்கியது இதனால் அன்பு, விருப்பத்தையும்

விருப்பம் பிறரிடம் பழகும் நட்பையும் உண்டாக்கும் என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**அன்பீனும் ஆர்வம் உடைமை; அது ஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு.** (4)

| | | |
|---|---|---|
| அன்பு | = | (சுற்றத்தாரிடத்தில் காட்டிய) அன்பு |
| ஆர்வமுடைமை | = | பிறரிடத்தும் விருப்பம் உடைமை ஆகும் தன்மையை |
| ஈனும் | = | கொடுக்கும். |
| அது | = | அவ்விருப்பமுடைமை |
| நண்பு என்னும் | = | (யாவரும்) சிநேகம் என்று சொல்லப்படும் |
| நாடாச்சிறப்பு | = | அளவிடமுடியாத மேன்மையை |
| ஈனும் | = | கொடுக்கும். |

**கருத்து:** அன்பு, விருப்பத்தையும் விருப்பம் நட்பையும் உண்டாக்கும்.

**கேள்வி:** அன்பு, மக்களுக்குச் செய்யும் நன்மைகள் எவை?

---

## விருந்தோம்பல்

### வந்த புதியவரைப் பாதுகாத்தல்

திருவெண்ணெநல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல், காலைமுதல் மாலைவரை வரும் விருந்தினரை உபசரித்து அவர்களை அனுப்பி மேலும் விருந்து

வருவார்களா! என்று ஆவலுடன் எதிர்பார்த்து, வரும் விருந்தினரையும் உபசரித்து அனுப்புவார். ஒருநாள் நேரங்கழித்துக் கம்பர் வந்தார். வந்தவரை அன்புடன் அழைத்து அறுசுவை உண்டி கொடுத்துப் பசியைப் போக்கினர். பசிநீங்கிய புலவர், "வேளை தவறிய நேரத்தில் நம் உயிரைப்போக்கும் பசிக்கு அமுதம்போல் அறுசுவை உணவை அளித்து எமக்கு உயிரை அளித்த இவரே தேவர்; இவரே தெய்வம்" என்று மனமாரப் புகழ்ந்தார். பின் தாம்பாடிய இராமாயணத்தில் "சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் முடிசெய்து கொடுக்க, அதை வசிட்டமுனிவர் வாங்கி, தேவாதி தேவனை இராமன் தலையில் வைத்தார்கள்" என்று இவ் வள்ளலை மண்ணுலகத்தில் வாழும் தேவராக ஆக்கி, இவர் முன்னோர்களை விண்ணுலகில் வாழும் தேவர்களுக்கு நல்ல விருந்தாகச் சென்றவர்களாகவும் புகழ்ந்துள்ளார். இவ்விதம் வந்த விருந்தினரை உபசரித்து வரும்விருந்தினரை ஆவலோடு எதிர்பார்த்து இருப்பவன் வானில்உள்ள தேவர்க்கு நல்ல விருந்தாவான் என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.** (5)

| | | |
|---|---|---|
| செல்விருந்து | = | (தன்னிடம்) வந்த விருந்தினரை |
| ஓம்பி | = | உபசரித்து |
| வருவிருந்து | = | (பின்) வரக்கூடிய விருந்தினரை |

பார்த்திருப்பான் = (அவனுடன்) எதிர் நோக்கி இருப்பவன்
வானத்தவர்க்கு = விண்ணுலகில் உள்ள தேவர்க்கு
நல்விருந்து = (அன்புடன் எதிர்கொள்ளத் தக்க) சிறந்த விருந்தினன் ஆவான்.

**கருத்து:** வந்த விருந்தையும், வரும் விருந்தையும் பாதுகாப்பவன் தேவர்களால் சிறப்புச் செய்யப்பெறுவான்.

**கேள்வி:** வானத்தவர்க்கு நல்விருந்தாகச் செல்பவர் எவர்?

---

## இனியவை கூறல்

### அன்பானமொழிகளைப் பேசுதல்.

பெருஞ் சித்திரனார் தம் வறுமை நீங்க இளவெளிமானைக்கண்டு பரிசில் கேட்டனர். அவன் வெறுப்பு முகத்துடன் சிறிது பொருள் கொடுத்தான். "நேரில் வந்து குறைசொல்லியும் மதியாமல் மனம் வேறுபட்டு வெறுப்பு முகத்துடன் தரும் பொருள் வேண்டாம்" என்று அதை வாங்காமல், மலர்ந்த முகத்துடன் மனங்கனிந்து அன்புமொழி பேசினால் அதுவே இப்பொருள் கொடுத்தலைக் காட்டிலும் மேலானது என்று சொல்லிச் சென்றார். இக்குறளும் இக்கருத்தையே விளக்குகிறது.

**அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்.** (6)

| | | |
|---|---|---|
| முகன் அமர்ந்து | = | (ஒருவரைக் கண்டபொழுதே) முகம் மலர்ந்து |
| இன்சொலன் | = | (அதனோடு) அன்பு மொழியையும் |
| ஆகப்பெறின் | = | உடையவனாகப் பெற்றால் (அது) |
| அகன் அமர்ந்து | = | மனம் மகிழ்ந்து |
| ஈதலின் | = | (ஒருவருக்கு வேண்டியதைக்) கொடுப்பதைக் காட்டிலும் |
| நன்று | = | நன்மையுடையது ஆகும் |

**கருத்து:** மனமகிழ்ந்து ஒருவர் வேண்டியதைக் கொடுப்பதைக் காட்டிலும் முகமலர்ந்து இன்சொல் கூறுதல் நல்லது.

**கேள்வி:** மனமகிழ்ந்து கொடுத்தலைக் காட்டிலும் நல்லது எது?

---

## செய்ந்நன்றி அறிதல்

### பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழ நாட்டை அரசு செய்தவன் அனபாயன். இவனிடம் மந்திரியாய் இருந்தவர் சேக்கிழார். இவர் மன்னன் அருகசமயக் கதையாகிய சீவகசிந்தாமணியைக் கேட்டு இன்பம் அடைவதை அறிந்தார். பின்னல்

வரும் மக்கள் தம்மைப் புகழ்வார்கள்; அல்லது அப்போது உள்ள மக்கள் தம்மை மதிப்பார்கள். அல்லது அரசனிடம் பெரும்பொருள் பெறலாம் என்ற பயன்களில் எதையும் எண்ணுமல், அரசே! சைவ சமய நாயன்மார்கள் கதை 63 உள்ளன. அவை இக்கதைகளைவிட இன்பம்தரும்'', என்று அவற்றில் சில கதைகளைச் சொன்னர். இவற்றைக்கேட்ட அரசன் இக்கதைகளைத் தாங்களே நூலாகப் பாடித் தரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். அவன் வேண்டுகோளின்படி அவன் உத்தரவு பெற்றுச் சிதம்பரம் வந்து சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி மறுவருட சித்திரைத் திருவாதிரையில் பாடிமுடித்துப் பெரியபுராணம் என்ற திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றி எல்லா மக்களும் அறியும்படிசெய்தனர். எவ்வித பயனையும் எதிர்நோக்காமல் சைவ உலகிற்குச் சேக்கிழார் செய்த அன்புடைமையை ஆராய்ந்தால் அவ்வன்புடைமை கடலைக்காட்டிலும் மிகப்பெரியது ஆகும்.

**பயன் தூக்கார் செய்தஉதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.** (7)

| | | |
|---|---|---|
| பயன் தூக்கார் | = | (இன்னார்க்கு இன்ன உதவிசெய்தால் நமக்கு இன்ன நற் பயனுண்டாகுமென்று தமக்கு) ஒருபயனையும் நோக்காதவராய் |
| செய்த | = | இயற்றிய |
| உதவி நயன் | = | உபகாரமாகிய அன்புடைமையை |
| தூக்கின் | = | ஆராய்ந்தால் |

நன்மை = அதன் நன்மை
கடலின் = சமுத்திரத்தைக் காட்டிலும்
பெரிது = மிகப் பெரியது ஆகும்.

**கருத்து:** கைம்மாறு கருதாது செய்த உதவி கடலினும் பெரியது.

**கேள்வி:** கடலைக்காட்டிலும் பெரியது எது?

---

## நடுவு நிலைமை

### தருமத்தில் வழுவாமல் எல்லார்க்கும் சமமாக நிற்றல்

ஒரு செல்வன் தன் தந்தைக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துவந்தான். அவன் மகன் அதைப்பார்த்து அந்த ஓட்டை எடுத்து மறைத்துவைத்தான். பின்பு கஞ்சி ஊற்றப்போனபோது ஓட்டைக் காணாமை யால் அந்தச்செல்வன், "ஓடு எங்கே" என்று தன் பிதாவைக்கேட்டு வைதான். அப்பொழுது மகன், "அப்பா என் பாட்டனை வையாதே; நானே அந்த ஓட்டை எடுத்து மறைத்துவைத்தேன்; ஏன் என்றால், நான் வயதுவந்து குடும்பம் பார்ப்பவன் ஆனபின், உனக்கு வேறே ஓடு சம்பாதிக்கமாட்டேன்; இந்தக்கஞ்சியே ஊற்றுவேன்; இதைக் கண்ட உலகத்தவரும் நான் கெடுதியான இழிந்த வழியில் நடக்கவில்லை; நடுவுநிலையோடு கூடிய தர்ம வழியில் நடக்கிறேன் என்று என்னைப் புகழ்வார்

கள்'' என்றான். இதைக்கேட்டு செல்வன் தான் தர்மவழியில் தவறி நடந்ததற்கு வெட்கப்பட்டு அன்றுமுதல் தன் தந்தைக்கு நல்ல உணவளித்து மிகவும் உயர்வாக வைத்துக் காப்பாற்றினான். பிதாவுக்குக் கஞ்சி ஓட்டிலே ஊற்றிய செல்வனுக்கு இவன் மகன் மிகுந்த செல்வமுடையவனாய் இருந்து அவ்விதமே கஞ்சி ஊற்றினால் அச்செயலை உலகத்தவர் கொடுதியாக நினையார் என்று வள்ளுவரும் கூறினார்.

**கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.** (8)

| | | |
|---|---|---|
| நடுவு ஆக | = | நடு நிலைமையாக இருந்து |
| நன்றிக்கண் | = | தர்ம வழியில் |
| தங்கியான் | = | நிலைபெற்றவனது. |
| தாழ்வு | = | எளிமையை |
| உலகம் | = | உலகத்தார் |
| கெடு ஆக | = | இழிவு ஆக |
| வையாது | = | நினைக்க மாட்டார்கள். (அவ்விழிவை உயர்வு என்று எண்ணுவார்கள்). |

**கருத்து:** தர்மவழியில் நிலைபெற்றவனது தாழ்வை இழிவாக உயர்ந்தோர் எண்ணமாட்டார்கள்.

**கேள்வி:** எவர் அடையும் இழிவை உலகோர் இழிவாக எண்ணார்?

---

## அடக்கமுடைமை

மனம், மொழி, உடம்பு, ஆகிய இவற்றைத் தீயவழியில் செல்லவிடாமல் அடக்கிக்கொள்ளுதல்.

*அசோகவனத்தை அழித்த அனுமான் வாலில் துணியைச் சுற்றித் தீயை இராவணன் வைக்கச் சொன்னான். வாலில் தீயினால் சுட்டபுண் பின் குணமாகி மாறி மறைந்தது. ஆனால் இலங்கை வேந்தன் அத்தீவைத்த சமயத்தில் தன் நாக்கினால் கேவலமாக அற்பனே! குரங்கே! என்று இழிவாகப் பேசிக் கொளுத்திய ஆறாத புண்போன்ற சொற்கள் அந்த அனுமனின் மனத்தில் அழியாமல் இருந்து இடைவிடாமல் துன்பம் செய்துகொண்டே இருந்தன. இவை மேலும் மேலும் அழியாமல் துன்பம் செய்ததால் அனுமன் இராமனுடன்போய் அவனைக் கொன்று துன்பம் நீங்கி இன்பம் அடைந்தான். இதனால் ஒருவரை நெருப்பால் சுடுதலைக்காட்டிலும் கொடுஞ்சொல் சொல்லுதல் கொடியது என்று கொடுஞ்சொல்லை எப்படிப்பட்டவரிடத்திலும் கூறுதல் கூடாது என்று வள்ளுவர் கூறியுள்ளார்.*

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.** **(9)**

*தீயினால்* = (ஒருவனை ஒருவன்) நெருப்பினால்
*சுட்ட* = *கொளுத்திய*
*புண்* = *காயமானது* (உடலிலே இருந்தாலும்)

உள் ஆறும் = மனத்தினுள்ளே (அப்பொழுதே) ஆறிப் போகும்

(அப்படி அல்லாமல்)

நாவினால் = நாக்கினால்

சுட்ட வடு = கொளுத்தப்பட்ட தழும்பானது

ஆறாது = மனத்தில் எப்பொழுதும் இடைவிடாமல் அழியாது இருந்து துன்பம் செய்யும்.

**கருத்து:** தீயினால் சுட்டபுண்ணைவிட நாவினால் கூறிய கடுஞ்சொல் கொடியது.

**கேள்வி:** ஆறுவதும், ஆறாததும் எவை?

**விளக்கம்:** தீயினாற் சுட்டது ஆறும்; நாவினாற் சுட்டது ஆறாது என்று வேற்றுமைதோன்றக் கூறியதால் இப்பாடல் வேற்றுமை அணி.

---

## ஒழுக்கமுடைமை

### அவரவர்களுக்கு ஏற்பட்ட ஒழுக்கங்களை உடையராதல்

ஒரு செல்வனிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருந்தார்கள். இச்செல்வன் குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும்போது கையில் உள்ள பொன் வளையல் கழன்று கீழே விழுந்தது. அதைச் சின்ன வேலைக்காரன் பார்த்துக்கொண்டிருக்கும்போது பெரிய வேலைக்காரன் எடுத்து மறைத்துவைத்தான்.

சிலநாள்சென்று குழந்தைகையில் வளையல் காணு தலை அறிந்து செல்வன் பெரிய வேலைக்காரனை அழைத்துக்கேட்டான். அவன் தான் கண்டதே இல்லை என்று சொன்னான். அப்போது அச்செல்வன் சின்னவேலைக்காரனைக் கூப்பிட்டுக் கேட்கச் சின்னவன் பெரிய வேலைக்காரனைப் பார்த்து "அண்ணா! நல்லொழுக்கமாக நடந்துகொண்டால் மேலும் இன்பமாக இங்கேயே வாழலாம்; வீணாகப் பொய் சொல்லி மறைப்போமானால் இங்கும் வாழ முடியாது; எங்கே சென்றாலும் பழிச்சொல் கூறு வார்கள்; இவ்வித நீங்காத துன்பத்தை அனுபவிப் பதைவிட எடுத்து மறைத்துவைத்ததைக் கொடுத்து விடுதல் நல்லது" என்றான். இதைக் கேட்டுப் பெரிய வேலைக்காரன் மறைத்து வைத்திருந்த வளையலை எடுத்துவந்து கொடுத்துத் தான் பொய் சொன்னதற்கு மன்னிக்கும்படி வேண்டினான். செல்வனும் பிழையை மன்னித்து வேலைக்கு வைத்துக்கொண்டான். அது முதல் அவன் தீய ஒழுக்கச் செயல் துன்பம் தருவதால் அவற்றை வெறுத்து இன்பம் தரும் நல்லொழுக்கமாக நடந்துவந்தான். பின் வரும் குறளிலும் இக்கருத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பைத் தரும்.** **(10)**

நல்லொழுக்கம் = (ஒருவனுக்கு) நன்னடத்தை
நன்றிக்கு = (தான் அடையும்) இன்பத்திற்கு

| | | |
|---|---|---|
| வித்து ஆகும் | = | காரணம் ஆகும் |
| தீ ஒழுக்கம் | = | கெட்ட நடத்தை |
| என்றும் | = | எப்பொழுதும் |
| இடும்பைதரும் | = | துன்பத்தையே உண்டாக்கும். |

**கருத்து:** நல்லொழுக்கம் இன்பத்தையும், தீயொழுக்கம் துன்பத்தையும் உண்டாக்கும்.

**கேள்வி:** மக்களுக்கு இன்பத்தையும், துன்பத்தையும் தருவன எவை ?

**விளக்கம்:** வித்து = விதை, இங்கே காரணம் என்ற பொருளில் வந்தது.

---

## பொறையுடைமை.

### பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதல்

முத்தநாதன் என்பவன் "சிவாகமத்தை அறிவிக்க வந்தேன்" என்று மெய்ப்பொருள் நாயனாரிடம் சொல்லிப் பக்கத்திலிருந்த மனைவியரையும், காவலரையும் அகலச்செய்து, தனியே முத்தநாதன் மேலும், மெய்ப்பொருளார் கீழுமாக இருந்து, பாடம் சொல்வதற்காக ஏட்டைப் பிரித்தான். பிரித்த ஏட்டினுள் வைத்திருந்த கத்தியை எடுத்துக் கழுத்தை அவன் அரிந்தான். பாதி அரிந்து இரத்தம் பெருகி ஓடுவதைக் காவல் செய்த தத்தன்

கண்டு மூத்தநாதனை வெட்டப்போனான். அப்போது மெய்ப்பொருளார் தடுத்து, இவனை ஒன்றும் செய்யாதே இவனை எவ்வித துன்பமும் செய்யாமல் ஊருக்கு வெளியே விட்டுவா! என்று சொன்னார். அவனும் அவ்விதமே செய்தான். "பாடம் சொல்வேன்" என்று வந்து தனக்குத் துன்பம் செய்தவனுக்குத் தான் துன்பம் செய்யாமல் பொறுத்த பொறுமையுள்ள மெய்ப்பொருளாரைத் திருக்கோவலூரில் உள்ள மக்களும், பிறரும் தம் மனத்தில் பொன்னைப்போல் மதித்து வைத்துப் புகழ்ந்தார்கள். வள்ளுவரும் இவ்விதம் பொறுத்தலே சிறப்புடையது என்று அறிவித்தார்.

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. (11)**

| | | |
|---|---|---|
| ஒறுத்தாரை | = | (பிறர் தமக்குத் தீங்கு செய்த விடத்துப் பொறுக்காமல் அவனைத்) தண்டித்தவரை |
| ஒன்று ஆக | = | ஒரு பொருளாக |
| வையார் | = | (அறிவுடையவர்) மனதில் நினையார் |
| பொறுத்தாரை | = | (அத்தீங்கைப்) பொறுத்தவர்களை |
| பொன்போல் | = | பொன்னைப் (போற்றி வைப்பது) போல |
| பொதிந்துவைப்பர் | = | இடைவிடாமல் மனதில் நினைப்பர். |

**கருத்து:** மேலோர், பொறுமை யுடையோரைப் பொன்போல் பொதிந்து வைப்பர்.

**கேள்வி:** பொன்போல் பொதிந்து வைக்கப்படுபவர் எவர்?

# தீவினை அச்சம்

## தீய செயல்களைச் செய்வதற்குப் பயப்படுதல்

ஆலமரத்தில் பெண் இனத்துடன் கூடிக் கலந்து மகிழ்ந்து இருக்கும் ஆண்பறவையைக் கொல்லும் பொருட்டு வேடன் குறிபார்த்துத் தன் வில்லை வளைத்து அம்பு எய்ய முயன்றான். மேல் பார்த்துக்கொண்டே வந்ததால் கீழே புற்று உள்ளதை அறியாமல் புற்றின்மேல் காலை வைத்து அழுத்தினான். அழுத்தியதனால் புற்று மண் இடிந்து உள்ளே உள்ள நாகத்தின்மேல் விழுந்தது. மண் விழுந்ததும் நாகம் சீறி மேலெழும்பிப் புற்றில் கால்வைத்திருந்த வேடனைத் தீண்டியது. நாகம் தீண்டியதை அறிந்த வேடன், "நாம் அப்பறவை யைக் கொல்ல, வில்லைவளைத்து அம்புஎய்ய முயன் றோம்; அம்முயற்சியாகிய தீய செயலே, 'தன் நிழல் தன்னை விடாது' என்ற முதுமொழிப்படி நம்மை நாகமாக வந்து தீண்டியது" என்று தான் செய்த தீமைக்கு வருந்தி இறந்தான். இதை வள்ளுவரும் தீய காரியங்களைச் செய்தவர் கெடுதல் அவர் நிழல் அவர் பாதத்தை விட்டு விலகாமல் அவர் பாதத் திலே தங்கியிருப்பதைப் போலாகும் என்று கூறி யுள்ளார்.

**தீயவை செய்தார் கெடுதல்; நிழல்தன்னை**
**வீயாது அடியுறைந் தற்று. (12)**

| | | |
|---|---|---|
| தீயவை | = | கொடிய செயல்களை |
| செய்தார் | = | (பிற உயிர்களுக்குச்) செய்தவர் |
| கெடுதல் | = | (தாம்) அழிதல் |
| நிழல் | = | ஒருவன் நிழலானது |
| தன்னை | = | அவனை |
| வீயாது | = | விட்டு விலகாது |
| அடி | = | அவன் பாதத்திலேயே |
| உறைந்த அற்று | = | தங்கியது போல் ஆகும். |

**கருத்து:** பிறர்க்குத் தீமை செய்தவன் அழிவான்.

**கேள்வி:** தீவினை செய்தவர் எவ்வித துன்பத்தை அடைவர்?

---

## ஒப்புரவு அறிதல்

### உலக நடையை அறிந்து உதவி செய்தல்

திங்களூரில் வாழ்ந்தவர் அப்பூதி அடிகள். இவர் திருநாவுக்கரசர் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்கு வந்ததையும் சமணர்கள் செய்த கொடிய துன்பத்திலிருந்து தப்பிப்பிழைத்து, சமண அரசனையும் சைவனாக்கிய திறமையும் கேட்டார். கேட்டவர் தாம் முயற்சி செய்து தேடிய செல்வம் யாவும் அப்பெரியார்க்கே உரியதாகும் என்று எல்லாப் பொருள்களுக்கும் அவர் பெயரையே வைத்தார். அப்பெயரால் அழைத்தும்வந்தார் சிவனடியார்

களுக்கு உணவும், நீரும் கொடுத்துதவினர். அப் பெரியாரையே நேரில் கண்டு அவர்க்கு உண வளித்து அவரால், இறந்த பிள்ளையும் எழப்பெற்று முடிவில் தாமும் இடைவிடாமல் இன்பம் தரும் அம்பலவன் அருளை அடைந்தார்.

இவ்விதம் ஒருவர் முயற்சியுடன் நல் வழியில் தேடிய செல்வம் பெரியோர்களுக்கு உதவி செய்வ தற்கே பயன்படும் என்று திருவள்ளுவரும் திருத்த மாகச் சொல்லியுள்ளார்.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம்; தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.** (13)

*தாள் ஆற்றி* = *முயற்சி செய்து*
*தந்த* = *சம்பாதித்த*
*பொருள் எல்லாம்* = *செல்வம் யாவும்*
*தக்கார்க்கு* = *பெரியோர்களுக்கு*
*வேளாண்மை* = *உபகாரம்*
*செய்தற்பொருட்டு* = *செய்தற்காகவே (அது) பயன்படும்.*

**கருத்து:** நல் வழியில் தேடிய செல்வம் யாவும் பெரி யோர்க்கு அளித்தலுக்கே ஆகும்.

**கேள்வி:** முயற்சியால் தேடிய செல்வம் எவர்க்கு உப காரம் செய்தற்கு ஆகும்?

## ஈகை

### ஏழைகளுக்கு இல்லை என்னமல் கொடுத்தல்

குமணனைக் காட்டிற்குத் துரத்திவிட்டு இவன் தம்பி அமணன் நாட்டை ஆண்டுவந்தான். காட்டில் வறுமையோடு வாழும் குமணனிடம் பெருஞ்சித்திரனர் சென்று தம் வறுமையைச் சொல்லிப் பொருள் யாசித்தார். "யாசித்த புலவருக்கு அவர் விரும்பிய பொருளைக் கொடுக்காமல் உயிர்வாழ்தலைக் காட்டிலும் இறத்தல் நல்லது" என்று தம் கையில் இருந்த வாளைப் புலவரிடம் கொடுத்து "என் தலையை வெட்டிக்கொண்டுபோய்த் தம்பியிடம் கொடுத்து நீர் விரும்பிய பொருளைப் பெற்றுச் செல்லும்" என்ருர். இதைக்கேட்ட புலவர், அண்ணன் தலைபோல் ஒரு உருவம் செய்து அவ்வுருவத்தை அமணனிடம் காட்ட, அவன் மனம் இளகி என் தமையனை அழைத்துவருவீராஞல் மிக்க பொருள் தருவேன்", என்றுசொல்லப் புலவர் போய் காட்டிலுள்ள வள்ளலை அழைத்துவந்து காட்டி மிகுதியான பொருளைப் பரிசாகப் பெற்றுச் சென்ருர். இதனல் "யாசிப்பவர் விரும்பிய பொருளைக் கொடுக்கமுடியாமல் வாழ்வதைவிட இறத்தலே நல்லது" என்று பின் வரும் குறளும் இக்கருத்தை வற்புறுத்தி அறிவிக்கிறது.

**சாதலின் இன்னுதது இல்லை; இனிதுஅதூஉம்**
**ஈதல் இயையாக் கடை.** (14)

| | | |
|---|---|---|
| சாதலின் | = | ஒருவனுக்கு இறத்தல் போல |
| இன்னாதது | = | துன்பம் தருவது |
| இல்லை | = | ஒன்றும் கிடையாது. |
| அதூஉம் | = | அப்படிப்பட்ட இறத்தலும் |
| ஈதல் | = | ஏழைகட்குக் கொடுத்தல் |
| இயையாக்கடை | = | முடியாத இடத்து |
| இனிது | = | நல்லது ஆகும். |

**கருத்து:** ஏழை, விரும்பியதைக் கொடுக்காமல் வாழ்வதைவிட இறத்தல் நல்லது.

**கேள்வி:** ஈதல் இயையாக்கடை எது நல்லது ஆகும்?

---

## புகழ்

### அழியாமல் நிற்கும் கீர்த்தி

சிதம்பரத்தில் வாழும் அம்பலவர் இவ்வுலகில் அழியாது என்றும் நிலைத்திருப்பது புகழே என்று அறிந்தார். "புகழ் தரும்படியான எச்செயலைச் செய்யலாம்" என்று எண்ணினார். பலநாள் காத்திருந்து மாணிக்கவாசகர் சிதம்பரம் வந்தபொழுது ஒருநாள் பெரியவர் வடிவமாகப்போய் அவர் பாடிய பாடலைக் கூறச்செய்து அவற்றைத் தம் கையால் எழுத்தாணிகொண்டு ஏட்டில் எழுதினார். தாம் எழுதியவை என்று அனைவரும் தெரிந்து தம்மைப் புகழ்ந்து கொண்டாடவேண்டும் என்பதற்காக அவ்

வேடுகளைத் தன் சபைக்கு முன்னால் வைத்து உள்ளே சென்றார். மறுநாள் விடிந்து கதவைத் திறந்து பார்க்க, இவ்வேடுகள் இருப்பதைக் கண்டார்கள். கண்டு மாணிக்கவாசகரிடம் காட்ட அவர் நடந்தவற்றைச் சொன்னார். "தமிழ் வேத மாகிய திருவாசகம், திருக்கோவையாரைக் கேட்டு அம்பலவாணரும் அவற்றை ஏட்டில் எழுதித் தமி ழுலகிற்கு அளித்தார்" என்ற புகழை எல்லோரும் சொல்லக்கேட்டு அம்பலத்தரசர் மகிழ்ந்தார். இவ் விதம் தனக்குச் சமம் இல்லாததாகிய உயர் புகழ் அல்லாமல் உலகத்தில் அழியாது இருப்பது வேறு எதுவும் இல்லை என்று வள்ளுவரும் கூறினார்.

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பது ஒன்றில்.** (15)

| | | |
|---|---|---|
| ஒன்றா | = | தனக்குச் சமானம் இல்லாத |
| உயர்ந்த | = | மேலான |
| புகழ் அல்லால் | = | கீர்த்தி இல்லாமல் |
| உலகத்து | = | நிலஉலகின்கண்ணே |
| பொன்றாது | = | அழியாது |
| நிற்பது | = | என்றும் நிலைத்திருப்பது |
| ஒன்று இல் | = | வேறு எதுவும் இல்லை. |

**கருத்து:** உலகில் அழியாதுநிற்பது புகழைத்தவிர வேறொன்றுமில்லை.

**கேள்வி:** உலகில் என்றும் நிலைநிற்பது எது?

# துறவறவியல்

## அருளுடைமை

### எல்லா உயிரிடத்தும் இரக்கம்கொள்ளுதல்

வந்தி என்பவள் தரும் பிட்டை வாங்கி உண்டு விட்டு அவளுக்காகக் கரை அடைக்கச்சென்றவன் சரியாக மண் வெட்டிப்போடவில்லை. அப்போது பாண்டியன் அவனைக் கோபித்துத் தன் கையில் இருந்த பிரம்பால் ஓர் அடி அடித்தார். அடித்த அடி ஆள் முதுகின்மேல் பட்டவுடன் அரசன் முதுகின்மேலும் மற்ற எல்லாவுயிர்கள்மீதும் பட்டது. அடிபட்டவுடன் மதுரை மன்னன் இந்த ஆள் நம்மிலும் வலியன், இவனை எளியன் என்று அடித்துவிட்டோமே என வருந்தித் தான் செய்த தவறை மன்னிக்க அந்த ஆளிடம் வேண்டினன். அந்த ஆள் திடீரென மறைந்துவிடவே ஆளாக வந்தவர் மதுரைக் கடவுளே என்று எண்ணி நில மிசை விழுந்து வணங்கினன். பின் சுவாமி! "இனி நான் எளியவர்களைத் தண்டிக்கும்போது, என்னைக் காட்டிலும் வலிமையுடையவர் என் முதுகில் இப்போது அடித்த அடிக்கு அஞ்சிநிற்கும் நிலையை நினைத்து நடப்பேன்" என்று பலதரம் வணங்கி எழுந்து அருள்நிறைந்த மனமுடையவன் ஆகி தன் அரண்மனையை அடைந்தான். வள்ளுவரும் "எளிய வர் மீது கோபம் வரும்போது வலியவர் முன் தான்

அஞ்சிநிற்கும் நிலையை எண்ணவேண்டும்'' என்று கூறியுள்ளார்.

**வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின்**
**மெலியார்மேற் செல்லும் இடத்து. (16)**

| | | |
|---|---|---|
| *தான்* | = | *அருள் இல்லாத ஒருவன்* |
| *தன்னின்* | = | *தன்னைக் காட்டிலும்* |
| *மெலியார்மேல்* | = | *எளியவர் மீது* |
| *செல்லும் இடத்து* | = | *(அவரைத் துன்பம் செய்யப்) போகும் போது* |
| *வலியார் முன்* | = | *தன்னைக் காட்டிலும் வலிமையுள்ளவர் எதிரில்* |
| *தன்னை* | = | *அஞ்சி நிற்கும் தன் நிலையை* |
| *நினைக்க* | = | *எண்ணல் வேண்டும்.* |

**கருத்து:** ஒருவன் எக்காரணத்தாலும் பிறரை வருத்துதல் கூடாது.

**கேள்வி:** மெலியாரைத் துன்புறுத்தப்போகும் ஒருவன் எதை நினைத்தல்வேண்டும்.

---

## தவம்

### மனம் பொறிவழிகளிற் செல்லாதபடி தடுத்துத் தமக்கு நேர்ந்த துன்பங்களைப் பொறுத்துப் பிறர்க்குரிய நன்மைகளைச் செய்தல்

சமண சமயத்திலிருந்து சைவ சமயத்தை அடைந்து வயிற்றுவலி நீங்கி வீரட்டானத்துறையும்

அம்மானுக்கு அடிமை ஆனார் நாவுக்கரசர். இவ்விதம் அடிமை பூண்டு இவர் தவம்செய்தார். அச்சமயம், சமணர்கள் நீற்றறையிலிட்டார்கள்; சாகாததுகண்டு நஞ்சுகலந்த சோற்றை உண்ணச்செய்தார்கள்; மேலும் உயிரோடு இருக்கக் குழியில் புதைத்து யானையைவிட்டு மிதிக்கச்செய்தார்கள்; பின் கல்லோடுகட்டிக் கடலிலும் போட்டார்கள். இவ்விதம் தவம்செய்யும் இவருக்கு மேலும் மேலும் துன்பம் வந்து வருத்தியதால் இவர் உண்மை ஞான ஒளியை அடைந்தார். இவ்வொளிக்குப் பயந்து துன்பம்செய்த மகேந்திரபல்லவனும் சைவனாகி இவர் பாதத்தை வணங்கி வழிபட்டு வாழலானான். வள்ளுவரும் "புடத்தில் வைத்துச் சுடச்சுடப் பிரகாசிக்கும் பொன்னைப்போல துன்பம் மேலும் மேலும் வந்து வருத்த தவம் செய்பவர்க்கு ஞான ஒளி வீசும்" என்று கூறியுள்ளார்.

**சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்; துன்பம்**
**சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.** (17)

| | |
|---|---|
| சுடச் சுடரும் | = (புடத்தில் வைத்து) சுடச் சுடப் பிரகாசிக்கும் |
| பொன்போல் | = பொன்னைப் போல |
| நோக்கிற்பவர்க்கு | = தவம் செய்ய வல்லவர்க்கு |
| துன்பம் | = அதனால் எற்படும் துன்பம் |
| சுடச் சுட | = வருத்த, வருத்த |
| ஒளிவிடும் | = அறிவுஒளி மிகுந்து விளங்கும். |

**கருத்து:** துன்பம் மிக, மிக வருத்தினால் தவம் செய்வோர்க்கு அறிவுமிகும்.

**கேள்வி:** "சுடச்சுடரும் பொன்போல்" என்ற உவமை விளக்கும் நீதி என்ன?

---

## கூடா ஒழுக்கம்

### துறவிகளுக்குப் பொருந்தாத நடத்தை

மதுரையில் உள்ள சைவ மடத்தில் பலர் வந்து காவிஉடை உடுத்துத் துறவியாக ஆயினர். மேலும், மேலும் வந்து சேர்ந்துகொண்டே இருந்தனர். இவர்கள் யாவரும் காலையில் வைகையில் நீராடுவது; காவி உடை, விபூதி, உருத்திராக்ஷம் அணிவது; கோயில் செல்வது; வந்து மீண்டும் உண்பது; இவ்விதம் தங்கள் காலத்தைக் கழித்துக் கழித்துக் கொண்டிருந்தார்கள், இவர்களில் உண்மையான துறவி எவர் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கு அம்மடத்துத் தலைவர் அவர்கள் ஒரு உபாயம் செய்தார்கள். இரவில் எல்லோருக்கும் குடிப்பதற்காக வெந்நீர் அடுப்பிலேயே போட்டுவைப்பது வழக்கம். அன்று சமயல்காரனைக் கூப்பிட்டு "இன்று வெந்நீர் நன்றாகக் கொதித்து வரும்போது அதில் ஒரு பிடி சாணத்தைப் போட்டு மூடிவிடு" என்று சொன்னார்கள். அவனும் அவ்விதமே செய்

தான். இரவு நடுநிசியில் துறவிகள் யாவரும் போய் வெந்நீர் குடித்தனர். குடித்தவுடன் நெடி தலைக் கேறியது; தொண்டை கரகர என்றது; வயிற்றைப் புரட்டியது; இரவு முழுதும் தூக்கம் வரவில்லை; அதில் ஒருவர் நாம் செய்த பாபம் என்று பேசாது இருந்தார். மற்றவர்கள் விளக்கை ஏற்றிப் பார்த்தார்கள்; அதில் சாணம் கிடப்பதைக் கண்டார்கள். கோபம் பொங்கியது. மடத்தில் கொட்டகை போடப்பட்டிருந்த கழியை எடுத்து கையில் வைத்துக்கொண்டு எப்போது சமையல்காரன் வருவான்'' என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள், அச்சமயம் மடத்துத் தலைவர் அங்கே வந்தார்; ஒருவரைத் தவிர ஏனையோரெல்லாம் கையில் மூங்கில் கழியை வைத்திருப்பதைக் கண்டார். "ஏன் இந்தக் கழியோடு நிற்கிறீர்கள்?'' என்று துறவிகளைத் தலைவர் கேட்டார். துறவிகள் இரவு வெந்நீர் போட்டு அதில் சாணத்தையும் போட்டுவிட்டான் சமையல்காரன். அந்த நீரை நாங்கள் குடித்துப் படாதபாடு பட்டுத் தூங்காமல் வருந்துகிறோம்''. இவ்வித வருத்தத்தை எங்களுக்குச் செய்த அவன் வந்தால் அடித்துக் கொல்லவே நிற்கிறோம்.'' என்றார்கள். இதைக்கேட்டுத் தலைவர், இச்சிறு குற்றத்திற்காகப் பொறுமை யில்லாது கோபித்த உங்களுக்கு இன்னும் பக்குவம் வரவில்லை; ஆகையால் "ஊர் சென்று சிலநாள் இருந்து பின்பு வந்து துறவியாகலாம்'' என்று பொறுமையோடு இருந்த ஒருவரை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றவர்

களுக்கு விடைகொடுத் தனுப்பினர். வள்ளுவரும் அம்பு உருவத்தில் அழகாகவும் நேராகவும் இருந்தாலும் செயல் செய்யும்போது அது மக்களைக் கொல்லும். வீணை வளைவாக இருந்தாலும் அது மக்கள் செவிக்கு இன்பத்தை அளிக்கும். அவ்விதமே தவம் செய்வாரை அவரவர்களின் வேடங்களினாலே நல்லவர் தீயவர் என்று கொள்ளாமல் செயலின் பாகுபாட்டினாலே அறிந்துகொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலாற் கொளல்.** **(18)**

| | | |
|---|---|---|
| கணை | = | அம்பானது |
| கொடிது | = | (வடிவினாலே செவ்விதாய் இருந்தாலும் செயலினாலே) கொடியதாய் இருக்கிறது. |
| யாழ் | = | வீணையானது |
| கோடு | = | (வடிவினாலே) வளைவாய் இருந்தாலும் |
| செவ்விது | = | செயலினாலே செவ்விதாய் இருக்கின்றது. |
| ஆங்கு | = | அவ்வகையே |
| அன்ன | = | தவம் செய்வார் கொடியர், செவ்வியர் என்பன |
| வினைபடுபாலால் | = | (அவரது வடிவிலே கொள்ளாமல்) அவரது செயலில் உண்டாகும் பாகுபாட்டாலே |
| கொளல் | = | அறிந்து கொள்ளுக. |

**கருத்து:** அம்பு நேராய் இருந்தும் கொடுமைசெய்யும்; வீணை வளைந்திருந்தும் இனிமைசெய்யும்; அதுபோலத்

தவமுடையார் செயல் தீமையாயின் கொடியர் எனவும், நன்மையாயின் செவ்வியர் எனவும் கொள்க.

**கேள்வி:** துறவிகளில் நல்லவர் தீயவர்களைக்கண்டறிவது எப்படி?

கொடிது+யாம்; கொடியாம்; குற்றியலிகரம்.

கொளல், உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

---

# வாய்மை

## உண்மை பேசுதல்

மகாத்துமா காந்தி அவர்கள் சிறை வாசத்தில் வாழும்போதும் கடவுள் தியானத்தை விடாமல் செய்துவந்தார். ஒரு நாள் நெடுநேரம் தியானம் செய்துகொண்டே இருந்தார். இவருக்குக் காவல் காக்கும் வீரருக்கு மிக்க பசி உண்டாகியது. பசியால் கோபம் கொண்ட அவர் தினந்தோறும் இந்தத் துன்பமே என்று தியானம் செய்தவரை உதைத்தார். அவ்வுதை வேகமாகப் பட்டதால் கீழே விழுந்து இரத்தம் ஒழுகியது. அச்சமயம் காந்தி வீரரின் காலைத் தடவி, "உங்கள் காலை என் பல் குத்தியிருக்குமே? கடவுள் இவ்வளவு கொடுமையான பற்களை அமைத்ததற்கு மிகவும் வருந்துகிறேன்" என்று அழுதார். இவ்வித இரக்கமுள்ள

சொற்களைக்கேட்ட வீரர் அவர் அடிகளில் விழுந்து வணங்கி "பொறுமைத் தெய்வமே! தங்கள் வாயால் இழிவான இரண்டு சொல் கூறி என்னை வையுங்கள்" என்று வேண்டினர். அப்போது காந்தி மகான், "பிற உயிர்களுக்குச் சிறிதும் துன்பம்தராத சொற்களைப் பேசலே உண்மை பேசுதலாகும். அவ்வித உண்மை பேசும் விரதத்தைக் கொண்ட யான் எவ்வாறு உம்முடைய மனம் வருந்தப் பேசுவேன்" என்று உண்மை பேசுதலின் தத்துவத்தைப் போதித்தார். பின் வீரர் தாம் செய்த குற்றத்தை மன்னிக்கும்படிப் பலதரம் அவர் காலில் விழுந்து கேட்டுக்கொண்டார். பின் வருங் குறளிலும் இக் கருத்து வற்புறுத்தப்பட்டுள்ளது.

**வாய்மை எனப்படுவ தியாதெனின், யாதொன்றும்**
**தீமை இலாத சொலல்.** (19)

| | |
|---|---|
| வாய்மை எனப்படுவது | = உண்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது |
| யாது எனின் | = எது என்று கேட்டால் |
| யாது ஒன்றும் | = எவ்வளவு கொஞ்சமும் |
| தீமை இலாத | = (பிறவுயிர்களுக்குத்) துன்பம் இவ்லாத சொற்களை |
| சொலல் | = கூறுதல் ஆகும். |

**கருத்து:** பிறர்க்குத் துன்பம்தராத சொற்களைக் கூறுதலே உண்மை ஆகும்.

கேள்வி: வாய்மையின் இலக்கணம் என்ன?

எனப்படுவது+யாது எனப்படுவதியாது, குற்றிய லிகரம்.

---

## வெகுளாமை

### கோபம் கொள்ளாதிருத்தல்

ஒட்டக்கூத்தரின் மாணுக்கர் குலோத்துங்க சோழர்; சோழர் ஒரு நாள் தாம் உணவருந்தும் போது வாயில் கல் அகப்பட்டது. இவ்விதம் கவன மில்லாமல் சமைத்ததற்காகச் சமையல்காரன் மீது கடும் கோபம் வந்து அவனை வெளியே அனுப்பினுர். அச்சமயம் ஒட்டக்கூத்தர் அர்சரைக் காண வந்தார். ஆசிரியரிடம் நடந்ததைச் சொன்னுர் அரசர் இதைக்கேட்ட புலவர் அரசரைத் திருமால் அம்சமாக எண்ணுவது வழக்கம். அத்திருமால் கல்லையும், மண்ணையும், கடலையும் உண்டவரன்ருே. அந்த அம்சத்துடன் விளங்கும் தாங்களும் கல்லை உண்ணுதல் இயற்கைதானே. என்று முதலில் அரசரைச் சமாதானப்படுத்திப் பின், இச்சிறுகல் உணவில் இருந்தது என்று கோபம்கொள்ளலாமா? அதிலும் தங்களையே நம்பி வாழும் அடிமைக ளிடமா இவ்வித கோபம்? "தங்களுக்குக்கோபத்தை உண்டாக்கக் கூடாது", என்று பல, வல்லமை

யுடையவர்கள் கப்பமாகப் பணத்தைச் செலுத்திப் பாதத்தை வணங்க வெளியே காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதமான வல்லமையுள்ளவர்மீது செலுத்தியும், செலுத்தாமல் தடுத்தும் வைப்பதற்குரிய கோபத்தை அடிமையாகிய அந்த எளியன் மேல் செலுத்தலாமா? என்றார். இதைக் கேட்டதும் சோழர் "நமது கோபம் பலிக்காத இடத்தில் அடக்கிக் கொள்கிறோம்" அவ்விதம் கோபத்தை நாம் அடக்கிக் கொள்ளாவிட்டால் அவரால் துன்பம் அடைகிறோம்". நமது கோபம் பலிக்கும் இடமாகிய இந்த ஏழை மீது, செலுத்தியதால் என்ன பயன்?" என்று மீண்டும் அவனை அழைத்து "இனிக் கவனத்துடன் தொழில் செய்வாயாக" என்று சொல்லி வேலையில் அமர்த்திக்கொண்டார். இதையே வள்ளுவரும், "தன் கோபம் செல்லக்கூடிய இடத்தில் கோபியாமல் இருப்பவனே சினத்தை அடக்கியவன் ஆவான்" என்று கூறியுள்ளார்.

**செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்:**
**அல்லிடத்துக்**
**காக்கினென்? காவாக்கால் என்?** (20)

| | | |
|---|---|---|
| சினம் | = | தன் கோபத்தை |
| செல் இடத்து | = | (அது) பலிக்கும் இடத்தில் |
| காப்பான் | = | (அதனை எழாமல்) அடக்குபவனே |
| காப்பான் | = | அடக்கியவன் ஆவான் |
| அல்லிடத்து | = | மற்றைப் பலியாத இடத்து |

காக்கின் என் = அதனை அடக்கினுலென்ன?
காவாக்கால்என் = அடக்காவிட்டால் என்ன?

**கருத்து:** தன்னுடைய கோபத்தைத் தன்னின் மெலியாரிடத்துச் செல்லாமல் காப்பவனே சினத்தைக் காப்பவனுவான்.

**கேள்வி:** கோபத்தை அடக்கியவன் என்று மதிக்கப் படுபவன் எவன்?

---

## இன்னு செய்யாமை

### எக்காரணம் பற்றியும் எந்த உயிருக்கும் துன்பம் செய்யாதிருத்தல்

கடைச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களுள் ஒருவர் சீத்தலைச்சாத்தனுர். அக்காலத்தில் யார் புதிதாக நூல் செய்தாலும் அது சங்கத்தாரால் ஒத்துக்கொள்ளப்படவேண்டும் என்ற ஒரு ஒழுங்கு இருந்து வந்தது. பலர் பல நூல்செய்து "அவைகளுக்கு மதிப்புரை தரவேண்டும்" என்று சாத்தனுரிடம் தாம்செய்த நூல்களைப் படிப்பார்கள். புலவர், அவற்றில் மிகுதியாகக் குற்றம் இருப்பவற்றை அறிந்து, பிறர் நாம்செய்த நூலில் குற்றங்கள் உள்ளன என்ருல் நம்மனம் நமக்கு எவ்வளவு துன்பம் தருமோ? அதுபோல இவர்கள் செய்த நூலில் உள்ளதாகிய குற்றங்களைச் சொல்லி

இவர்கள் மனதைப்புண்படுத்துவது ஏனோ'', என்று தம் கையில் உள்ள எழுத்தாணியால் தம் தலையில் குத்திக்கொள்வார். இதைக்கண்ட அவர்களும், மேலும், அவரைத் தொந்தரவு செய்யாது விடை பெற்றுச் செல்வார்கள். வள்ளுவரும் வருத்தம் தன்னை வருத்துவதுபோலவே பிறரையும் வருத்தும் ஆதலால் எவர்க்கும் தீமை புரிதல் கூடாது என்று கூறியுள்ளார்.

**தன்னுயிர்க்கு இன்னாமைதானறிவான்;என்கொலோ**
**மன்னுயிர்க்கு இன்னா செயல்.? (21)**

| | | |
|---|---|---|
| தன்னுயிர்க்கு | = | (பிறர் செய்த துன்பங்கள்) தன் உயிருக்கு |
| இன்னாமை | = | துன்பந்தருதலை |
| அறிவான் | = | (அனுபவித்து) அறிகின்றவன் |
| மன்னுயிர்க்கு | = | நிலையுள்ள பிற உயிர்களுக்கு |
| தான் இன்னா செயல் | = | தான் துன்பம் செய்தல் |
| என் | = | என்ன காரணம் |

**கருத்து:** பிறஉயிரை வருத்தும்படியான துன்பம் செய்தல் கூடாது.

**கேள்வி:** துன்பத்தால் வருந்தியவர் எவர்க்கு எதைச் செய்தல் கூடாது?

# நிலையாமை

## தோன்றும் பொருள்கள் அழியுந்தன்மை

"ஒரு செல்வன் தான் தன் அந்திய காலத்தில் தேடிய செல்வங்களை அறம் செய்யலாம்" என்று சம்பாதித்தவற்றைப் பொன்னுக மாற்றி அவற்றை உருண்டையாகச்செய்து பானையில் பாதுகாப்பாக வைத்திருந்தான். ஒருநாள் திடீர் என்று நாக்கை இழுத்து மேல்விக்குள் கிளம்பியது, அந்நேரத்தில் பேசமுடியாமையால் கையை வளைத்து "உருண்டை பொன் இருக்கிறது. எடுத்துவாருங்கள்; அறம் செய்யவேண்டும்" என்று அருகில் இருந்த உறவினர்களிடம் காட்டினுன். இவ்வுண்மையறிந்த அவன் மனைவி, புளி உருண்டை வேண்டும் என்கிருர். மருத்துவ அறிஞர் .புளியே தொடக் கூடாது என்று சொல்லியுள்ளார். அது இப்போது தொடக்கூடாது என்ருள். இதைக்கேட்டு, 'நல்லறிவுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே தர்மம் செய்யாது இருந்தோமே' என்று வருந்தி இறந்தார். இதனுல் எந்தக்காலத்தில் இந்தச் சரீரம் நீங்கும் என்பது யாவருக்கும் தெரியாமையால், "யாவரும் நல்லறிவுடன் இருக்கும்போதே நல்ல காரியங்களைச் செய்து முடித்தல் வேண்டும்" என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.** (22)

நாச் செற்று = (வார்த்தை எழாமல்) நாக்கை அடக்கி
விக்குள் = விக்கலானது
மேல்வாராமுன் = மேல் எழுவதற்கு முன்னே
நல்வினை = தர்மகாரியங்களை
மேற்சென்று = விரைந்து
செய்யப்படும் = செய்யப் படுதல் வேண்டும்.

**கருத்து:** நல்லறிவுடன் வாழும்பொழுதே அறச் செயல்களை விரைந்து செய்தல்வேண்டும்.

**கேள்வி:** நல்வினையை எப்பொழுது செய்தல் வேண்டும்?

---

## துறவு

### பொருள்களின்மேல் உள்ள ஆசையை வெறுத்தல்

பட்டினத்தார் அருளால் துறந்தவர் பத்தரகிரியார். இவர் துறந்தாலும் தமக்காக ஒரு சிறு ஓடும் நாயும் வைத்திருந்தார். ஒருநாள் பட்டினத்தாரிடம் ஒருதுறவி போய்ப் பிச்சைக்கேட்டார். கேட்டவருக்கு அவர் "எதிர்கோபுரத்தில் ஒருவர் குடும்பத்துடன் இருக்கிறார் அவரிடம்போய்க்கேள்" என்று சொல்லி அனுப்பினார். அனுப்பினவர் எதிர்கோபுரத்தில் உள்ளவரைக் கண்டு அவர் சொல்லியவற்றைச் சொல்லிப் பிச்சைக்கேட்டார். அச்சொற்களைக்கேட்ட பத்தரகிரியார் தம்முடைய

சட்டியைப்போட்டுஉடைத்தார். நாயையும்அடித்துக் கொன்ருர். இவ்விரண்டையும் அழித்ததைக்கண்டு பிச்சைகேட்க வந்தவர் பேசாது திரும்பிப்போனர். பத்தரகிரியாரும் தினம் சுத்தம்செய்து பிறர் எடுத்துக்கொள்வார்களோ என்று கவலையோடு காத்துவந்த சட்டி ஒழிந்ததால் அச்சட்டியைப் பற்றிய கவலையும் நீங்கியது. நாய் பட்டினி இல்லாது உணவு அளிக்கவேண்டுமேஎன்ற விசாரம் இருந்தது. நாய் ஒழிந்ததால் அந்தக்கவலையும் நீங்கியது. இனி உலகில் எந்த ஆசையும் இல்லைஎன்று யாவற்றையும் விரைவில் வெறுத்து வாழ்ந்ததால் தம் குருநாதர் முத்தி அடைவதற்கு முன்னே இவர் இறைவன் பாதநிழலை அடைந்தார், இதையே வள்ளுவரும் ஒருவன் எந்தப்பொருளில் ஆசையை விட்டானே அவன் அந்தப்பொருளினல் கவலைப்படுதல் இல்லை என்று கூறியுள்ளார்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.** (23)

| | |
|---|---|
| யாதனின் யாதனின் | = ஒருவன் எந்தெந்தப் பொருள்களின் ஆசையிலிருந்து |
| நீங்கியான் | = விடுபட்டிருக்கிருனே |
| அதனின் அதனின் | = அவன் அந்தந்தப் பொருளிலிருந்து |
| நோதல் | = துன்பம் அடைதல் |
| இலன் | = இல்லாதவன் ஆவான். |

கருத்து: ஆசையில்லாது வெறுத்த பொருளைப்பற்றி மக்கள் துன்பப்படுதல் இல்லை.

கேள்வி: மக்கள் எப்பொருளைப்பற்றித் துன்பப்பட மாட்டார்கள்?

---

## அவாவறுத்தல்

### ஆசையை ஒழித்தல்

அனிந்திதை, கமலினி என்ற இரு மாதரையும் ஆலாலசுந்தரர் கண்டு ஆசைப்பட்டார். இந்த ஆசையே காரணமாக ஆலாலசுந்தரர் திருநாவலூரில் வாழ்ந்த சடையனருக்கு மகனாகப் பிறந்தார். கமலினி என்பவள் திருவாரூரில் பிறந்து பரவையார், என்ற பெயரைப் பெற்றாள். அனிந்திதை என்பவள் ஞாயிறு என்னும் ஊரில் உள்ள ஞாயிறு கிழவர்க்குப் புத்திரியாய்த் தோன்றிச் சங்கிலியார், என்ற பெயரைப் பெற்றாள். இவர்கள் பிறப்பிற்குக் காரணம் ஆசையே ஆகும். இதனால், "மெய்ஞ்ஞானம் பெற்ற ஒருவரைத் திரும்பவும் பிறவியில் புகுத்திக்கெடுக்க வல்லது ஆசையே ஆகும். அதனால் அந்த ஆசைக்குப் பயந்து அவ்வாசை உண்டாகாமல் காப்பதே தர்மமாகும்" என்று வள்ளுவரும் கூறினார்.

**அஞ்சுவ தோரு மறனே; ஒருவனை**
**வஞ்சிப்ப தோரு மவா.** (24)

| | | |
|---|---|---|
| ஒருவனை | = | (மெய்ஞ்ஞானம்பெற்ற) ஒருவனையும் |
| வஞ்சிப்பது | = | (திரும்பவும் பிறவியில் புகுத்திக்) கெடுக்க வல்லது |
| அவா | = | ஆசையேயாகும். |
| | ஆதலால் | |
| அஞ்சுவது | = | அந்த ஆசைக்கு அஞ்சி அது உண்டாகாமல் காப்பதே |
| அறன் | = | தர்மம் ஆகும். |

**கருத்து:** மக்கள் ஆசைக்குப் பயந்து ஆசை உண்டாகாமல் வாழ்தல்வேண்டும்.

**கேள்வி:** வஞ்சிப்பதாகிய அவாவை மேலோர் யாது செய்தல்வேண்டும்?

ஓரும்; என்பன இரண்டும் அசைகள்.

---

# பொருட்பால்

## அரசியல்

## இறைமாட்சி

### அரசனது நற்குண நற்செய்கைகள்

கரிகாலன், சிறு வயதில் தன் மாமனாகிய இரும்பிடர்த்தலையார் என்ற புலவர் பாதுகாப்பில்

வளர்ந்து வந்தான். புலவர் இவனுக்கு வேண்டிய அறிவு நூல்களை எல்லாம் கற்பித்து இவனைக் கல்வி கேள்விகளில் வல்லவனாகச் செய்தார். இதனால் இவன் சோழ நாட்டிற்கு அரசனாக வந்ததும், மக்கள் எல்லாரிடமும் அன்பு மொழிகள் பேசி மகிழ்ந்ததோடு அவர்கள் விரும்பியதையும் கொடுத்துச் சிறந்தவனாக விளங்கினான். இவ்விதம் விளங்கியதனால் இந்த அரசன், "காவிரிக்குக் கரை கட்ட வேண்டும்" என்று விரும்பினான். இதை அறிந்த மக்கள் அரசன் கருத்துப்படி நடப்பதே நம் கடமை என்று பல ஆண்டுகள் செய்து முடிக்க வேண்டிய கரையைச் சில நாட்களில் செய்து முடித்து மன்னனுக்குப் புகழை உண்டாக்கினர். இவ்விதம் மக்கள் வேறு; அரசன் வேறு; என்று இல்லாமல் ஒற்றுமை மனப்பான்மையோடு புகழ் ஓங்கச் சோழன் ஆட்சிசெய்து வந்தான். வள்ளுவரும், இன்சொல்லோடு கொடுத்து அளிக்கும் அரசனுக்கு உலகோர் அவன் நினைத்தவற்றைக் கொடுத்துப் புகழை உண்டாக்குவர்" என்று கூறியுள்ளார்.

**இன்சொலால் ஈத்து அளிக்க வல்லாற்குத்**
**தன்சொலால்**
**தான்கண்ட அனைத்து இவ்வுலகு.** (25)

*இன் சொலால் = அன்பு மொழியுடனே*
*ஈத்து = கொடுத்து*
*அளிக்க வல்லாற்கு = காக்க வல்ல அரசனுக்கு*

இவ்வுலகு = இந்த உலகம்
தன் சொலால் = தன் புகழோடு பொருந்தி
தான் கண்ட அனைத்து = அந்த அரசன் நினைத்தவிதமே நடப்பதாகும்.

**கருத்து:** ஈகையும், இன்சொல்லும் உடைய அரசன் எண்ணியவிதமே இவ்வுலகமக்கள் நடப்பார்கள்.

**கேள்வி:** எவ்விதமன்னன், மனப்படி மக்கள் நடப்பார்கள்?

---

## கல்வி

### கற்றற்குரியவற்றைக் கற்றல்

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் விளங்கினவர், சிவப்பிரகாசர். இவர் செய்யுள் செய்தலில் வல்லவர்; துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார் என்ற பெருஞ்செல்வரின் அன்பைப் பெற்றவர்; கவிபாடுதலில் வல்லவராயினும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலைப் பாடம் கேட்க வேண்டும் என்ற ஆசை இவருக்கு இருந்தது. பாடங்கேட்கும் பொருட்டு அச்செல்வர் அளித்த பண உதவியால், தாமிரபர்ணி ஆற்றங்கரையில் உள்ள சிந்து பூந்துறையை அடைந்தார். அங்குத் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத் தம்பிரான் சுவாமிகள் இருந்தார்கள். அவர் திருவடிகளை வணங்கித்

தமக்கு இலக்கணக் கல்வியைச் சொல்லுமாறு வேண்டினர். சிவப்பிரகாசரின் ஆற்றலை அறிந்த அவர், ஐந்து இலக்கணங்களையும் 15 நாட்களில் கற்பித்தார். கற்பிக்கும்போது செல்வம் இல்லாத வறியவர், செல்வர் முன் பணிந்து நின்று, கடன் கேட்டல் போல் இவர் வாய் பொத்திக் கை கட்டிப் பணிவுடன் எதிரில் நின்று சொன்னவற்றில் யாதொன்றையும் விடாமல் கேட்டுத் தம் உள்ளத்தில் அமைத்துக்கொண்டார். இவ்விதம் இருந்து கற்றதால் இவரே இலக்கணத்தில் சிறந்தவர் என்ற பெயர் பெற்ருர்; "கற்பனைக் களஞ்சியம்" என்ற பட்டமும் பெற்ருர். இவ்விதம் கல்லாதவர்கள் எவ்வித சிறப்பும் இல்லாமல் இழிந்தவர்கள் ஆனர்கள். பின்வரும் குறளும் இக்கருத்தை வற்புறுத்துகிறது.

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்ருர்**
**கடையரே கல்லாதவர்.** (26)

| | | |
|---|---|---|
| உடையார் முன் | = | செல்வருக்கு முன்னே |
| இல்லார் போல் | = | செல்வமில்லாதார் (நிற்பது) போல |
| ஏக்கற்றும் | = | (தாமும் ஆசிரியர் முன்) விரும்பிக் கீழ்ப் படிந்து நின்றும் |
| கற்ருர் | = | படித்தவர் (உயர்ந்தவர் ஆவார்) |
| கல்லாதவர் | = | (அவ்வழிபாடு செய்யும் நிலைமைக்கு நாணிக்) கல்வி கல்லாதவர் |
| கடையரே | = | எப்பொழுதும் இழிந்தவரே ஆவர். |

**கருத்து:** ஆசிரியர்முன் கீழ்ப்படிந்து நின்று கற்றவர் உயர்ந்தவர் ஆவர். அவ்விதம் கல்லாதவர் இழிந்தவராவர்.

"தலையாயினர்" என்ற சொல் வருவிக்கப்பட்டது.

**கேள்வி:** உயர்ந்தவர், தாழ்ந்தவராக மதிக்கப்படுபவர் எவரெவர்?

---

## கல்லாமை

### கற்றற்குரிய நூல்களைக் கல்லாமை

எழுத்து வாசனையே இல்லாத ஆறுபேர்கள் பக்கத்து ஊரில் நடக்கும் திருவிழாவைக் காண இரவில் வழிநடந்து சென்றார்கள். செல்லும் வழியில் பெரிய ஆற்றைக்கடந்து செல்லவேண்டியிருந்தது. அவர்களில் ஒருவன் இரவில் ஆறு தூங்கும் என்று சொல்வார்கள்; ஆறு, தூங்குதா? விழித்திருக்கிறதா? என்று பார்த்து இறங்கவேண்டும் என்றான். மற்றவர்களும் அதுவே சரி என்றார்கள். சோதனை பார்ப்பதற்காக, வழிப்போக்கர்கள் சமைத்துக் கரையில் போட்டுப்போன கொள்ளிக் கட்டையை எடுத்து ஆற்றில் நனைத்தார்கள். நனைத்ததும் "சுரீர்" என்ற சத்தம் கேட்டது. ஆறு விழித்துக்கொண்டிருக்கிறது. "போகலாம்" என்று ஒருவர் கையை மற்றொருவர் பிடித்துக் கொண்டு அறுவரும் மறுகரையை அடைந்தனர்.

அடைந்து சரியாய் வந்து சேர்ந்தோமா? என்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று ஒருவன் சொன்னான். அவ்விதம் ஒவ்வொருவரும் தன்னை விட்டு எண்ண ஐந்துபேர்கள் வந்தோம். "ஒருவரை ஆறு விழுங்கிவிட்டது" என்று பொழுது விடியுமளவும் புலம்பிக்கொண்டே இருந்தார்கள். அவ்வழியே ஒரு வழிப்போக்கன் வந்தான். ஏன் அழுகிறீர்கள்? என்றான். அப்போது அவர்கள் நாங்கள், "ஊரில் இருந்து அறுவர் வந்தோம், ஒருவரை ஆறு விழுங்கிவிட்டது. ஐந்து பேர் இருக்கிறோம் ஒருவரை இழந்தோமே" என்று "அழுகிறோம்" என்றார்கள். வழிப்போக்கன், எண்ணிப் பார்த்து, "இவர்கள் தனக்கும் பிறர்க்கும் உதவி இல்லாமல் இருக்கும் உவர் நிலத்திற்கு ஒப்பாவர், இப் பூமிக்குச்சுமையாக உள்ளவர்," என்று அவர்களைநோக்கிப் பயப்படாதீர்கள். ஆறு விழுங்கியவனை அழைத்துத்தருகிறேன் வாருங்கள் என்றான். அனைவரும் எழுந்து வர, தன் கையில் உள்ள கழியால் அடித்து எண்ணிக்கொள்ளச் செய்தான் அறுவரும் இருப்பதாக அறிந்தார்கள். "ஆற்றில் சென்றவனை அழைத்துத் தந்த நீரே கடவுள்" என்று அவனை வணங்கினார்கள். அவன் நீங்கள் ஊர் சென்று கல்வி கற்றுக்கொள்ளுங்கள். அதன் பின் வெளியூர் செல்லலாம் என்று அவர்களைத் திரும்பவும் ஊர் செல்லச் செய்தான். வள்ளுவரும், "கல்லாதவர் உலகில் எண்ணப்படும் மக்கள் கணக்கைப் பெருக்க வாழ்கிறார்கள் அல்லாமல் உதவி

செய்யாத உவர் நிலத்திற்கு ஒப்பாக இவர்கள் இருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்.

**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லாதவர். (27)**

| | | |
|---|---|---|
| *கல்லாதவர்* | = | படியாதவர்கள் |
| *உளர் என்னும்* | = | (பார்க்கப்படுதலால்) உளர் என்று சிலராலே சொல்லப்படும், |
| *மாத்திரையர் அல்லால்* | = | அளவினராதல் அன்றி |
| *பயவா* | = | (தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால்) விளையாத |
| *களர் அனையர்* | = | உவர் நிலத்தோடு ஒப்பாவர். |

**கருத்து:** கல்லாதவர், விளையாத உவர் நிலத்திற்கு ஒப்பாவர்.

**கேள்வி:** உவர் நிலத்திற்குச் சமமானவர் எவர்?

---

## கேள்வி

### கேட்டு அறியவேண்டியவைகளைக் கற்றவரிடம் கேட்டல்

திருப்பூவணம் என்ற ஊரில் புஷ்பவனக் குருக்கள் என்பவர் அவ்வூரில் உள்ள ஆலத்தில் விளங்கும் தெய்வத்தைப் பூசைசெய்து வந்தார். இவர் கல்வி கற்கவில்லை. ஆயினும், தம் தந்தையார் கூறும் மந்திர மொழிகளையும் தந்திரச்சொற்

களையும் கேட்டவர். இவ்வூர் சிவகங்கை சமஸ்தான ஆட்சியைச் சேர்ந்திருந்தது. அச் சமஸ்தானத் தலைவர் மருதபாண்டியர். இப்பாண்டியர் தாம் காளையார் கோவிலுக்குச் செய்யும் தேர் அச்சு மரத்திற்காக இக் குருக்கள் பூசை செய்யும் கோயிலுக்கு எதிரில் உள்ள மருதமரத்தை வெட்டிவரச் சொன்னார். ஆள் சென்று வெட்டப்போகும்போது குருக்கள் போய், "அரசன்மேல் ஆணையாக வெட்டக் கூடாது" என்றார். வெட்டவந்த ஆட்கள் அரசரிடம் போய்ச் சொல்ல, அரசன் தம்படையுடன் புறப்பட்டு மரமுள்ள இடத்திற்கு வந்தார். வந்து குருக்களைக் கண்டு, "அரசன் ஆணையை மீறிய ஆணை உண்டா? என்றார். குருக்கள், "அரசனுடைய கோபத்திற்கு ஆளாகி விட்டோம்" தண்டனை அடையும் இந்த ஆபத்து சமயத்தில் தந்தை "வழிபடவந்த பிறரைக் கண்டபோது தாங்கள் இன்பமாகவாழ நான் பூசைசெய்து வருகிறேன்." என்று சொல்லிய தந்திரமொழியைத்தவிர வேறு மந்திரம் இல்லை என்று தெளிந்து, "மகாராஜாவே! தங்கள் ஆணைக்கு மீறிய ஆணை எந்த உலகிலும் இல்லை. இந்தமரம், பலமக்களுடைய தாபத்தைப் போக்கி அவர் உள்ளம் குளிரச்செய்து நிழலளித்து மகாராஜாவைப்போல் விளங்கி நிற்கின்றது. மேலும் இந்த அருமையான மரம் மகாராஜாவுடைய பெயரைத்தாங்கிக் கொண்டு நிற்கிறது. நிற்கும் இந்த மரம் தங்களை எந்நேரமும் ஞாபகப் படுத்துவதால் தங்கள் க்ஷேமத்தையே குறித்து இறைவனிடம்

எந்நேரமும் என் பிரார்த்தனை நடந்துகொண்டிருக்கிறது. இத் தன்மையுள்ளதை வெட்டலாமா?'' என்று குருக்கள் கூறி நிறுத்தினர். மருத பாண்டியர் கோபம் நீங்கி, என்மீதுள்ள உண்மை அன்பே என் பெயர் தாங்கிய மரத்தை வெட்டத் தடுக்கச் செய்தது; நீர் செய்தது சரியே! இம்மரத்தை வெட்ட வேண்டாம் என்று சொல்லிச் சென்றனர். பின் வரும் குறளிலும் இக்கருத்து உள்ளது.

**நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயினர் ஆதல் அரிது.** (28)

| | | |
|---|---|---|
| நுணங்கிய | = | நுட்பமாகிய |
| கேள்வியர் அல்லார் | = | கேட்டலால்வரும் அறிவுஇல்லாதவர் |
| வணங்கிய | = | பணிவைக் காட்டுகின்ற |
| வாயினராதல் | = | சொல்லை உடையவராகுதல் |
| அரிது | = | முடியாது. |

**கருத்து:** நுட்பமான கேள்வி அறிவுள்ளவர் பணிந்த மொழிகளைப் பேசுவர்.

**கேள்வி:** பணிந்தசொல்லையுடையவர் எவர்?

---

## அறிவுடைமை

### பகுத்தறிவுடையராய் இருத்தல்

பெண்ணாகடத்தில் வாழ்ந்துவந்த அச்சுத களப்பாளரின் புதல்வர் மெய்கண்டார். இவர்

இளமையிலேயே சகல கலைகளையும் கற்றுத் தம் மாணவர்களுக்குக் கோபம் செய்யக்கூடிய கொடுமையைப்பற்றி அறிவித்துக்கொண்டிருந்தார். அச்சமயம் இவர் குலகுருவாகிய அருணந்தி சிவாச்சாரியார் இவரைக் காணவந்தார். வருகையைக் கண்டும் இவர் எழுந்து மரியாதை செய்யாமையால் குலகுரு வெளியே நெடுநேரம் காத்திருந்தார். இவரும் மேலும் மேலும் பாடத்தையே சொல்லி வந்தார். தன் மாணவன் தனக்கு மரியாதை செய்யவில்லை என்ற கோபம் மூண்ட குரு பின் பாடம் சொல்லும் இடத்திற்குவந்து கோபம் என்றால் என்ன? அது எதுபற்றி நிகழும் என்ற கேள்விகளை மெய்கண்டாரைக் கேட்டார். பின்னால் வரும் கெடுதியை முன்னால் அறிந்து அது வராமல் தடுக்கும் நுட்ப அறிவுடையவர் மெய்கண்டார் ஆதலால் அவரை அக்கேள்விகள் ஒன்றும் அஞ்சும்படியான துன்பத்தைச் செய்யவில்லை. அதனால் அவர் பேசாது இருந்தனர்; பேசாதிருப்பதைக் கண்டு மேலும் பெரும் சத்தத்துடன்கேட்க மெய்கண்டார் அக்கேள்விகளுக்கெல்லாம் பதில் உம்மிடத்திலேயே இருக்கிறது என்றார். பின் தன்னைத்தான் அறிந்து பார்க்கத் தம்மிடத்தில் யாவும் உள்ளவற்றை அறிந்து, இத்தன்மையாக யாவும் விளங்க என் நிலையை எனக்கு அறிவித்த பெரியோரைக் கேள்வி கேட்டோமே! என்று அஞ்சி அவர்பாதத்தில் விழுந்து மாணவராகித் தமக்கும் உபதேசம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரும்

அவ்விதமே மாணவராக ஏற்றுக்கொண்டு அவர்க்கும் உபதேசம் செய்தார். பின்னால்வரும் கெடுதியை முன்னால் அறிந்து பேசாதிருந்ததால் குலகுரு கூறிய சொற்கள் எவையும் மெய்கண்டார் அஞ்சும்படியான துன்பத்தைச் செய்யவில்லை. பின்னால் வருவதை ஆராயாது கோபம்கொண்டு பேசியதால், அருணந்தி சிவாசாரியார் தாம் குலகுருவாய் இருந்தாலும் தம் குற்றத்திற்கு அஞ்சித் தம் மாணவர் என்று எண்ணியவர்க்குத்தாம் மாணவராக ஆனார். இதைக் குறளும் வற்புறுத்திச் சொல்கிறது.

**எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்.** (29)

| | | |
|---|---|---|
| எதிரது ஆக | = | இனி வரவிருக்கும் தீமையை முன்னதாக (அறிந்து) |
| காக்கும் | = | காக்கவல்ல |
| அறிவினார்க்கு | = | அறிவினை உடையவர்களுக்கு |
| அதிர | = | (அவர்) நடுங்கும்படி |
| வருவது ஓர் நோய் | = | வருவதாகிய ஒரு துன்பமும் |
| இல்லை | = | கிடையாது. |

**கருத்து:** பின்வரும் தீங்கும் முன்அறிந்து காத்துக் கொள்ளும் அறிவுள்ளவர்க்குத் துன்பம் இல்லை.

**கேள்வி:** யாதொரு துன்பமும் அடையாமல் வாழ்பவர் எவர்?

ஆ - ஆக என்பதின் விகாரம்.

## குற்றம் கடிதல்

### குற்றங்களைப் போக்குதல்

முதல் பராந்தகன் என்ற அநபாயன் சோழ நாட்டு மக்களிடம் மிகவும் அன்பாக நடந்து வந்தான்; தான் அரசன் என்ற கர்வம் இல்லாதவனாய் வாழ்ந்தான். இழிந்தசெயல் எதையும் தன்னிடம் உண்டாகாமல் தடுத்து வாழ்ந்தவன். இவைகளைக் கண்டு மக்கள் இவனிடம் அன்புகொண்டு நடந்தனர். இவன் மக்கள் அன்போடு அரசு செய்துவரும் காலத்தில் இராசசிம்ம பாண்டியனும், ஈழத்துக் காசியபனும், மண் ஆசையால் இவனிடம் கோபங் கொண்டு போருக்கு வந்தனர். "பராந்தகன் மீது சண்டைக்கு வந்தார்கள்" என்றதைக் கேட்டதும் மக்கள் யாவரும் திரண்டு கிளம்பிப் போர் செய்து இரு அரசர்களையும் வென்று அந்நாட்டைத் தம் மன்னனுக்கு அடிமை நாடாக ஆக்கித் தந்தனர். அங்குள்ள செல்வம் அனைத்தும் தம் அரசனுக்கு உரியதாக எடுத்துவந்து அளித்தனர். அளித்த பொன்னைப்பெற்ற சோழர், அப்பொன்னைச் சிதம்பரத்தில் உள்ள சிற்றம்பலத்தின் பொன் வேயும் பொருட்டு அளித்தார். இவ்விதம், அதிகார அகங்காரமும், கோபமும், இழிவான ஒழுக்கமும் இல்லாமல் அன்போடு உள்ள நமது அரசர் தமக்குக் கிடைத்த செல்வத்தை யாவரும் புகழும்படி சிற்றம்பலத்திற்கு அளித்ததைக் கண்டு உலகமக்கள் யாவரும் புகழ்ந்தனர்.

**செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து.** (30)

| | | |
|---|---|---|
| செருக்கும் | = | செல்வக் களிப்பும் |
| சினமும் | = | கோபமும் |
| சிறுமையும் | = | இழிவான நடத்தையும் |
| இல்லார் | = | இல்லாதவருடைய |
| பெருக்கம் | = | செல்வம் |
| பெருமிதநீர்த்து | = | யாவராலும் மதிக்கப்படும் தன்மையுடையது. |

**கருத்து:** மேன்மைக்குணமுடையவருடைய செல்வம் யாவராலும் மதிக்கப்படும்.

**கேள்வி:** எல்லாரும் மதிக்கப்படும் செல்வமுடையவர் எவர்?

---

## பெரியாரைத்துணைக்கோடல்

### பேரறிவுள்ள பெரியோரைத் துணையாகக்கொள்ளுதல்

சிவஞான சுவாமிகள் தாம் செய்த காஞ்சிப் புராணத்தை அரங்கேற்றக் காஞ்சீபுரம் சென்றனர். சென்றபொழுது தம்மாணுக்கரும் தம்மிலும் மிக்க அறிவு நுட்பமும் உடைய கச்சியப்ப முனிவரையும் அழைத்துச் சென்றனர். காஞ்சீபுரத்தில் ஒருபெரிய மண்டபத்தில் பலரும் கூடிய பொழுது சுவாமிகள் தாம்பாடிய பாடலைப் பாட ஆரம்பித்

தார்கள். இதை அறிந்த அவ்வூரில் உள்ளவர்கள் எவ்வளவோ கற்றவர்கள் இவ்வூரில் இருக்க, "வேறொருவர் பாடி இங்குவந்து அரங்கேற்றுவது சரியா! இவரது பாடலில் ஏதாவது குற்றம் கூறித் தடைசெய்ய வேண்டும்" என்று தேவாரம் மட்டும் பாடத்தெரியும் ஓதுவாரிடம் இதைச் சொல்ல அவரும் தடைசெய்வதற்கு உடன்பட்டு வந்திருந்தார். ஆரம்பித்த பாடலில் விநாயகர் வணக்கங்களாகிய முதல் இரண்டு பாட்டைப் பாடினார். பின் நடராசர் துதி பாடினார். அப்போது ஓதுவார், "படிப்பதை நிறுத்தும்; முத்திநகரங்கள் ஏழில் ஒன்றாகிய இந்தக் காஞ்சீபுரத்திற்குப் புராணம் பாடவந்த நீங்கள் சிதம்பரம் நடராசருக்கு எப்படித் துதி கூறலாம்? ஸ்ரீ ஏகாம்பரநாதர் துதியையல்லவா கூற வேண்டும்? எல்லாப் புராணங்களிலும் உள்ள அமைப்பைப் பாருங்கள்" என்றார். அப்போது சிவஞானமுனிவர் பலகாரணம் சொல்லியும் மேலும், மேலும் தடைகூறியே வந்தார். பக்கம் உள்ளவர்களும், "ஓதுவார் சொல்வதே சரி" என்றார்கள். இவ்விதண்டாவாதத்தைக் கச்சியப்பர் கவனித்தார் குருவினிடம் சிறிதுநேரம்பேச உத்தரவு பெற்றார்; ஓதுவாரை அழைத்துத் "தாங்கள் பேசியதால் சபையில் சத்தம் அதிகமாக இருக்கிறது. ஒரு தேவாரம் சொல்லவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். வேண்டுகோளுக் கிரங்கித் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, தன்னுடைய சாமர்த்தியம் வென்றுவிட்டது என்று சந்தோஷமேலீட்

டால் கம்பீரமான குரலில் "திருச்சிற்றம்பலம்" என்ருர். கச்சியப்பர் "நிறுத்தும் உம்மைக் காஞ்சீபுரம் தேவாரம் சொல்லச் சொன்ஞல் "திருவேகம்பம்" என்று சொல்லாமல் "திருச்சிற்றம்பலம் என்று ஏன் சொல்கிறீர்" என்று கேட்டார். ஓதுவார் தலை குனிந்தார்; "தான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினர். சபையில் உள்ள அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். காஞ்சிப்புராணமும் அரங்கேறியது. பின் சிவஞானசுவாமிகள், கச்சியப்பரைப் பார்த்து உமது பெருந்துணையால் வெற்றி பெற்றேன் என்று அவர் அறிவின் திறத்தைப் புகழ்ந்து பாராட்டினர். வள்ளுவரும், வியாபாரம் செய்பவர்க்கு முதல் பணம் இல்லாவிட்டால் பயனில்லை. அதுபோல் தம்மைத் தாங்கும் பெரியோர் இல்லாவிட்டால் கலங்காதுவாழும் வாழ்க்கை இல்லை என்று கூறினர்.

**முதல் இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை. (31)**

| | | |
|---|---|---|
| முதல் இலார்க்கு | = | முதற் பணம் இல்லாத வணிகருக்கு |
| ஊதியம் | = | அதனல் வருகின்ற லாபமானது |
| இல்லை | = | கிடையாது. |
| | அதுபோல | |
| மதலையாம் | = | தம்மைத் தாங்குபவராகிய |
| சார்பு இலார்க்கு | = | துணை இல்லாதவர்க்கு |
| நிலை இல்லை | = | (கலங்காதுநிற்கும்வாழ்க்கைத்) தன்மை இல்லை. |

கருத்து: பெரியோர் துணை இல்லாதவர்க்குக் கலங்காத வாழ்க்கைத்தன்மை இல்லை,

கேள்வி: கலங்காத வாழ்க்கைத்தன்மையை உடையவர் எவர்?

இப்பாடலில் உபமான உபமேயங்களாகத் தனித்தனி இரண்டு வாக்கியங்கள் வந்து நடுவில் "அதுபோல" என்ற சொல் மறைந்து வந்திருப்பதால் இப்பாடல் எடுத்துக் காட்டுவமை அணி.

மதலை = தூண். அது இங்கே தூணைப்போல் தாங்குவது என்ற பொருளை உணர்த்திற்று.

---

## சிற்றினம் சேராமை

### இழிந்தவர் கூட்டத்திற் சேராதிருத்தல்

எருக்கத்தம் புலியூருல் வாழ்ந்தவர் திருநீலகண்டயாழ்ப்பாணர். இவர் மனநலத்தால் இசைக் கல்வியைக் கற்று, அதை யாழில் அமைத்து இசைக்கும் வன்மையும் பெற்றார். சிவனது பாடலை யாழி விட்டு வாசிப்பதைக் கேட்டு அன்பர்கள் தரும் பொருளைக் கொண்டு காலங்கழித்து வந்தார். இவருக்கு மனநலம் இவ்வித செல்வத்தை அளித்தாலும், தாம், "மேலும் புகழ்பெற வேண்டும்" என்று ஆசைப்பட்டுத் திருஞான சம்பந்தரின் அடியவ

வராகி, அவர் பாடலை யாழில் அமைத்துப் பாடும் இன நலத்தைப் பெற்றதால் இவர் பெரும் புகழ் அடைந்தார்.

**மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.** (32)

| | | |
|---|---|---|
| மன் உயிக்கு | = | நிலைபெற்ற உயிர்களுக்கு |
| மனநலம் | = | நெஞ்சினது நன்மையானது |
| ஆக்கம் (தரும்) | = | செல்வத்தைக் கொடுக்கும் |
| இனம் நலம் | = | இனத்தினது நன்மையானது |
| எல்லாப்புகழும் | = | அதனோடு எல்லாப் புகழையும் |
| தரும் | = | கொடுக்கும். |

**கருத்து:** மனநன்மை செல்வத்தையும், இனநன்மை புகழையும் தரும்.

**கேள்வி:** மக்களுக்கு மனநலமும் இனநலமும் அளிப்பன எவை?

---

## தெரிந்து செயல்வகை

### காரியங்களை ஆராய்ந்துசெய்யும் திறமை

முடிக்கும் உபாயங்களை ஆராயாது தம்மனவூக்கத்தால் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்

பொறை என்பவன் தன் படையுடன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு போர் செய்ய வந்தான். இப்போரில் செழியன் இரும் பொறையைப் பிடித்துத் தன் சிறையில் அடைத் தான். இரும்பொறையின் வீரர்கள் பலர் இருந்து முயன்றும் அவனைக் காக்க முடியவில்லை. அவன் குற்றம் செய்தவர் அடையும் சிறைவாசத் துன்பத் தையும் அடைந்தான்.

**ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.** **(33)**

| | | |
|---|---|---|
| ஆற்றின் | = | முடியும் உபாயத்தால் |
| வருந்தா | = | (கருமத்தை) முயலாத |
| வருத்தம் | = | முயற்சியானது |
| பலர்நின்று | = | (துணைவர்) பலர்நின்று |
| போற்றினும் | = | (கெடுதியுண்டாகாதபடி) பாது காத் தாலும் |
| பொத்துப்படும் | — | குற்றப்படும். |

**கருத்து:** முடியும் உபாயத்தால் முயலாத முயற்சி பலர் பாதுகாத்தாலும் குற்றமுடையதாகும்.

**கேள்வி:** பலர்நின்று போற்றினும் பொத்துப்படுவது எது?

# வலி அறிதல்

## அரசன் வினைவலிமை, தன்வலிமை, பகைவன்வலிமை, துணைவலிமை ஆகிய நால்வகை வல்லமைகளையும் அறிதல்

*நமது சென்னை அரசாங்கம் மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இதனால் பொருள் வருவாய் சுருங்கியது. குறைந்தாலும் பேரறிவுள்ள நம் அமைச்சர்கள் அதற்கேற்ற முறையில் சில செலவுகளைக் குறைத்துக் கொண்டார்கள். இதனால் நமது அரசியல் எவ்வித குறையும் இல்லாமல் நடந்து வருகிறது.*

**ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை.** (34)

| | | |
|---|---|---|
| *ஆகு ஆறு* | = | *(அரசனுக்குப் பொருள்) வருகின்ற வழி* |
| *அளவு இட்டிதாயினும்* | = | *அளவு மிகச் சிறியதாய் இருந்தாலும்* |
| *போகு ஆறு (அளவு)* | — | *செலவாகின்ற வழியின் (அளவு)* |
| *அகலாக்கடை* | = | *அதனில் அதிகப்படா விட்டால்* |
| *கேடு இல்லை* | = | *அதனால் வரும் துன்பம் இல்லை.* |

**கருத்து:** *அரசனுக்குப் பொருள்வரும்வழி குறைவாக இருந்தாலும் செலவுமிகாவிடில் கெடுதியில்லை.*

**கேள்வி:** வருவாய் சுருங்கிய அரசன் யாதுசெய்தல் வேண்டும்?

## காலமறிதல்

அரசன் பகைவர்மேற் செல்லுதற்கு ஏற்ற பொழுதை அறிதல்

*ஆழ்ந்த அகழிகளையும், ஆகாயம்வரை உயர்ந்த மதிலையும் உடைய கானப்பேர் எயில் என்ற ஊரை அரசுபுரிந்தவன் வேங்கை மார்பன். இவன் பாண்டியன் வலிமை அறியாது பாண்டியன் உக்கிரப் பெருவழுதியைப் போருக்கு அழைத்தான். அவன் சிறு இடத்தை உடைய இவன் போருக்கு அழைப்பதால் இவனிடம் உள்ள வலிமை யாதோ? என்று அவ்வலிமை தெரியும் காலம் வரை போரில் வல்ல ஆடு, பகை ஆட்டின்மேல் நன்றாகப் பாய்வதற்குக் காலைப் பின்னே வாங்குவதைப்போலப் பேசாதிருந்து ஒற்றரைக்கொண்டு வல்லமை யாவற்றையும் அறிந்து போர் செய்து கானப்பேரெயிலையும், ஊரையும் தன் வசமாக்கி வேங்கைமார்பனைத் தோற்று ஓடச்செய்தான். வள்ளுவரும், "மனக்கிளர்ச்சி உடையவன், தன் பகைவர்மேல் செல்லாமல் தக்க காலத்தை நோக்கி ஒதுங்கி இருக்கும் இருப்பு போரில் வல்ல ஆடு, பகையாட்டின்மேல் பாயக் காலைப் பின் வாங்குதலைப் போன்றதாகும்" என்று கூறியுள்ளார்.*

**ஊக்கம் உடையான் ஒடுக்கம்; பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து.** (35)

ஊக்கம் உடையான் = மிக்க மனக்கிளர்ச்சி உடைய அரசன்
ஒடுக்கம் = (பகை மேற் செல்லாது) காலம் பார்த்திருக்கின்ற இருப்பு
பொருதகர் = சண்டை செய்கின்ற ஆட்டுக்கடா
தாக்கற்கு = (தன்பகை அழியும்படி) பாய்தற்பொருட்டு
பேருந்தகைத்து = பின்னே கால் வாங்குந்தன்மையை உடையது.

**கருத்து:** வலிமையுள்ள அரசன் பின் வாங்குதல் பகை வெல்லும் காலம் அறிவதற்கே ஆகும்;

**கேள்வி:** ஊக்கமுடைய அரசன் ஒடுங்குவதின் காரணம் என்ன?

## இடனறிதல்

### வெல்வதற்கு ஏற்ற இடத்தை அறிதல்

நரசிம்மவர்மன் படைத்தலைவர் பரஞ்சோதியார் என்ற பட்டம்பெற்ற சிறுத்தொண்டர் ஆவார். இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். தந்திரத்தில் சிறந்த அறிவு பெற்றவர்; புலிகேசி ஹர்ஷரைத் தோற்கடித்தவன்; இவன் பல்லவ நாட்டின் மீது படைஎடுத்து வந்தான். வந்தவனைத் தென்கரையில் உள்ள காவிரி வரை போகும்படி செல்லவிட்டுப் பின் திரும்பித் தலைநகராகிய காஞ்சி வந்தபொழுது திடீர் என்று பெரும்படையுடன் தாக்கினர். அச்சமயம் மணிமங்கலம், சூரமாரம் என்ற இடத்திலும் தாக்க ஆரம்பித்தனர்.

இவற்ருல் பெரும்படைகள் சிதறி அங்கும் இங்கும் ஓடலாயின. இவ்விதம் பெரும்படைகள் சிதறுண்டதால் புலிகேசி தன் வலிமை குன்றி ஓடலாஞன். அவன் பின்னே சிறுத்தொண்டர் ஓடி அவன் நகரான வாதாபினயக் கைக்கொண்டு அங்குள்ள செல்வம் யாவற்றையும் கவர்ந்து வந்தார். இவ்விதம் பெரும் படையையும் மிக்க பலமுமுடைய அரசராயினும் அவரை வெல்வதற்கு உபாயமான இடத்தை அறிந்து போர் செய்ததால் வலிமை குறைந்த பல்லவன் வலிமை யுடையவனைப் புலிகேசியை வென்ருன்.

**ஆற்ருரும் ஆற்றி அடுப; இடனறிந்து**
**போற்ருர்கண் போற்றிச் செயின்** (36)

| | | |
|---|---|---|
| இடன் அறிந்து | = | (வெல்வதற்கு ஏற்ற) இடத்தினை அறிந்து |
| போற்றி | = | தம்மைக் காத்து |
| போற்ருர் கண் | = | பகைவரிடத்து |
| செயின் | = | தொழிலைச் செய்தால் |
| ஆற்ருரும் | = | வலிமையில்லாதவரும் |
| ஆற்றி | = | வலிமையுடையவராய் |
| அடுப | = | (பகைவரை) வெல்வார். |

**கருத்து:** வலிமையில்லாத அரசரும் இடமறிந்து போர் செய்வாராகில் வெல்லுவார்.

**கேள்வி:** வல்லமை யுள்ளவரை வெல்லக் கருதும் வலிமை இல்லாதவர் எதை ஆராய்தல் வேண்டும்?

# தெரிந்து தெளிதல்

## ஆராய்ந்து நம்புதல்

பரணர் சேரநாட்டை ஆண்ட செங்குட்டுவனைக் கண்டு அவன் நட்பைப் பெற்றார். புலவர் பரந்த சிந்தையும், விரிந்த நோக்கமுங்கொண்டு செங்குட்டு வனைப் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடிப் பரிசு பெற்றார். சேரன் இக்கவிஞரது குடிப்பிறப்பின் உயர்வையும், குற்றங்களிலிருந்து விலகி, பழி வருமோ என்று பயந்து நடக்கும் நாணமுடைமை யும் கண்டு தெளிந்து தன் புதல்வனை இவரிடமே இருந்து கல்வி கற்கும்படி செய்தான்.

**குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு.** (37)

| | | |
|---|---|---|
| குடிப்பிறந்து | = | உயர்ந்த குலத்தில் பிறந்து |
| குற்றத்தின் | = | தவறுகளினின்றும் |
| நீங்கி | = | விலகி |
| வடுப்பரியும் | = | நமக்குப் பழி வருமோ என்று அஞ்சி நிற்கும் |
| நாணுடையான் கட்டே | = | நாணமுடையவன் இடத்திலே |
| தெளிவு | = | (அரசனது) நம்பிக்கை (உண்டாக வேண்டும்) |

**கருத்து:** குலப்பிறப்போடு குற்றம் நீங்கிப் பழி வருமோ என அஞ்சும் நாணமுடையவனை அரசன் நம்பக் கடவன்.

**கேள்வி:** எவற்றை யுடையவன் அரசன் நம்பிக்கைக்கு உரியவன் ஆவான்?

---

## தெரிந்து வினையாடல்

### அவரவர் திறத்தை ஆராய்ந்து காரியங்களில் செலுத்துதல்

சாளுக்கிய நாட்டுப் புலிகேசியை வென்ற பல்லவன் தமிழ்நாட்டுப் பாண்டியரையும் வெல்ல எண்ணித் தன்னிடம் அன்புள்ள ஒரு வீரனைப் படையுடன் அனுப்பினான், அவனுக்கும் நெடுமாறனுக்கும் "சங்கரமங்கை" என்னும் இடத்தில் போர் நடந்தது. நெடுமாறன் சிறந்த போர்வீரன். ஆகையால் நரசிம்மவர்மன் தன் மீது அனுப்பிய படையைத் தோற்கடித்து ஓடச் செய்தான். இதை அறிந்த பல்லவன், தொழில் செய்யும் உபாயங்களை அறிந்து முடிப்பவனுக்கு அல்லாமல் நம்மிடம் அன்புடையவன் என்று இவனை அனுப்பியது தவறு என்பதை அறிந்து, புலிகேசியை வென்ற சிறுத் தொண்டரை வென்று வரும்படி அனுப்பினான். அவர் சோழனையும், பாண்டியனையும் தோற்கடித்து அவர்கள் நாட்டிற்கு அப்பால் ஓடி ஒளிந்து கொள்ளும்படிச்செய்து வந்தார். இவ்விதம் மேற்கொண்ட தொழிலை முடிக்கும் வல்லமையுடையவனிடமே காரியங்களை ஒப்படைக்கும் பொறுப்புப் பல்லவனுக்கு இதுமுதல் தோன்றியது.

**அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்**
**சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று. (38)**

| | | |
|---|---|---|
| வினை அறிந்து | = | (தொழில் செய்யும் உபாயங்களை) அறிந்து |
| ஆற்றி | = | (அதைச் செய்யும்போது செயலாலும், இடையூறுகளாலும் வரும் துன்பங்களைப்) பொறுத்து |
| செய்கிற் பாற்கு | = | (எடுத்தகாரியத்தை முடிக்கும்) வல்லமையுடையவர்க்கு |
| அல்லால் | = | அல்லாமல் |
| சிறந்தான் என்று | = | இவன் நம்மிடம் அன்புடையவன் (ஆதலால் இதை இவனிடம் ஒப்புவிக்கலாம்) என்று |
| ஏவல் பாற்றன்று | | (வேறொருவனை) அத்தொழிலுக்கு ஏவுதல் தக்கது அன்று. |

**கருத்து:** மேற்கொண்ட தொழிலை முடிக்கும் வல்லமையுடையவனிடமே காரியங்களை ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்வி:** சிறந்தான் என்று எதை ஏவுதல்கூடாது? ஏன்?

---

# செங்கோன்மை

## அரசனால் செய்யப்படும் நீதியின் தன்மை

சேரநாட்டுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு மேற்கே சென்ற கப்பல்களையும், மேற்கு நாடுகளிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு முசிறி, தொண்டி என்ற துறைமுகங்களை நோக்கி வந்த கப்பல்களையும் "கடற்கடம்பர்" என்பவர்கள் வழி

மறித்துக் கொள்ளை அடித்து வந்தனர். இதனால் சேரநாட்டுக் கடல் வாணிகம் தடைப்பட்டு நின்றது. இதை அறிந்த செங்குட்டுவன் அவர்களைத் தாக்கச் சென்றான். இவன் வருகை தெரியாது அக்கள்வர்கள் களிப்புடன் இருந்தார்கள். செங்குட்டுவன் திடீரெனச் சென்று அவர்களைச் சிறைப்படுத்தி அத்தீவுகளை நாசமாக்கினான். அங்கிருந்த படகையும் செல்வங்களையும் எடுத்து வந்தான். இதனால் அயல் நாட்டு வணிகரும், தமிழ் நாட்டு வணிகரும் வாயார வாழ்த்தினர். மேலும் தன் நாட்டு மக்களையும் பாதுகாத்து அவர்களிடம் அன்புகொண்டு அரசு செய்தான்.

**குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்.** (39)

| | |
|---|---|
| குடி | = தன் கீழ்வாழும் மக்களை |
| புறங்காத்து | = பிறர் வருந்தா வண்ணம் பாதுகாத்து |
| ஓம்பி | = (தானும் துன்பம் செய்யாமல்) அன்பு கொண்டு |
| குற்றம் | = (அம்மக்களிடத்தில்) குற்றம் உண்டானால் |
| கடிதல் | = அக்குற்றத்தைத் தண்டனையால் ஒழித்தல் |
| வேந்தன் தொழில் | = அரசனது கடமையாகும் |
| வடு அன்று | = பழி அல்ல. |

**கருத்து:** குடிமக்களைப் பாதுகாத்து அவர்களிடத்திலுள்ள குற்றங்களைப் போக்கி ஆளுதல் அரசன் கடமை ஆகும்.

**கேள்வி:** அரசனுக்குரிய முக்கிய கடமைகள் எவை?

# கொடுங் கோன்மை

## நடுவு நிலைமை இல்லாமல் ஆளும் அரசின் தன்மை

செங்குட்டுவன் தாய், சோழன் மகளாகிய நற்சோணை. இவளது சகோதரனான சோழன் அரசனாகச் சோழநாட்டை ஆண்டுவந்தவன் இறந்தான். இறந்த சோழன் மகன் இளமைப்பருவம் உடையவன். இவன் பெயர் நெடுமுடிக்கிள்ளி. இவன் முடிசூட்டிக்கொள்ள வேண்டும். இந்தச் சமயத்தில் சோழ அரச மரபினர் ஒன்பதுபேர் சோழநாட்டில் கலகம் செய்து "கள்வன் அம்புடனிருந்து வழிச் செல்பவர் பொருளைப் பறிப்பதுபோல" மக்களைத் துன்புறுத்தி அவர்களிடம் பொருள்களை அடித்துப் பறித்தனர். இவ்விளஞ் சோழனை அடித்துத் துரத்தினர். இவர்களுக்குப் பயந்து நெடுமுடிக் கிள்ளி சேரநாட்டிற்கு ஓடி அத்தைமகனான செங்குட்டுவனிடம் குறையைச் சொல்ல அவன் பெரும் படையுடன் சோழநாட்டில் நுழைந்தான். சோழ அரசமரபினர் ஒன்பது பேரும் செய்த துன்பம் தாங்காமையால் சோழமக்கள் அனைவரும் செங்குட்டுவன் பக்கம் சேர்ந்தனர். இவரோடு அரச விசுவாசமுடைய சோழர்படையும் சேர்ந்தது. செங்குட்டுவன், கலகம் விளைத்த ஒன்பது பேரையும் உறையூருக்குத்தெற்கே உள்ள "நேரி வாயில்" என்னும் இடத்தில் சண்டை செய்து அழித்தான். தன் மைத்துனச் சோழனான நெடுமுடிக்கிள்ளியை அரி ஆசனத்தில் அமர்த்தி முடிசூட்டினான். பின்னும்

கண்ணை இமைகாப்பதுபோலச் சோழனைக்காத்து வந்தான். இவ்விதம் கொடுமை செய்யும் அரசர் விரைவில் அழிவர் என்று வள்ளுவரும் கூறினர்.

**வேலொடு நின்றான் இடுவென்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு.** (40)

| | |
|---|---|
| கோலொடு | = தண்டித்தல் தொழிலோடு |
| நின்றான் | = நின்ற அரசன் |
| இரவு | = (குடிகளிடம் மிக்க பொருளைக்) கேட்டுப் பெறுதல் |
| வேலொடு நின்றான் | = (வழிப்பறி செய்யு மிடத்துத் தனியே) வேல்கொண்டு நின்ற கள்வன் |
| இடு | = (வழிச்செல்வோனைத் தடுத்து உன் கையில் உள்ள பொருளைத்) தா |
| என்றதுபோலும் | = என்று வற்புறுத்திவாங்குதலைப் போன்றதாகும். |

**கருத்து:** மிக்க பொருளை விரும்பி வாங்கும் மன்னன் வழிப்பறி கள்வனுக்கு ஒப்பாவான்.

**கேள்வி:** இடுஎன்று வேலொடு நிற்கும் அரசன் எவர்க்கு ஒப்பாவான்?

---

## வெருவந்தசெய்யாமை

### பிறர் அஞ்சத்தக்க காரியங்களைச் செய்யாதுவிடல்

"பெருங்குன்றூர் கிழார்" என்ற புலவர் தம் வறுமை நீங்கப் பரிசிலை விரும்பிச் சேரமான் குடக்

கோச் சேரலிரும்பொறையிடம் சென்று தம் வருகையை அறிவித்தார். சேரன் தனக்குப் பேசுதற்குரிய சமயம் இல்லை என்று கொடுமையான பார்வையுள்ள முகத்துடன் கூறினன். அப்போது புலவர், அறமில்லாத பார்வையுடனேகூடி நும் போல்வார் யாவரும் இதற்கொத்த அறிவையுடையவராய் அருள் மாறுவாராயின் எம்போல்வார் இவ்வுலகத்துப் பிறவாதொழியக் கடவர் என்ருர். இதனல் உன் செல்வம் பேயால் காணப்பட்டுக் காக்கும் செல்வதிற்கு ஒப்பாம் என்ற கருத்தை அடக்கிக் கூறிச் சென்ருர். வள்ளுவரும், "காண்பதற்கு முடியாதவனும் கடுகடுத்த முகத்தையும் உடையவனது செல்வம் பேயின் கையில் உள்ள செல்வம் போல் எவர்க்கும் பயன்படாது" என்று கூறியுள்ளார்.

**அருஞ்செவ்வி இன்னுமுகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய்கண் டன்ன துடைத்து. (41)**

| | | |
|---|---|---|
| அரும் செவ்வி | = | தன்னைக் காணவேண்டும் என்பவர்க்கு அரியதாகிய காலத்தையும் |
| இன்னுமுகத்தான் | = | கண்டால் இனிமை இல்லாத கடுகடுத்த முகத்தையும் உடையவனது |
| பெருஞ் செல்வம் | = | மிக்கபொருள் |
| பேய் | = | பேயால் |
| கண்டு அன்னது | = | காணப்பட்டது போன்றதொரு குற்றம் |
| உடைத்து | = | உள்ளதாகும் |

**கருத்து:** எளிதில் காணக்கூடாதவனாகவும், கடிய முகத்தையுடையவனாகவும் இருக்கும் அரசனது செல்வம் பேயின் கையில் உள்ள செல்வம்போல் எவர்க்கும் பயனில்லை.

**கேள்வி:** எத்தகைய அரசனது செல்வம் எவர்க்கும் பயன் அளித்தல் இல்லை?

பேஎய். உயிரளபெடை.

---

## கண்ணோட்டம்

### வேண்டியவர்களைக்கண்டால் அவர்சொன்னதை மறுக்க முடியாமை

தசரதன், கைகேயிக்குக் கொடுத்த இரண்டு வரங்களில் ஒன்றால் பரதன் அரசாளவேண்டும், மற்றொன்றால் இராமன் காட்டிற்குச் செல்லவேண்டும், என்று இரண்டு வரத்தையும் கேட்டாள். அந்தத் தசரதன், பரதன் அயோத்தியை ஆளட்டும், ஆனால் இராமன் காட்டிற்குச் செல்வதை விட்டு வேறு வரம்கேள் தருகிறேன்'' என்றான். "நான் கேட்டபடி தராவிட்டால் எனக்கு வரமே வேண்டாம்'' என்று அழுதாள். இவ்வழுகையைக் கண்ட அயோத்தி மன்னன், "கண்ணோடிருந்தும், கருணையில்லாத இவள் மரத்திற்கு ஒப்பாக இருக்கிறாள் இவளோடு வாழ்தலைக் காட்டிலும் வாழாமையே

நன்று'' என்று தன் உயிரை விட்டான். வள்ளுவரும், "கருணையில்லாதவர் மரத்திற்குச் சமம் ஆவர்'' என்று இக்குறளில் கூறியுள்ளார்.

**மண்ணோடு இயைந்த மரத்தனையர்; கண்ணோடு இயைந்து கண்ஓடா தவர்.** **(42)**

| | |
|---|---|
| கண்ணோடு | = (இரக்கத்தோடு பார்த்தற் குரிய) விழியோடு |
| இயைந்து | = பொருந்தி இருந்தும் |
| கண் ஓடாதவர் | = அவ்விரக்கம் இல்லாதவர் |
| மண்ணோடு | = (நடமாட்டமுடையவராய் இருந்தும்) மண்ணுடனே |
| இயைந்த | = பொருந்தி நின்ற |
| மரத்து அனையர் | = மரத்தை ஒப்பார். |

**கருத்து:** இரக்கமில்லாதவர் மரத்திற்கு ஒப்பாவர்.

**கேள்வி:** கண்ஓட்ட மில்லாதவர் எதற்கு ஒப்பாவர்?

---

## ஒற்றாடல்

பிறரிடம் நிகழ்வனவற்றை மறைவாக அறிந்து சொல்லும் ஒற்றரை ஆளுதல்.

இளந்தத்தன் என்ற புலவன் உறையூரைக் காணச்சென்றான். தனது வருகையை விசாரித்தவரிடம், "தான் சோழன் நலங்கிள்ளி ஆளும் ஆளு

ரில் இருந்துவருகிறேன்" என்ருன். இதைக்கேட்டு விசாரித்தவர்கள் இவன், "நலங்கிள்ளியிடம் இருந்து ஒற்றுவந்தான்" என்று நெடுங்கிள்ளி இடம் விட்டார்கள். நெடுங்கிள்ளியும் அவ்விதமே ஒற்றனை எண்ணிக் கொலை செய்ய உத்தரவளித்தான். இதைக்கேட்ட கோவூர்கிழார். சோழ அரசனிடம் சென்று அரசே! இவன் ஒற்றன் அல்லன்; ஒற்றர் இலக்கணம், பிறர் சந்தேகம் கொள்ளாத வடிவம் பொருந்தி, மற்றவர் தம்மைக் கோபித்துப் பார்த்தாலும் அவர்பார்வைக்குப் பயப்படாமல் உறுதியாய் நின்று மற்றவர் எவரிடத்தும் தன்மனதில் உள்ளவற்றை வெளிப்படுத்தாமல் இருக்கும் தன்மை ஆகும். இவ்விலக்கணத்தில் ஒன்றும் அறியாத இவனை ஒற்றன் என்று கொல்வது பழி ஆகும் என்ருர். இவர்சொல்லைக் கேட்டு இளந்தத்தனைக் கொல்லாது விட்டான். வள்ளுவரும், குறளில் இக் கருத்தைக்கூறியுள்ளனர்.

**கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்**
**உகாஅமை வல்லதே ஒற்று.** (43)

| | | |
|---|---|---|
| கடா | = | (கண்டவர்கள்) சந்தேகப்படாத |
| உருவொடு | = | வடிவோடு பொருந்தி |
| கண் அஞ்சாது | = | அவர் சந்தேகித்து அறியத் தொடங்கிஞல் கோபித்துப் பார்க்கின்ற அவர்) கண்ணிற்குப் பயப்படாமல் நின்று |
| யாண்டும் | = | சாம, பேத, தான, தண்டம், ஆகிய நான்கு உபாயங்களும் செய்தாலும் |

உகாமை = மனதில் உள்ளவைகளை வெளிப்படுத்தாமையில்
வல்லது வல்லவனே
ஒற்று = ஒற்றனுவான்.

**கருத்து:** பிறர் சந்தேகப்படாத வடிவத்தோடு கூடி அஞ்சாமல் பிறர் என்னசெய்தாலும் தன்மனதில் உள்ளவைகளைச் சொல்லாதவனே ஒற்றன் ஆவான்.

**கேள்வி:** சிறந்த ஒற்றனுக்கு அமைய வேண்டிய குணங்கள் எவை?

**இலக்கணம்:** 'கடாஅ - உகாஅ - உயிரளபெடை.

---

## ஊக்கமுடைமை

### மனதில் சோர்வற்ற கிளர்ச்சி உண்டாதல்

17-ம் நூற்றுண்டில் காசியை ஆண்ட முகம்மதிய அரசர், குமரகுருபரர் நேரில் சென்றுபார்க்க அவரை மதிக்கவில்லை. அதனுல் தம்மனத்தை அழித்து விடாமல் உள்ளம் ஊக்கம் கொள்ள, காளிதேவியையும், கலைமகளையும் வேண்டினுர். கலைமகள் அருளால் இந்துஸ்தான் மொழியை ஓதாதுணர்ந்தார். காளிதேவியின் அருளால் சிங்கத்தின் மீது ஏறிச்சென்று அவ்வரசன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி, அரசனது நட்பைப்

பெற்றார். நட்பின் உதவியால் சைவம் தழைக்கும் படி, சுவாமிகள் குமாரசுவாமிகள் மடமும், கேதாரேசுவரர் ஆலயமும் கட்டினார்கள். இவ்விதம் சைவ வளர்ச்சிப் பெருகும்படி செய்தது இவரின் மன ஊக்கமே ஆகும். இதைப் பின் வரும் குறளும் அறிவிக்கிறது.

**உள்ளம் இலாதவர் எய்தார் ; உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு.** (44)

| | | |
|---|---|---|
| *உள்ளம் இலாதவர்* | = | *மன ஊக்கம் இல்லாதவர்* |
| *உலகத்து* | = | *இவ்வுலகத்தாருள்* |
| *வள்ளியம் என்னும்* | = | *யாம் கொடுத்தலை உடையோம் என்கின்ற* |
| *செருக்கு* | = | *கர்வத்தை* |
| *எய்தார்* | = | *அடையார்.* |

**கருத்துரை:** *ஊக்கமில்லாத அரசர் கொடுத்தல் குணம் இல்லாதவர் ஆவார்.*

**கேள்வி:** வள்ளியம் என்னும் செருக்கை அடைபவர் எவர் ?

**விளக்கம்:** ஊக்கத்தினால் முயற்சியும், முயற்சியால், பொருளும், பொருளால் கொடையும், கொடையால் செருக்கும் முறையே வளருமாதலால் ஊக்கம் இல்லாமற் போனால் மற்றவையும் இலவாம்.

---

# ஆள்வினையுடைமை

## விடாமுயற்சியை உடையவன் ஆதல்

விதர்ப்பநாட்டு வீமன், "தன்மகளாகிய தமயந்திக்குச் சுயம்வரம்" என்று அனைவருக்கும் ஓலை அனுப்பி எல்லா அரசரையும் அழைத்தான். அனைவரும் வந்து சேர்ந்தனர்; தேவர்களும் வந்தனர். தமயந்திக்கு நளன்மேல் விருப்பம் என்று வந்த நான்கு தேவர்களும் நளன் வடிவம் கொண்டு மண்டபத்தில் இருந்தனர். தமயந்தி மாலையை எடுத்து வந்தாள். பார்க்கும்போது ஐந்து நளனைக் கண்டாள். உண்மை நளன் யார் என்று விளங்கவில்லை. தன் விதியை நொந்தாள். வருந்தினாள். முயற்சிக்கு விதியும் தோற்கும் என்ற பெரியார் வாக்கை நினைந்து முயற்சி செய்து பார்த்தாள். நால்வர் கால் நிலத்தில் படவில்லை. கண் இமைக்கவில்லை. ஆகிய இவற்றை முயற்சியாகப் பார்த்ததில் அறிந்தாள். ஐந்தாவதாக உள்ள நளன்கால் பூமியில்பட்டது. கண் மூடித்திறந்தது. மாலை வாடியிருந்தது. இவற்றைக்கண்டு இவனே உண்மை நளன் என்று மாலை சூட்டி மகிழ்ந்தாள். நளன் உருவுடன் வந்த தெய்வத் தன்மையுள்ள தேவர்களும், "முயற்சித் தெய்வத்தால் நாம் தோல்வியடைந்தோம்" என்று வருந்திச் சென்றனர். இக்கருத்து, குறளிலும் உள்ளது.

**பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி. (45)**

| | | |
|---|---|---|
| *பொறியின்மை* | = | *பயனைத்தருவதாகிய விதி இல்லாமை* |
| *யார்க்கும்* | = | *எப்படிப் பட்டவருக்கும்* |
| *பழி அன்று* | = | *தீமை ஆகாது.* |
| *அறிவு அறிந்து* | = | *அறியவேண்டியவைகளைத் தெரிந்து* |
| *ஆள்வினை இன்மை* | = | *ஆளும் திறத்தோடு தொழில் செய்யாமையே* |
| *பழி* | = | *தீமை ஆகும்.* |

**கருத்து:** *விதியில்லாமை யாவர்க்கும் பழி ஆகாது; முயற்சி இல்லாமை பழி ஆகும்.*

**கேள்வி:** *நல்விதி இல்லாரையும் வெற்றிபெறச் செய்வது எது?*

---

## இடுக்கண் அழியாமை

### துன்பம்வந்த இடத்தும் மனங்கலங்காமை

*எவ்விதகுறையும் இல்லாமல் பலவகை இன்பங்களும் நிறைந்த நிடதநாட்டு வேந்தன் நளனைப் பற்றினல் நெடிதுநாள் வாழலாம் என்று துன்பம் என்னும் கொடியோன் எண்ணி அவனை அடைந்தான். அவன் நாடுஇழந்து காடுவந்தான். மனைவி, மக்கள், கட்டிய ஆடை அனைத்தையும் இழந்தான். பாம்புகடித்து, உடல் கருமையாகி, உயிர் இருந்தது.*

அயோத்தி நகரை அடைந்தான். பசிப்பிணி மேலும் மேலும் துன்பம் செய்யத் தான் துன்பக் கொடியோனுக்கு இடங்கொடுக்காமல் சமையல் தொழில் செய்பவன் ஆனான். பின் இருதுபன்ன னுக்குக் குதிரையோட்டும் தொழிலையும் செய்தான். இவற்றைக் கண்ட துன்பக்கொடியோன் தடை நேர்ந்தபொழுது எல்லாம், வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப்போல தொழிலைப் பலவழிகளி லும் செய்யத்தகுந்த இவனை அடைதல்கூடாது என்று வெறுத்து விலகினான். பின் தானும் தன் மனைவிமக்களுடன் கூடித் தன் நகரை அடைந்து இன்பமாக வாழ்ந்தான்.

**மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.** (46)

| | | |
|---|---|---|
| மடுத்தவாய்எல்லாம் | = | நன்றாகச் செல்லத் தடைபட்ட இடங் களில் எல்லாம் |
| பகடு அன்னான் | = | (வண்டியை இழுத்துச் செல்லும்) எருது போலத் தொழிலைப் பல விதங்களில் நடத்த வல்லவனை |
| உற்ற இடுக்கண் | = | அடைந்த துன்பமானது |
| இடர்ப்பாடு | = | (தானே) துன்பப்படுதலை |
| உடைத்து | = | உடையது ஆகும். |

**கருத்து:** தொழில்செய்யவல்லவனை அடைந்த துன்ப மானது தானே துன்பப்படும்.

**கேள்வி:** எவரை அடைந்த துன்பம் துன்பப்படும்?

# அங்கவியல்

## அமைச்சு

### மந்திரியின் குணம் செயல்கள்

பசுவின் கன்றைத் தேர்ச்சக்கரத்தில் இட்டுக் கொன்ற குற்றத்திற்காகத் தன்மகன் வீதிவிடங்கனை மனுவேந்தன் தேர்ச்சக்கரத்தில் இட்டு அவ்விதமே கொல்லும்படியாக அமைச்சனுக்குக் கட்டளையிட்டான். “அரசன், நீதிநூல் வழியின்படி சொல்கிறான்; உலகத்து இயற்கையை அறியாமல் நமக்குக் கொடுத்த உத்தரவை நாம் நிறைவேற்றினால் நம்மை உலகம் பழிக்கும்; அவ்விதம் பழிப்பை அடைவதைவிட நாமே இறந்துவிடுதல் நல்லது” என்று தன்னுயிரை மாய்த்துக்கொண்டான். பின் அரசன் அவ்விதமே செய்ய நீதிக்கடவுள், மகன் கன்று இவர்களைப் பிழைப்பித்து, உலகமுறை மாறிச்செய்ய மனம் இல்லாது, இறந்த மந்திரியையும் எழுப்பினார். வள்ளுவரும் நீதிநூலை அறிந்தாலும், “உலகத்தில் அப்பொழுது நடக்கும் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்த மந்திரிகள் நடத்தல் வேண்டும் என்று” கூறியுள்ளார்.

**செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.** (47)

| | | |
|---|---|---|
| செயற்கை | = | (நீதி நூல்களில் சொன்ன வழியால்) தொழில் செய்யும் திறங்களை |
| அறிந்தக் கடைத்தும் | = | அறிந்த விடத்தும் |
| உலகத்து | = | உலகத்தில் |
| இயற்கை | = | (அப்பொழுது நடக்கின்ற) இயற்கை |
| அறிந்து | = | தெரிந்து |
| செயல் | = | (அதனோடு பொருந்தச்) செய்க |

**கருத்து:** நீதிநூலுக்கும், உலக இயற்கைக்கும் தக்க வாறு செயல்புரிதல் வேண்டும்.

**கேள்வி:** அமைச்சர் எவைகளை ஆராய்ந்து செயல் புரிதல்வேண்டும்?

---

## சொல்வன்மை.

### சொற்களைத் திறமையுடன்பேச வல்லனாதல்.

விசுவநாததத்தருக்கும், புவனேசுவரி தேவி யார்க்கும் புதல்வராய்த் தோன்றியவர் விவேகா னந்தர். 1898ம் வருடத்தில் அமெரிக்கா தேசத்தில் உள்ள சிகாகோ நகரத்தில் பிரபலமான சர்வ மதங்களின் பிரதிநிதிகளையும் வரவழைத்துப் பிரசங்கங்கள் செய்யச் சபை ஒன்று ஏற்படுத்தினார் கள். பிரசித்திபெற்ற மதப்பிரசங்கிகள் கூடிப் பேசினார்கள். அச்சபைக்குச் சென்னை வாசிகள்

விவேகானந்தரை அனுப்பினார்கள். இவர் தமக்குப் பேசக்கிடைத்த நேரத்தில் அனைவரும் பெரியோர் களே! என்று அழைக்க இவர் அவ்விதம் சபையோர் களை அழைக்காமல், "அன்பான சதோதர சகோதரி களே" என்று அழைத்தார். இதைக்கேட்டவுடன் சபையோர் பேரானந்தம் அடைந்தனர். இவரைப் புகழ்ந்துபேச ஆரம்பித்துவிட்டனர். மறுநாள் பத்திரிகைகள் புகழ ஆரம்பித்ததும் இவருக்குப் பகையாய் வேறுமதத்தில் உள்ளவரும், "இவர் பேசி யதை நாம் கேட்கவில்லையே மேலும் இவர் எப் பொழுது பேசுவார்" என்று ஆசைப்பட்டு அறிய லாயினர். இவ்விதம் கேட்டவர்களைத் தன்வயப் படுத்தும் தன்மையோடு கேளாத பகைவரும் என்று கேட்போம் என்று விரும்பும்படியாகப் பேசுவதே சொல்வன்மை என்று வள்ளுவரும் கூறினர்.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல். (48)**

| | | |
|---|---|---|
| கேட்டார் | = | நட்பாய் ஏற்றுக் கொண்டவரை |
| பிணிக்கும் | = | பின் வேறுபடாமல் தன்வயப்படுத்தும் |
| தகை | = | குணங்களை |
| அவாய் | = | விரும்பி |
| கேளாரும் | = | பகைவரும் |
| வேட்ப | = | (பின் அப்பகைமை ஒழிந்து நட்பினை) விரும்பும் வண்ணம் |
| மொழிவது | = | சொல்லப்படுவதுவே |
| சொல் ஆம் | = | சிறந்தமொழி ஆகும். |

**கருத்து:** பகைவரும் நண்பரும் விரும்பும்படி மொழி வதே மொழி ஆகும்.

**கேள்வி:** எவர் எவர் விரும்பும்படி மொழிவதே மொழி ஆகும்?

**விளக்கம்:** தகை = குணங்கள். குற்றமில்லாமை; சுருங்கச் சொல்லல்; விளங்கவைத்தல்; இனியதாதல்; சிறந்த பயன் தருதல்; முதலியன சொல்லின் குணங்களாகும். கேட்டார் - நண்பர். கேளார் - பகைவர்.

---

## வினைத்தூய்மை

**செய்யப்படும் செயல்கள் அறம், பொருள், புகழ் முதலியவற்றைத் தரவல்ல தூய்மை பெற்றிருத்தல்.**

உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்தவன் கோப்பெருஞ் சோழன். இவன் தன் பிள்ளைகள் இருவர்களுடன் பகைமை கொண்டு போர்செய்தற்கு எழுந்தான். அதுசமயம் புல்லாற்றூரில் வாழ்ந்த எயிற்றியனார் என்பவர் வந்து, "நீ ஒருவேளை வெற்றி பெற்றால் அரசை எவர்க்கு அளிப்பாய்? இவர்கள்தானே அடைவார்கள். ஒருவேளை தோற்றால் பிற அரசர்கள் உன்னை இகழ்வார்கள். பின் அடையும் உரிமையுள்ள உன் பிள்ளைகளிடமா? நீ சண்டைக்கு எழுவது" என்றார்.

இதைக் கேட்டு! தான் செய்த தவறை உணர்ந்து, தன் பிள்ளைகளிடம் அரசை விட்டுப் பின் மேலும் இவ்வித துன்பத்தைச் செய்தோமே என்று நினைத்து வருந்தாமல் இருக்க வடக்கிருந்து தன் உயிரை விட்டான்.

**எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்**
**மற்றன்ன செய்யாமை நன்று.** **(49)**

எற்று என்று = யான் செய்தது எப்படிப் பட்டதென்று
இரங்குவ = பின் தானே வருந்தும் தொழில்களை
செய்யற்க = ஒருகாலும் செய்யாது ஒழிக.
செய்வானேல் = ஒருகால் மயங்கி அவைகளைச் செய்வானாயின்
மற்று = பின்பு
அன்ன = அவ்வாறு வருந்துதலே
செய்யாமை நன்று = செய்யாது ஒழிதல் நல்லது.

**கருத்து:** தான் செய்தது தவறு என்று நினைத்துப் பின் வருந்தும்படியான தொழில்களை ஒருகாலும் செய்தல் கூடாது. செய்தால் அதைப்பற்றியே நினைந்து வருந்திக் காலங்கழித்தல் கூடாது.

**கேள்வி:** வருந்தும்படியான தொழிலைச் செய்தவன் எதைச்செய்யாமை நல்லதாகும்?

# வினைத்திட்பம்

## காரியங்களைச் செய்தற்குரிய மனஉறுதி

சிதம்பரம், மதுரை, திருவாரூர் முதலிய ஊர்களில் ஓதுவார்கள் பாடிய பதிகங்களைக் கேட்டான். கேட்ட ராஜ ராஜன் மனம் கரைந்தான். எல்லா க்ஷேத்திரங்களுக்கும் இவ்விதம் பாடல் உண்டா? என்று ஓதுவார்களைக் கேட்டான்; அவர்கள், "உண்டு; நால்வர்கள் பாடியிருக்கிறார்கள்; அவை அந்தந்த ஊர் ஓதுவார்களுக்கே தெரியும்" என்றார்கள். சோழப் பேரரசன் திருப் பதிகங்களைத் தொகுத்து வெளியிட எண்ணினான். நம்பியாண்டார் மூலம் மூவர் பாடிய திருப்பதிகங்கள் தில்லைக்கோவிலில் உள்ள அறை ஒன்றில் பாதுகாப்பில் இருப்பதாக அறிந்தான். உடனே அரசன், சிதம்பரத்தை அடைந்து, "அக்கதவைத்திறந்து பார்க்கவேண்டும்," என்று தில்லைவாழ் அந்தணரைக் கேட்டுக் கொண்டான். அவர்கள், "மூவர் அடைத்துப் போனது; மீண்டும் அவர்கள் வந்தால்தான் திறக்கலாம்," என்றார்கள். இதைக்கேட்டு அரசன் பேசாது தன் மாளிகை சென்றான்; "யாவரும் அரசன் செயல் நடக்கவில்லை" என்று வருந்தினர். மறுநாள் மூவர் செப்புச் சிலைகளையும் அலங்காரம் செய்து, பூசை முதலியன செய்வித்து, தெருவில் எழுந்தருளச் செய்து, திருமுறைகள் இருந்த அறைக்கு எதிரில் கொண்டுவந்து நிறுத்தினான்.

மூவர்வந்து விட்டார்கள் அறையைத் திறக்கலாமே! என்றான் அரசன். ஆரம்பத்திலாவது நடுவிலாவது அரசன் செய்யும் தந்திரம் தெரிந்திருந்தால் மூவரை எழுந்தருளப்பண்ண மாட்டோம்'' முடிவில் தெரிவதால் ஏமாந்தோம்'' என்று அவனது நுண்ணறிவைப்பாராட்டித் தில்லை வாழ் அந்தணர்கள் அறைக்கதவைத் திறந்தனர். உள் செல்லரிக்கப்பட்ட ஏடுகள்போக, ஏனையவற்றை எடுத்து, ஒழுங்கு செய்து, ஏழு திருமுறைகளாக வெளிப்படுத்தி அனைவரும் அறியச் செய்தான். இதனால் இவனுக்குத் திருமுறைகண்ட ராஜராஜன் என்ற பட்டப் பெயரும் உண்டு. வள்ளுவரும் "தொழிலை மறைத்து முடிவில் தெரியும்படி செய்வதே ஆண்மையாகும்'' என்று கூறியுள்ளார்.

**கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை**
**இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.** (50)

| | | |
|---|---|---|
| கடை | = | (செய்யப்படுந் தொழிலை) முடிவிலே |
| கொட்க | = | வெளிப்படும்படி |
| செய்தக்கது | = | (அதற்குமுன் எல்லாம் மறைத்துச்) செய்வதே |
| ஆண்மை | = | வலிமை ஆகும். |
| இடை | = | நடுவிலே |
| கொட்கின் | = | வெளிப்படுமாயின் (அவ்வெளிப்படுதல்) |
| எற்றா | = | நீக்கப்படாத |
| விழுமம் | = | துன்பத்தை |
| தரும் | = | (தொழில் செய்தவனுக்குக்) கொடுக்கும். |

**கருத்து:** தொழிலைமறைத்து முடிவில் தெரியும்படி செய்வதே ஆண்மை ஆகும். அது நடுவில் வெளிப்படுமாயின் துன்பம் உண்டாகும்.

**கேள்வி:** எற்று விழுமம் தருவது எது?

---

## வினை செயல்வகை

### மனஉறுதி உடையவர்கள் செயல்களைச் செய்யும் திறம்

"தமிழ் மன்னர்களை இகழும் கனக, விசயர்கள் சொல்லை, ஒற்றர் மூலம் அறிந்த செங்குட்டுவன் அவர்களை வென்று அடக்க வேண்டும்" என்று நினைத்தான். அச்சமயம் கண்ணகிக்குச்சிலை எடுக்கவேண்டும் என்ற அவசியமும் வந்தது. யானையைக்காட்டி யானையைப் பிடிப்பதுபோலக் கண்ணகிச்சிலை எடுப்பதற்காகப் போய்க் கனக விசயர்களை வென்று அவர்கள் தலையிலே அந்தச் சிலையைத் தூக்கிவைத்துத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டான். இக்கருத்தைப் பின்வரும் குறளும் அறிவிக்கிறது.

**வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.** (51)

*வினையான்* = *செய்கின்ற தொழிலினாலே*
*வினை* = *அப்படிப்பட்ட வேறொரு தொழிலை*

ஆக்கிக்கோடல் = முடித்துக் கொள்க.

(அது)

நனை கவுள் = (மதத்தால்) நனைந்த கபோலத்தையுடைய
யானையால் = யானையினால்
யானை = அப்படிப்பட்ட வேறொரு யானையை
யாத்தற்று = (பிடித்துக்) கட்டியதோடு ஒக்கும்.

**கருத்து:** ஒரு தொழிலால் வேறொரு தொழிலை முடித்துக் கொள்ளுதல் ஒருயானையைக் கொண்டு மற்றொரு யானையைப் பிடித்ததற்குச் சமமாகும்.

**கேள்வி:** யானையைக் கொண்டு யானையைப் பிடிப்பதற்கு ஒப்பானது எது?

**விளக்கம்:** கவுள் = கன்னம். யாத்தல் = கட்டுதல். தொடங்கிய தொழிலோடு வேறொரு தொழிலையும் முடித்தற்கு உபாயமாகும் முறைகளை நினைத்துச் செய்தால் எல்லாத்தொழில்களும் எளிதிலே முடியும்.

---

## தூது

### தூது செல்வார்க்குரிய தன்மைகள்

தகடூரில் இருந்த அதியமானை ஔவையார் கண்டார்; அவன் அவரைக் காஞ்சியில் உள்ள தொண்டைமானின் செயலைத் தூதாகச் சென்று அறிந்துவர வேண்டினான். அவரும் காஞ்சிபுரம் போய் அரசனைக் கண்டு அன்போடு பழகினார்.

அதிகமானிடம் இருந்து வந்ததாக அவனிடம் அறிவித்தார். காஞ்சி அரசன் தன்னுடைய படைக் கலங்களைப் பார்த்துவருவதற்கு ஔவையாரை அழைத்தான். அவர் உடன் சென்று பார்க்கும் போது இவ்வரசனிடம் தாம் அதிகமானின் காரணமாகச் செய்யும் முறை யாது? என்பதை அறிந்து அதை இவ்வரசன் விரும்பிக் கேட்கக்கூடிய காலத்தையும், இடத்தையும் ஆராய்ந்து படைக்கலங்களைப் புகழும் விதமாகக் காஞ்சி அரசரே! "உன் படைக் கலங்களோ? எண்ணெய் பூசி, மாலை அணிந்து, வேலின் வலிய அடிக்காம்புகள் தேயாமல் அழகாகப் பெரிய மாளிகையில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதிகமானின் அம்புகளோ வளைந்து ஒடிந்து கொல்லனின் உலைக்களச் சிறு இடத்தில் கிடக்கின்றன," என்று அதிகமானின் வீரம் விளங்க அம்புகளைப் பழிப்பது போலப் புகழ்ந்தார். இதைக்கேட்ட அரசன் தன் செருக்கடங்கி அதிகமானின் வீரத்தை அறிந்து, அவன் பகையை மறந்து நட்புக்கொள்ளத் தொடங்கினான். இவ்விதம் "சென்று பேசவல்லவர்கள் தூது செல்லவேண்டும்" என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**கடன் அறிந்து காலம் கருதி இடன்அறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை.** (52)

கடன் = (வேற்றரசரிடத்துத் தான்செய்யும்) முறைமையை

அறிந்து = தெரிந்து

| | | |
|---|---|---|
| காலம் கருதி | = | (அவர்) சமயம் பார்த்து |
| இடன். | = | (சென்ற காரியம் சொல்லுதற்கு ஏற்ற) இடத்தை |
| அறிந்து | = | தெரிந்து |
| எண்ணி | = | (சொல்லும் வழியை முன்னே) விசாரித்து |
| உரைப்பான் | = | அவ்விதம் சொல்பவனே |
| தலை | = | முதன்மையான தூதனுவான். |

**கருத்து:** முறை தெரிந்து அதனோடு காலத்தையும் இடத்தையும் பார்த்துச் சொல்பவனே அரசனுவான்.

**கேள்வி:** சிறந்த தூதன் என்று எண்ணப்படுபவனிடம் உள்ள தன்மைகளும் செயலும் எவை?

---

## குறிப்பறிதல்

### பிறர் எண்ணத்தை அவர் கூறுமுன்னமே குறிப்பினுலறிதல்

சோழன் குளமுற்றத்துத்துஞ்சியகிள்ளி வளவனின், உறையூர்சபையில் தானும், புலவர் கோவூர் கிழாரும் மற்றைய மந்திரிகளும் சூழ இருந்தான். அச்சமயம் எதிரில் நின்ற மதம்கொண்ட யானையின் காலில் இட்டு அழிக்கும்படியாக மலையமான் மக்கள் கொண்டுவரப்பட்டனர். அக்குழந்தைகள் வரும்போது அழுதுகொண்டே வந்தவை, யானையைக் கண்டு முகம் மலர்ந்து சிரிக்கலாயின. இதை அவை

யில் உள்ள அனைவரும் கண்டனர். உடனே புலவர் வளவனை நோக்கி 'அரசே! வாடி அழுத முகத்துடன் வந்த இக்குழந்தைகள் உம்மைக் கண்டு சிரிப்பதைப் பார்த்தீரா! இவ்விதம், தண்டனை அடைந்த எதிரியை அழிக்க ஆரம்பித்தால் அவன் சிரிப்பானா? இக் குழந்தையின் முகமலர்ச்சியே இக்குழந்தைகள் உமக்கு எதிரியில்லை என்பதை விளக்கவில்லையா?' என்றார். ஆம், புலவீர்! "இக்குழந்தைகள் என் பகையில்லை. என் நண்பர்கள். இவற்றை யானை காலில் இடாதீர்கள்" என்று உத்தரவளித்தான். குழந்தைகள் இன்பமாக வாழலாயின. சபையில் உள்ள ஏனையோரும், "முகமே ஒருவர் மீதுள்ள வெறுப்பையும் விருப்பத்தையும் அறிந்து முற்பட்டு நின்று காட்டும் கருவியாகும். ஆதலால் முகத்தைப் போல 'அறிவு மிக்கது வேறு எதுவும் இல்லை. இக் குழந்தைகளின் முகமலர்ச்சியே அரசனை அன்பு உள்ளவனாக்கி இவர்களைக் காத்தது" என்று புகழ்ந்தார்கள். இக்கருத்தை இக்குறளும் அறிவிக் கிறது.

**முகத்தின் முதுக்குறைந்த துண்டோ; உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.** (53)

| | |
|---|---|
| உவப்பினும் | = (உயிரானது ஒருவனை) விரும்பினாலும் |
| காயினும் | = வெறுத்தாலும் |
| தான் | = தான்தெரிந்து |
| முந்துறும் | = அவ்விரண்டிலும் நெஞ்சுக்கு முன்பே தெரிவிக்கும். |

ஆதலால்

முகம்போல = முகத்தைப்போல.
முதுக்குறைந்தது = அறிவுமிக்கது
உண்டோ = வேறு உளதோ? இல்லை.

**கருத்து:** உயிர் விரும்பினாலும், வெறுத்தாலும் அவற்றை முகம் வெளிப்படுத்துதலால் முகத்தைப்போல் அறிவு மிக்கது இல்லை.

**கேள்வி:** ஒருவனது முகம் எவற்றை அறிவிக்கும்?

---

## அவை அஞ்சாமை

### தான்பேசும் சபைக்குப் பயப்படுதல்

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் நக்கீரர். இவர், "பாண்டியன் கருத்தமைய மதுரேசர் பாடிக்கொடுத்த பாடலைக் கொண்டுவந்த தருமியிடம், அப்பாடல் குற்றமுடையது" என்றார்; பின் மதுரேசர் நேரில் வந்து சொல்லியும் கேட்கவில்லை; பின் நெற்றிக்கண்ணைக் காட்டினார். அப்போதும் அஞ்சாமல் "குற்றம் குற்றமே" என்றார். இவ்விதம் சபையில் இருந்து நெற்றிக்கண்ணைக் கண்டாலும் குற்றம் குற்றந்தான் என்று சொல்லும் வல்லமை சிலரிடமே உண்டு. பலர், போர்க்களத்தில் அஞ்சாது போய் இறப்பர்; அவர்களிலும் இவர்களே கிடைப்பதற்கு அரியராய் உள்ளவர் என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்.** (54)

பகை அகத்து = எதிரியினிடத்து
சாவார் = (அஞ்சாது போய்) இறக்க வல்லவர்
எளியர் = உலகத்துப்பலர்.
அவை அகத்து = சபையினிடத்து
அஞ்சாதவர் = அஞ்சாது இருந்து சொல்லவல்லவர்
அரியர் = மிகச்சிலரே ஆவர்.

**கருத்து:** போர்க்களத்தில் அஞ்சாது இறக்கவல்லவர் பலர்; சபையில் அஞ்சாது பேசவல்லவர் மிகச்சிலர்.

**கேள்வி:** எளிமையும் அருமையும் உடையவர் எவரெவர்?

---

## நாடு

### நாட்டின் அமைப்பு

தமிழ் வேந்தர் மூவேந்தரில் இன்று சேரமன்னர் மட்டும் திருவிதாங்கூரில் வாழ்கிறார். இந்நாட்டில், அரசனுக்கு மாறுபட்ட பலகூட்டத்தார்களும், கூடியிருந்தே நாட்டைப் பாழ்செய்யும் உட்பகைவரும், சமயம் வந்தபோது அரசனைத் துன்புறுத்தும் கொலைத்தொழில் புரியும் குறும்பரும் இல்லாமையால் இன்றும் சித்திரைத் திருநாள் என்பவர் ஆட்சிசெய்து வருகின்றார். "இவர்கள் இல்லாத

நாடே நாடு என்று சிறப்பித்துச் சொல்லப்படும்" என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு. (55)**

| | | |
|---|---|---|
| பல்குழுவும் | = | (மாறுபட்ட கொள்கையால்)அரசனுக்கு விரோதமாகக் கூடும் பல கூட்டங்களும் |
| பாழ்செய்யும் | = | உடனிருந்துகொண்டே அழிவைத் தேடும் |
| உட்பகையும் | = | வஞ்சனையோடு உள்ள விரோதியும் |
| வேந்து அலைக்கும் | = | சமயம்வந்தால் அரசனைத்துன்புறுத்தும் |
| கொல்குறும்பும் | = | கொலைத்தொழில் செய்யும் குறும்பரும் |
| இல்லது நாடு | = | இல்லாது இருப்பதே நாடாகும். |

**கருத்து:** இம்மூவரும் இல்லாது இருக்கும் நாடே சிறந்த நாடாகும்.

**கேள்வி:** எந்த மூன்றுபேர் இல்லாத நாடு நல்ல நாடாகும்?

---

## அரண்

### நாட்டிற்குரிய பாதுகாப்புகள்

பாரி அரசுசெய்த பறம்பு நாட்டின் அரண், பரந்த இடத்தை உடையதாய்ப் பகைவர் உள்

நுழையாதவாறு காக்கும் இடம் சிறியதாயும் அமைந்திருந்தது. இவற்ருல் இவ்வரணைச் சூழ்ந்த வலிமையுள்ள சேர சோழ பாண்டியர் ஆகியமூன்று பகைவரும் உள்ளே செல்ல முடியாமையால் தம் மனக்கிளர்ச்சி குன்றினர். "இவ்விதம் வல்லமை பொருந்தி, பகைவரின் மனக்கிளர்ச்சியை அழிப்பதே அரணுகும்" என்று வள்ளுவரும் கூறினர்.

**சிறு காப்பிற் பேரிடத்ததாகி உறுபகை**
**ஊக்கம் அழிப்பது அரண்.** (56)

சிறுகாப்பின் = காக்கவேண்டும் இடம் சுருங்கியதாயும்
பேர் இடத்தது ஆகி = பரந்த இடத்தை உடையதாய்
உறுபகை = தன்னைச் சூழ்ந்த பகைவரது
ஊக்கம் = மனஎழுச்சியை
அழிப்பது = கெடுப்பதே
அரண் = மதிலாகும்.

**கருத்து:** காக்குமிடம் சிறியதாய்ப் பரந்த இடமுடையதாய்ப்பகைவர் வலிமையைக்கெடுப்பதேஅரணுகும்.

**கேள்வி:** எவைபொருந்திய அரண் சிறந்த அரணுகும்?

---

## பொருள் செயல்வகை

### செல்வத்தைச் சம்பாதிக்கும் முறை

இராசராசன் தன் காலத்தில் சோழமக்களிடம் ஆறில் ஒருபங்கு வரியே வாங்கினன். விளைவில்லாத

நிலங்களுக்கு வரி வேண்டாம் என்று தள்ளினன். இவ்வித முறையில் இவன் செல்வம் தேடியதால் தானும் உண்டு, இன்பம் அனுபவித்து ஏனைய பொருள்களைக்கொண்டு தஞ்சையில் உலகோர் போற்றும்படியாகத் தன் பெயரால் "இராஜராஜே சுவரம் என்ற" கோயிலையும் கட்டினன். இதனல் இவன் புகழ் இன்றும் நிலைத்திருக்கிறது. வள்ளுவரும்; "குற்றமில்லாத வழியில் தேடிய செல்வம் அறத்தையும் இன்பத்தையும் அளிக்கும்," என்று கூறி உள்ளார்.

**அறன் ஈனும்; இன்பமும் ஈனும்; திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள். (57)**

| | | |
|---|---|---|
| திறன் அறிந்து | = | (சம்பாதிக்கும்) வகையை அறிந்து |
| தீது இன்றி | = | (அரசன்)கொடுங்கோன்மையாகிய குற்றமில்லாமல் |
| வந்த | = | உண்டான |
| பொருள் | = | செல்வம் |
| அறன் ஈனும் | = | அவனுக்குத் தர்மத்தையும் கொடுக்கும் |
| இன்பமும் ஈனும் | = | சுகத்தையும் கொடுக்கும். |

**கருத்து:** குற்றமில்லாது வந்தபொருள் அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

**கேள்வி:** எவ்வித முறையில் தேடும் பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்?

# படைமாட்சி

## படைகளின் பெருமை

கார்த்திகைத் திங்கள் கடைசி சோமவார நன்னாளாகிய 13—12—48 அன்று தருமபுர ஆதீன ஸ்ரீ-ல-ஸ்ரீ குருநாதர் அவர்கள் மதுரைச் சொக்க நாதரை யாத்திரையாகச் சென்று வழிபட்டார்கள். ஆதீனச் சமயப்பிரசாரக் குழுவினரும் வந்து, பிரசாரம் செய்தார்கள். அது சமயம் பல்லாயிரக் கணக்கான மக்கள் சொற்பொழிவைக் கேட்கத் திரண்டிருந்தனர். இவர்கள் செய்த ஓசை முழக்கம் கடல் முழக்கத்தைவிடப் பெரிதா யிருந்தது. சிலர் இவ் ஓசை எவ்விதம் அடங்கும் என்று எண்ணி ஏங்கினர். அச்சமயம், தருமபுர ஓதுவாமூர்த்திகள் புன்னாகவராளி இராகத்தில் தேவாரத்தைப் பாடத் தொடங்கினர். அதைக்கேட்டு மக்கள் யாவரும் பரவசமாகி ஓசை அடங்கி இருந்தனர். அதைக் கண்டவர்கள், எலிகள் கூடி கடல்போல் ஒலித் தாலும் பாம்பு மூச்சுவிட்ட அளவில் அடங்கு வதைப்போல "பண் ஓசையைக் கேட்ட அளவில் அடங்கியிருக்கிறார்கள்" என்று ஓதுவார் அவர் களைப் புகழ்ந்தார்கள். குறளும் இக்கருத்தை அறிவிக்கிறது.

**ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை**
**நாகம் உயிர்ப்பக் கெடும்.** (58)

| | | |
|---|---|---|
| எலிப்பகை | = | எலி ஆகிய பகை |
| உவரி | = | (கூட்டமாகக்கூடி) கடல்போல் |
| ஒலித்தக்கால் | = | இரைந்தால் |
| என் ஆம் | = | பாம்பிற்கு என்ன துன்பமாகும்? |
| நாகம் | = | அப்பாம்பு |
| உயிர்ப்ப | = | மூச்சுவிட்ட அளவிலே |
| கெடும் | = | அது தானே ஓசை அடங்கி அழியும். |

**கருத்து:** எலிகள் கூடிக் கடல் போல் ஒலித்தால் பாம்புக்கு என்ன துன்பம் வரும்? பாம்பு மூச்சுவிட்ட அளவில் ஓசை அடங்கி அழியும்.

எலிபலகூடிக் கடல்போல் ஒலித்தாலும் நாகம் மூச்சு விட்ட அளவில் அழியும் என்பது உபமானம்.

வீரரல்லாதார் பலர் திரண்டு இரைந்தாலும் வீரன் ஊக்கங்கொண்டு எழுந்தால் அடங்குவர் என்பது உபமேயம்.

இவ்வுபமேயப் பொருளை அடக்கிக் கொண்டு உபமானம் வந்திருப்பதால் இப்பாடல் பிறிது மொழிதல் அணி.

**கேள்வி:** நாகம் உயிர்ப்ப அழிவது எது? இப்பாடல் என்ன அணி?

---

## படைச் செருக்கு

### படைகளின் வீரமிகுதி

திருக்காளத்தி யீஸ்வரருக்கு வலக்கண்ணி லிருந்து இரத்தம் ஒழுகுவதைக் கண்ணப்பர் கண்

டார். கண்டு பல பச்சிலைகளைப் பறித்துவந்து அம் மருந்துகளை அவர் கண்ணில் பிழிந்தார். அதனால் அக்கண்ணிலிருந்து இரத்தம் தடைப்படாமையைக் கண்டு ஆவி சோர்ந்தார். "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி அவர் நினைவில் தோன்றியது. தோன்றியதும் அம்பை எடுத்துத் தமது வலக்கண்ணைத் தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினார். அப்பின மாத்திரத்தில் இரத்தம் தடைப்பட்டதைக் கண்டார். அடங்குதற் கரிய மகிழ்ச்சிக்கடலில் அமிழ்ந்தினார். இந்தச்சமயத் தில் ஈஸ்வரர்மேலும் திண்ணனாருடைய பேரன்பைத் தமக்குப் பூசை செய்துவரும் சிவகோசரியார் அறி யும் பொருட்டுத் தமது இடக்கண்ணிலும் இரத்தம் ஒழுகச் செய்தார். இதைக்கண்ட கண்ணப்பர்! "இதற்கு நான் அஞ்சேன்" மருந்து கண்டுகொண் டேன்; என் உடம்பில் இன்னும் ஒரு கண் இருக் கிறது; அதைப்பிடுங்கி அப்புவேன்" என்று பொங் கிய மகிழ்ச்சியுடையவராய்க் கண் எவ்விடத்தில் இருக்கிறது என்று தெரியும்பொருட்டு ஒருசெருப்புக் காலை அவர்கண்ணின் அருகிலே ஊன்றிக்கொண்டு தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை வைத்தார். கருணைக் கடலாகிய கடவுள் நில்லு கண்ணப்ப! என்று சொல்லித் தமது திருக்கரத்தி னாலே அவர் கையைப் பிடித்துத் தடை செய்தார். இவ்விதம், "ஒரு கண் போனபொழுதும், பிடுங்கி அப்புவதற்கு மற்றொரு கண் தம் உடம்பில் இருப் பதைப் பிடுங்கிச்சாத்தலாம்" என்று கண்ணப்பர்

மகிழ்ந்தார். வள்ளுவரும் "கைவேலை யானைமேல் எறிந்து வருபவன் வேறொரு தாக்கிய யானையைத் தொலைக்க தன் உடம்பில் பகைவர் விட்டுத் தைத் துள்ள வேலைப் பிடுங்கித் தனக்கு வேல் கிடைத்த தாக மகிழ்வான்" என்று கூறியுள்ளார்.

**கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும். (59)**

கைவேல் = தன் கையிலிருந்த அம்பை
களிற்றொடு = (தன்னைநோக்கி வந்த) யானையோடு
போக்கி = (உடலில் எய்து) அந்த யானையை ஓடச்செய்து
வருபவன் = (தன்னைநோக்கி வருகின்ற யானைக்கு) வேல் தேடி வருகின்றவன்
மெய்வேல் = தன் உடம்பில் தைத்திருந்தவேலை
பறியாநகும் = தனக்கு வேல்கிடைத்ததாகப் பிடுங்கிக்கொண்டு மகிழ்வான்.

**கருத்து:** கைவேலை யானைமேல் எறிந்து வருபவன் தன் மெய்வேலைப் பிடுங்கி மகிழ்வான்.

**கேள்வி:** கைவேலை யானைமீது எறிந்து வருபவன் தன் மெய் வேலைப் பிடுங்கி மகிழக் காரணம் என்ன?

களிறு - ஆண்யானை. நகும் - மகிழ்வான்.

# நட்பு

## சிநேகம்

அனபாயனுக்கும், அறிவுநிறைந்த பண்புள்ள சேக்கிழார்க்கும் உண்டான நட்பு நாளுக்கு நாள் பழகுந்தோறும் பிறைச் சந்திரன்போல் வளர்ந்து கொண்டே வந்தது. இவ்வரசன் தான் சென்று சுற்றிப் பார்க்கும் இடங்களிலெல்லாம் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தைத் திருப்பித் திருப்பி மக்கள் படிப்பதைக் கேட்டான். கேட்டவன் அவர்களிடம் ஐயா! இந்நூலையே திருப்பித் திருப்பி நீங்கள் படிப்பதின் காரணம் என்ன? என்றான். படிப்பவர்கள் அரசே! இந்நூலை நாங்கள், "ஒவ்வொருதரமும் படிக்கும்போது ஒவ்வொரு விதமான அறிவு இன்பம் எங்களுக்கு உண்டாகிறது. அவ்வித இன்பம் காணவே நாங்கள் இந்நூலைப்படித்து வருகிறோம்" என்றார்கள். அப்போது சோழ அரசன், என்னுடன் அவர் பழகத் தொடங்கியதிலிருந்து அவரோடு பழகாத நாளை வீண்நாளாக எண்ணி அவரிடம் பழகும் இன்பத்தை அடைய ஆசைப்பட்டேன். அதுபோல் நீங்களும் அவர் செய்த நூலை மேலும் மேலும் படித்து அந்நூல் இன்பம் செய்தற்கு மகிழ்வதாகக் கூறுகிறீர்கள். இதிலிருந்து பண்புடைய அவருடைய நூலும் பழக்கத்தைப் போல் இன்பம்தரும் என்று அறிந்தேன். ஆதலால் இனி அந்நூலை எந்நேரமும் படிப்பேன்

என்று திருத்தொண்டர் புராணத்தைப் படிக்கலானுன். இக்கருத்தைக் குறளும் அறிவிக்கிறது.

**நவில்தொறும் நூல்நயம் போலும்: பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (60)**

பண்பு உடையாளர் = நற்குணமுடைய மக்கள்,
தொடர்பு = (தங்களுக்குள்செய்த) நட்பு
பயில்தொறும் = பழகும்தோறும்
(அவர்க்கு இன்பம் செய்தல்)
நூல் = நூற்பொருளை
நவில்தொறும் = படிக்கும்தோறும்
நயம்போலும் = கற்பவர்க்குஇன்பம்செய்தலைப்போலும்.

**கருத்து:** நூல்கற்பவர்க்குக் கற்குந் தோறும் இன்பம் மிகுதல் போல நற்பண்புடையவரது நட்பு பழகுந் தோறும் இன்பம் தரும்.

**கேள்வி:** நவில் தொறும் நூல் நயத்தைப் போல்வது எது?

---

## நட்பாராய்தல்

### சிநேகமாக்கிக்கொள்ளத் தக்கவர்களை ஆராயும் திறம்

ஒரு மூடன் ஒரு செட்டியுடனே கூடிக்கொண்டு சிநேகமாக இருவரும் பயணம் பண்ணினார்கள். பண்ணும்போது இரவு வந்துவிட்டதால் அந்த

மூடன் வழியில் படுத்துக்கொண்டான். அப்பொழுது செட்டி பக்கத்தில் உள்ள ஒரு மரத்தின் மறைவில் படுத்துக்கொண்டான். சிறிது நேரம் கழித்து அந்த வழியிலே போகிற கள்வர் காலிலே இந்தமூடன் கால் பட்டது. ஒரு கள்வன், "இது என்ன? கட்டை போல் இருக்கிறது" என்ருன். அம்மூடன் கோபங் கொண்டு "டேய் மடையா!, உன் வீட்டுக் கட்டை பணம் முடித்துக்கொண்டு இருக்குமா?" என்ருன். கள்வர் அவனை உதைத்து அவனிடம் உள்ள பணத்தைப் பிடுங்கிக்கொண்டு சென்ருர்கள். போம் போது இந்தப்பணம் நல்லதோ? கெட்டதோ. என்ருர்கள். அவன் அதைக்கேட்டு நல்லது, கெட் டது என்று அறியும் பொருட்டு காவல்மரத்தின் கீழ் செட்டியார் இருக்கிருர் அவரிடம் காட்டுங்கள் என்று ஓடிச்செட்டியாரை எழுப்பினுன். அக் கள் வர்கள் செட்டியார்களிடம் இருந்த பணத்தையும் பிடுங்கிக்கொண்டு உதைத்துச் சென்ருர்கள். அப் போது செட்டி மூடனைப்பார்த்து 'அப்பா! எனக் குத்துணைவேண்டாம். நீ விரும்பிய இடத்திற்குப் போ!' என்று அவன் நட்பை வெறுத்துத் தான் தனியே சென்ருன். வள்ளுவரும் "மூடன் நட்பை விடுதல் இலாபம்" என்று கூறியுள்ளார்.

**ஊதியம் என்பது ஒருவர்க்குப் பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்** **(61)**

ஒருவற்கு = ஒருவனுக்கு
ஊதியம் என்பது = இலாபம் என்பது

பேதையார் கேண்மை = அறிவில்லாதவர் நட்பை
ஒரீஇ விடல் = வெறுத்து விட்டு நீங்குதல் ஆம்.

**கருத்து:** மூடன் நட்பைக் கொள்ளாது விடுதலே லாபமாகும்.

**கேள்வி:** எவரது நட்பைக் கொள்ளாது வெறுத்தல் லாபமாகும்

---

## கூடா நட்பு

### உள்ளத்தில் கூடாது வெளியில் மட்டும் காட்டும் நட்பு

இந்தியாவின் தலைநகரம் டெல்லி. இந்நகரில் மகாத்துமாகாந்தி அவர்கள் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்றார்கள். செல்லும்போது இளஞ்சிறுவன் அவர்களை இரண்டு கையும் குவித்து வணங்கினான். அவரும் அவனை வணங்கினார். வணங்கிய கையால் மறைத்து வைத்திருந்த கருவியால் அவரைச் சுட்டான். அருகில் உள்ளமக்கள் வணங்கிய கையுடன் நின்ற இவன் இவ்விதம் சுட்டானே என்று வருந்தினார்கள். இதை வள்ளுவர் "மக்களுக்கு நீதி சொல்லும் முறையில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே பகைவர் கும்பிட்ட கையிலும் ஆயுதம் மறைந்திருக்கும், அதுபோல அழுத கண்ணீரிலும் மறைந்திருக்கும்" என்று கூறியுள்ளார்.

**தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. (62)**

| | | |
|---|---|---|
| ஒன்னார் | = | (பகைவர் குறிப்பை அறிய வல்லார்க்குப்) பகைவர் |
| தொழுதகை யுள்ளும் | = | கும்பிட்ட கையுள்ளும் |
| படை | = | ஆயுதமானது |
| ஒடுங்கும் | = | மறைந்திருக்கும் |
| அழுத கண் ணீரும் | = | அவர் அழுதவிழியில் இருந்து ஒழுகும் நீரும் |
| அனைத்து | — | அப்படியே தீயபடை மறைந்திருத்தற்குச் சமமாகும். |

**கருத்து:** பகைவர் தொழுதலையும், அழுதலையும் உண்மை என நம்புதல் கூடாது.

**கேள்வி:** ஒன்னார் அழுதகண்ணீரும் எதற்கு ஒப்பாகும்?

---

## பேதைமை

### அறியாமை

இராசமாபுரத்து அரசனான சச்சந்தன், தன் அரசைச் செலுத்தி வரும்படித் தன் மந்திரியான கட்டியங்காரனிடம் ஒப்படைத்தான். அவன் நம்பிக்கை என்னும் குணத்தை அறியாதவன். அவ்வறியாமையை யுடைமையால், பழி பாவங்களாகிய

நாணம் அடைய வேண்டியவைகளுக்கு வெட்கப் படாமலும் தேடவேண்டிய புகழைத் தேடாமலும் அன்பு கொள்ளும் இடமான தன் அரசனிடத்தில் அன்பு கொள்ளாமலும் காக்கவேண்டிய நல் லொழுக்கத்தைக் காக்காமலும் அவன் சச்சந் தனைக் கொன்று தானே அரசனாகிப் பழிபாவங் களை அடைந்ததோடு இன்பம் இல்லாத அரசையும் பெற்றான். இவ்விதம் செய்யும் தொழில் அறிவில் லார் தொழிலாகும் என்று வள்ளுவரும் கூறினர்.

**நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.** **(63)**

| | | |
|---|---|---|
| நாணாமை | = | நாணவேண்டிய பழி பாவங்களுக்கு வெட்கப்படாமையும் |
| நாடாமை | = | ஆராய்ந்து தேடவேண்டியவற்றைத் தேடாமலும் |
| நார் இன்மை | = | (எவரிடத்தும்) அன்பு இல்லாமையும் |
| யாதொன்றும் | = | (காத்தற்குரியவற்றுள்) எது ஒன்றையும் |
| பேணாமை | = | காவாமையும் |
| பேதை தொழில் | = | அறிவில்லாதவனுடைய செயலாகும். |

**கருத்து:** நாணாமை, ஆராய்ந்து தேடாமை, அன் பின்மை, பேணாமை இந்நான்கு குணங்களும் அறிவில்லாத வன் செயலாகும்.

**கேள்வி:** அறிவில்லாதவன் தொழில் என்ன?

# புல்லறிவாண்மை

## இழிவான அறிவுடைமை

கொள்ளிடம் ஆறு சுமார் 1½ பர்லாங்கு அகலம் இருக்கும். அவ்வாற்றில் வெள்ளம் அதிகமாகச் செல்லும் நேரத்தில் தோணிக்காரர்கள் எப்பொழுதும் ½ அணா வாங்கினவர்கள் அன்று 4 அணா இக்கரையிலிருந்து அக்கரைசெல்வதற்கு வாங்கினார்கள். அப்போது ஓர் உலோபி, ½ அணா கொடுத்துச் சென்ற நான், மேலும் 3½ அணா கொடுத்தா போவேன், நீந்திச்செல்வேன்'' என்று நீந்த ஆற்றில் இறங்கினான். அருகில் இருந்தவர், ''வேண்டாம்'' என்று தடுத்தனர். பலர் சொல்லைக் கேட்காமலும், தனக்கும் புத்தியில்லாமையாலும் பண ஆசை ஒன்றே எண்ணி நீந்தினான். சிறிது தூரம் போனதும் தண்ணீர்வேகத்தில் அவனை இழுத்துச் சென்றது. சிறிது நேரம் சத்தம்போட்டான். கரையில் இருந்தவர்கள், ''நாம் சொல்லியதையும் கேட்கவில்லை; அவனுக்கும் அறியும் சக்தி இல்லை. இத்தன்மையான உயிர் உடலை விட்டு நீங்குமளவும் பூமிக்குப் பெரிய நோய் ஆகும்; அழிதலே நல்லது'' என்று எவரும் உதவி செய்யச்செல்லவில்லை. பின் நெடுந்தூரத்தில் உயிர்போய் மிதப்பதைக் கண்டார்கள். பின் வரும் குறளும் இக்கருத்தை அறிவிக்க வந்துள்ளது.

**ஏவவும் செய்கலான்; தான்தேறான்; அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய். (64)**

| | | |
|---|---|---|
| ஏவவும் செய்கலான் | = | (புல்லறிவாளன் தனக்குநன்மைதருவன வற்றை அறிவுடையார்) சொல்லவும் செய்யான் |
| தான் தேறான் | = | (அதுவல்லாமல்) தானாகவும் இவை செய்வன என்று அறியான் |
| அ உயிர் | = | அந்த உயிர் |
| போஒம் அளவும் | = | (உடலைவிட்டு) நீங்குமளவும் |
| ஓர் நோய் | = | நிலத்திற்குத் தாங்குதற்கரிய ஒரு நோயாம். |

**கருத்து:** அறிஞர் சொல்வதைக் கேளாமலும் தானாகவே அறியாமலும் இருக்கிற புல்லறிவாளன் நிலத்திற்குப் பாரமாகும்.

**கேள்வி:** உலகிற்கு நோயைப் போல்பவன் எவன்?

**விளக்கம்:** மலை முதலியவற்றைத் தாங்கும் நிலத்திற்குப் பாவஉடல் பெரும் பாரமாய்த் துன்பம் செய்தலின் "ஓர்நோய்" என்று கூறினார்.

---

## பகைமாட்சி

### பகையினது சிறப்பு

தமிழ்நாட்டு வேந்தர் மூவர். அவர்களில் சேர வேந்தர்மட்டும் இன்று அரசுசெய்கிறார். இவர்கள்

வேறு அரசனிடம் தம் உள்ளத்தில் மாறுபாடு தோன்றியபொழுது அவனை எதிர்க்காது விலகிச் செல்லும் குணம் உள்ளவர்கள். இத்தகைய மேன்மைக்குணம் அமைந்த பெரியோர்கள் இருந்ததால் இன்று அரசோடு செல்வ வளர்ச்சியும் பெற்றுச் சேரர்குலம் விளங்குகிறது. சோழரும் பாண்டியரும் மாறுபாடு உண்டானதும் மேலும்மேலும் வளர்த்துக் கொண்டே சென்றார்கள். மிகுதியான மாறுபாட்டைக் கொண்டதால் அம்மாறுபாடே செல்வ அழிவை மிகுதியாக உண்டாக்கியது. இதனால் சோழ பாண்டியரைக் காணாது வருந்துகிறோம். வள்ளுவரும், "மாறுபாட்டைக் கொள்ளாது விலகி நடத்தல் ஒருவன் செல்வவளர்ச்சிக்கு ஏதுவாகும்" என்று கூறியுள்ளார்.

**இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம்; அதனை**
**மிகலூக்கின் ஊக்குமாங் கேடு.** (65)

| | | |
|---|---|---|
| இகலிற்கு | = | (தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றிய இடத்து) அம்மாறுபாட்டிற்கு |
| எதிர்சாய்தல் | = | எதிர்செல்லுதலை நீக்கி விலகிப்போதல் |
| ஆக்கம் ஆம் | = | ஒருவனுக்குச் செல்வமாகும் |
| அதனை | = | அம்மாறுபாட்டில் |
| மிகல் | = | அதிகமாக |
| ஊக்கின் | = | மேற்செல்வானாயின் |
| கேடு | = | செல்வ அழிவை |
| ஊக்கும் ஆம் | = | மிகுதியாக உண்டாக்கும். |

கருத்து: மாறுபாட்டை எதிர்க்காது விலகல் செல்வம் தரும். இதனை மேற்கொள்ளுதல் அழிவைத் தரும்.

கேள்வி: செல்வத்தை விரும்புபவன் இகலிற்கு யாது செய்தல் வேண்டும்?

---

## பகை மாட்சி

### பகையினது சிறப்பு

பண்டைக் காலத்தில் உறையூரில் இருந்து தித்தன் என்ற சோழன் ஆண்டு வந்தான். இவனுக்குச் சோழன் போர்வைக்கோபெருநற்கிள்ளி என்ற ஒருபுதல்வன் இருந்தான். இவன் தந்தையின் கட்டளைபெறுமல் முக்காவல்நாட்டு ஆமூர் மல்லனிடம் வீண்சண்டைக்குச் சென்று அவனைக்கொன்ருன். இதைக்கண்ட தந்தை. "என்னைக்கேட்டுச் செய்யவேண்டும் என்ற என்கட்டளைக்கு அஞ்சாமலும், பகைவர் வலிமைகளைப் பற்றி அறிய வேண்டியவைகளை அறியாமலும், பிறருடன் கூடி வாழும் பொருத்தமில்லாமலும், உலோபகுணம் உடைமையும் கண்டு நீ எனக்குப்பின் இவ்வரசை ஆளும் தன்மை உடையவன் இல்லை இவ்விதகுணம் இருப்பதால் பகைவர்க்கு எளியன் ஆவாய்; என் நாட்டைவிட்டு வெளியேசெல்," என்று கட்டளையிட்டுத் தன்நாட்டைவிட்டு வெளியே அனுப்பினன்.

அவனும் தன் குற்றத்தைத் உணர்ந்து வெளிச் சென்று தன் காலத்தைக் கழித்தான். வள்ளுவரும் "இந் நான்கு குணமுடையவர் பகைவர்க்கு எளிய ராவர்" என்று கூறியுள்ளார்.

**அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.** (66)

அஞ்சும் = (ஒருவன் அஞ்ச வேண்டாதவைகளுக்கு) அஞ்சுவான்
அறியான் = தெரியவேண்டியவைகளைத் தெரியான்
அமைவு இலன் = பிறருடன் கூடும் பொருத்தமில்லாதவன்
ஈகலான் = ஐவரிடத்திலும் உலோபகுணமுடையவன்
பகைக்கு = இவ்வித குணமுடையவன் எதிரிக்கு
தஞ்சம் எளியன் = அடிபணிவதில் மிக எளியனாவான்.

**கருத்து:** பயப்படாமை முதலிய நான்கு குணங்களை யும் உடையவன் பகைவர்க்கு எளியன் ஆவான.

**கேள்வி:** எக்குண முடையவரை எளிதில் வெல்ல லாம்?

---

# பெரியாரைப் பிழையாமை

## அறிவுடையவரை அவமதித்து ஒழுகாமை

பாண்டியன் நெடுமாறன், தன் உடலை வருத்திய காட்டுத் தீப்போன்ற வெப்பு நோயினின்றும் பிழைத்தான். ஆனால் தவமுனிவராகிய திருஞான சம்பந்தர்க்குத் துன்பம் செய்த சமணர்கூட்டம்,

தோற்று மேலும் பிழைத்துவாழ மனம் இல்லாமல் அடியோடு அழிந்தார்கள். இதையே வள்ளுவரும் "நெருப்பினால் சுடப்பட்டாலும் பிழைக்கலாம்; பெரியோர்க்குத் தவறு செய்தவர்கள் அழிவார்கள்" என்று கூறியுள்ளார்.

**எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்**
**பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார்.** (67)

| | | |
|---|---|---|
| *எரியால்* | = | *காட்டுத்தீயால்* |
| *சுடப்படினும்* | = | *கொளுத்தப்பட்டாலும்* |
| *உய்வு உண்டாம்* | = | *(ஒருவழியில்) உயிர்பிழைத்தல்கூடும்* |
| *பெரியார்* | = | *(தவத்தால்) மேலோர்க்கு* |
| *பிழைத்து ஒழுகுவார்* | = | *குற்றம்செய்து நடப்பவர்* |
| *உய்யார்* | = | *எவ்வித வழியாலும் உயிர்பிழையார்.* |

**கருத்து:** காட்டுத்தீயைக் காட்டிலும் பெரியவர் கோபத்தீ உயிர்க்கு அழிவை உண்டாக்கும்.

**கேள்வி:** பெரியார்க்குப் பிழைசெய்பவர் அடையும் தீமை என்ன?

---

## மருந்து

### நோயைப் போக்கும் மருந்து

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையிடம் பாடங்கேட்க ஒரு செல்வர் சென்றார். சென்றவர் திருவாவடுதுறையை அடைந்து அவரிடம் பாடம்

கேட்டுவந்தார். அவ்வூரில் உணவு விடுதி கிடையாது. மடத்தில்தான் உண்ணவேண்டும். பகல் 12 மணிக்கு உணவு. பின் இரவு 9 மணிக்கு உணவு. இருவேளை உணவே உண்டு. பகல் 11 மணிவரை பாடம் நடக்கும். பாடத்தின்மீதுள்ள ஆசையால் பகலில் பசி தோன்றுவதில்லை. இரவு சாப்பிடுவதற்குமுன் செல்வர்க்குப் பசிவந்து மிகவும் துன்புறுவார். ஒரு நாள் பிள்ளை அவர்களிடம் படிக்கவந்த செல்வர் பசி தாங்கமுடியவில்லை என்ற இதைச்சொன்னார். அப்போது பிள்ளை அவர்கள், நன்றாகப் பசித்தபின் உண்ணுதல் வேண்டும். அவ்விதம் உண்டால் உடம்பிற்கு மருந்து என்ற ஒன்று வேண்டியதில்லை என்று இக்குறளைச் செல்வருக்குச் சொன்னார். செல்வரும் "இது நன்மைதரும்" என்று அவ்விதமே பசித்தபின் உண்ணும் பழக்கத்தை அடைந்தார்.

**மருந்தென வேண்டாவாம்; யாக்கைக்கு**
**அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.** (68)

| | | |
|---|---|---|
| அருந்தியது | = | முன் உண்ட உணவு |
| அற்றது | = | நன்றாகச் செரித்துவிட்டதை |
| போற்றி | = | (சில குறிகளால்) நன்கு தெரிந்துகொண்டு |
| உணின் | = | பின் உணவை உட்கொண்டால் |
| யாக்கைக்கு | = | அவன் உடம்பிற்கு |
| மருந்தென | = | மருந்து என்று |
| வேண்டாவாம் | = | வேறொன்று வேண்டியதில்லை. |

கருத்து: பசிவந்ததை அறிந்து உண்டால் நோய் அணுகாது.

கேள்வி: மக்கள் நோய் வராமல் காக்க யாதுசெய்தல் வேண்டும்?

---

# ஒழிபியல்

## குடிமை

### உயர்குடிப் பிறந்தாரது தன்மை

சோழன் மாவளத்தானும், புலவன் தாமப்பல் கண்ணனும் சொக்கட்டான் விளையாடினார்கள். அவ் விளையாட்டில் புலவன் தான் மேலும் மேலும் தோற்பதைக்கண்டு கட்டங்களில் உள்ள காயை எறித்து மாறிவைத்தான். இதைக்கண்ட சோழன் கோபங் கொண்டு கையிலிருந்த சொக்கட்டான் காயை அவன் முகத்தில் எறிந்தான். எறிந்த காய் முகத்தில் பட்டு இரத்தம் ஒழுகியது. இரத்தத்தைக் கண்ட புலவன், 'என்னைத்தமிழ்ப் புலவனென்றும், ஆருயிர் நண்பன் என்றும் கருதாது இரத்தம் ஒழுகும்படி நீ எறிந்ததற்கு நான் கோபங் கொள்ளவில்லை; ஏனென்றால் உயர்குடியிற் பிறந்த மக்கள் கோபம்

வரும்படியான செயல்களைப் பிறர் செய்தாலும் அவர்கள் கோபிக்கமாட்டார்கள்' என்ற கருத்தை அறிந்து நான் செய்யவில்லை. நீ செய்ததால் உனது குலப்பிறப்பைப்பற்றி அஞ்சுகிறேன் என்றார். இதைக்கேட்ட சோழன் "தான் தன் பிறப்பிற்கே பழி வரும்படியான செயலைச் செய்தேனே" என்று அவர் தாளில் பணிந்து மன்னிப்பு வேண்டினன். இக்கருத்தை உடையது இக்குறள்.

**சலம்பற்றிச் சால்பில செய்யார்; மாசற்ற**
**குலம்பற்றி வாழ்தும் என்பார். (69)**

| | | |
|---|---|---|
| மாசு அற்ற | = | பழிப்பில்லாது வருகின்ற |
| குலம்பற்றி | = | குலப்பெருமையோடு பொருந்தி |
| வாழ்தும் | = | வாழக்கடவோம் |
| என்பார் | = | என்று நினைத்து அவ்விதம் வாழ்பவர் |
| சலம் பற்றி | = | (தவறு கண்ட இடத்தும்) கோபத்தை அடைந்து |
| சால்பு இல | = | பொருத்தமில்லாத செயல்களை |
| செய்யார் | = | செய்யமாட்டார். |

**கருத்து:** தம் உயர் குடியைக் காக்க விரும்புபவர் இழிந்த தொழிலைச் செய்யார்.

**கேள்வி:** குலம்பற்றி வாழ்வோம் என்பவர் எதைச் செய்தல் கூடாது?

## மானம்

### தன் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வுவந்தால் உயிர் வாழாமையும் ஆகியகுணம்

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர் பட்டினத்தார். இவர் செல்வம் உள்ளபொழுது அரசனைக் கண்டால் வணங்குவது; எழுந்து நிற்பது; அரசர் பின்னே சென்று உத்தரவு வாங்கி மீண்டுவருவது முதலிய மரியாதைகளைச் செய்வது பழக்கம். "பட்டினத்தார் செல்வத்தை வெறுத்து வெளியே துறவியாகச் சென்றார்" என்று அயலவர் சொல்வதை அரசன் கேட்டான். கேட்ட அரசன் அவரது மரியாதைக்குணத்தை நினைந்துதானேசென்று பார்க்கத் துணிந்தான். போய் நேரில் பார்க்கப் பட்டிணத்தார் ஒருசாம்பல் மேட்டில் கோவண ஆடைகட்டிக்கொண்டு இருந்தார். அவரிடம்சென்று செல்வ வாழ்க்கையை விட்டுவிட்டு இந்தவிதம் வாழ்க்கை நடத்துவதால் என்னபயன்? இதனால் என்ன பெருமை; வேண்டாம் முன்போலவே வாழ்க்கை நடத்துதல் நல்லது என்றான். பட்டினத்தார் பேசாது இருந்தார். அப்போது மீண்டும் மன்னன் முன்னையவிட இப்பொழுது என்ன பெருமை பெற்றீர் வேண்டாம் வீண் பிடிவாதம் என்றான். அப்பொழுது அவர், "நீர் நிற்கவும் நான் இருக்கவும் பெற்றேன்" என்றார். இதனால் செல்வமுள்ள காலத்தில் பணிவைக் காட்டியவர் செல்வம் சுருங்

இயகாலத்தில் தமது உயர்வைக் காட்டினர். இவ்விதம் வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு. (70)**

| | | |
|---|---|---|
| பெருக்கத்து | = | (குடிப்பிறந்தவர்க்கு) நிறைந்த செல்வம் உண்டான இடத்து |
| பணிதல் | = | யாவரிடத்தும் வணங்கி நடத்தல் |
| வேண்டும் | = | வேண்டும். |
| சிறிய சுருக்கத்து | = | குறைந்த வறுமையுண்டான இடத்து |
| உயர்வு வேண்டும் | = | பணியாமை வேண்டும். |

**கருத்து:** செல்வம் வந்தபோது பணிவு வேண்டும். செல்வம் சுருங்கிய வறுமையுண்டான போது உயர்வு வேண்டும்.

**கேள்வி:** பெருக்கத்திலும், சுருக்கத்திலும் மக்கள் நடக்க வேண்டிய முறை என்ன?

---

## பெருமை

### பெரியாரது தன்மை

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வெள்ளியம்பலத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருநெல்வேலியில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இலக்

கண இலக்கியங்களில் வல்லவராய் தாம் கற்றிருந்த போதிலும் எவரிடத்தும் அடக்க முடையவராகவே நடந்து வந்தார்கள். இவர்களது அடக்கத்தை அறியாமல் திருச்செந்தூரில் உள்ள புன்புலவன் ஒருவன் இவர்களுக்கு என்ன தெரியும்? என்று இழிவாகப்பேசித் தன்னைப்போல் படித்தவர்கள் இல்லை என்று தன்னைத்தானே பெருமையாகப் பிறரிடம் பேசுவான். கேட்பவர்கள் இவனது அறியாமைக்கு வருந்திச் செல்வார்கள். திருச்செந்தூர் சென்ற சிவப்பிரகாசர் இதைக்கேட்டார். எனக்குத் தொல்காப்பியத்தை 15-நாளில் கற்பித்த பேரறிவுள்ள குருவையா? எவ்விதம் பேசுகிறீர். அவர் மாணவன் யான்? என்னை வென்றால் என் குருவை வென்றதாகும் என்று வாதுக்கழைத்து இருவரும் நிரோட்டயமக அந்தாதி பாடத் தொடங்கினர். புன்புலவன் முதற்பாடலிலே தோற்றான். சிவப்பிரகாசர் முழுதும் பாடிமுடித்தார். கண்டவர் அனைவரும் இப்புன்புலவன் இவ்வளவு பெருமையாகப் பேசினனே அச்சொல் எல்லாம் இவனது சிறுமையினால் அல்லவாபேசினன்? இவர் குருவாகிய சுவாமிகள் தம்வாயால் இவ்விதம் ஒருசொல் கூடச் சொல்லாமை அவர்கள் பெருமையால் அல்லவா? என்று குருவை வியந்து பேசினார்கள். இக்கருத்துள்ளது இக்குறள்.

**பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.** (71)

| | | |
|---|---|---|
| பெருமை | = | மேன்மையுடையவர் |
| என்றும் | = | அச்சிறப்பு உண்டான பொழுதும் |
| பணியும் | = | செருக்கின்றி அடங்கி நடப்பர் |
| சிறுமை | = | தாழ்மையுடையவர் |
| என்றும் | = | அச்சிறப்பு இல்லாத பொழுதும் |
| தன்னை வியந்து | = | தம்மைப்புகழ்ந்து |
| அணியும் | = | பெருமைப் படுத்திக் கொள்வர். |

**கருத்து:** பெரியார் பணிவுடன் இருப்பர்; சிறியார் செருக்குடன் இருப்பர்.

**கேள்வி:** தம்மை வியந்து பெருமை படுத்திக் கொள்பவர் எவர்?

ஆல் இரண்டும் அசைகள்.

---

## சான்றாண்மை.

### பலகுணங்களாலும் நிறைந்து ஆளும் தன்மை

7—11—1873-இல் ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர் 17-வது தலைவராகத் தருமபுர அருளாட்சியை நடத்தும் பெருமையைப் பெற்றார்கள். "இவர்களுக்குத் துன்பம் செய்து இப்பதவியிலிருந்து விலக்கவேண்டும்" என்று அருணந்தி சுவாமிகள் 1875-இல் வழக்குத் தொடுத்தார்கள். அவ்வழக்கில் அருணந்தி சுவாமிகள் தோல்வித் துன்பத்தையும், தேசிகர் அவர்கள் வெற்றி இன்பத்தையும் அடையும்படி சென்னை உயர்நீதி மன்றத்தார் தீர்ப்பு அளித்தனர்.

இவ்விதம் தமக்குத்துன்பம் செய்த சுவாமிகளுக்குப் பின் தேசிகர் அவர்கள் "நாம் இன்பம்தரும் செயலையே செய்யவேண்டும்" என்னும் பெருங்கருணை கொண்டு தம்வசத்தில் இருந்து நடத்தப்பட்டு வந்த பிரெஞ்சு இலாக்காவிலுள்ள சேத்தூர் கிராம நிர்வாகத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களே அவைகளுக்குத் தலைமை வகித்து அரசு செய்து வரும்படியாகக் கருணை செய்தார்கள். இவ்விதம் தமக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்தவர்க்கும், தாம் தமது நற்குண நிறைவால் இன்பம் செய்தார்கள். இக்கருத்தை உடையது இக்குறள்.

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.** (72)

| | | |
|---|---|---|
| இன்னா | = | (தமக்குத்) துன்பம் தருவனவற்றை |
| செய்தார்க்கும் | = | செய்த வருக்கும் |
| இனியவே | = | (நற்குணமுடையவர்) இன்பம் தருவனவற்றை |
| செய்யாக்கால் | = | செய்யாவிட்டால் |
| சால்பு | = | (அவருடைய) நற்குணங்களுடைமை |
| என்ன பயத்தது | = | வேறு என்ன பயனையுடையது. |

**கருத்து:** நற்குணம் நிறைந்தவர் துன்பம் செய்தவர்க்கும் இன்பம் செய்வர்.

**கேள்வி:** துன்பம் செய்தவர்க்கு எதைச் செய்தவர் சான்றோர் ஆவர்?

ஓ-அசை.

## பண்புடைமை

### பிறர் இயல்பறிந்து அதற்கு ஏற்ப நடத்தல்

திருவாரூரில் இருந்த ஞானப்பிரகாசதேசிகரை, குருவாக அடைந்து உபதேசம்பெற்றுக் குருபணி விடைசெய்து குருகுலவாசமாக இருந்தார் ஞான சம்பந்த தேசிகர். இவர்கள், பல சீடரோடுசெல்லும் குருவுடன் அர்த்தசாம பூசைக்குச்சென்று திரும்பு கையில் கைவிளக்குப் பணிவிடைக்காரன் தூங்கி விட்டமையால் தாமே சென்று கைவிளக்கை எடுத்துக்கொண்டு 'இன்று இப்பணி தமக்குக் கிடைத்ததே' என்று பெருமகிழ்ச்சியுடன் குருநாத னுக்கு முன் சென்றார். அப்போது உடன் வந்த பல மாணவரும் இவ்விதம் பணிசெய்யும் குணத்தில் நாம்தோற்று குருநாதர் மகிழும்படியான குணத்தில் ஞானசம்பந்தர் உயர்ந்தார். நாம் அவயவங்களாகிய கை, கால்களால் மட்டும் சமமாக இருக்கின்றோம்; இது உயர்வில்லையே என்று வருந்தினர்கள். பின் வரும் குறள் இக்கருத்துடையது.

**உறுப்பொத்தல் மக்க ளொப்பன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (73)**

| | | |
|---|---|---|
| உறுப்பு ஒத்தல் | = | (உயிரோடு ஒற்றுமைப்படாத) உடம்பால் ஒத்தல் |
| மக்கள் ஒப்பு அன்று | = | ஒருவனுக்கு நல்ல மனிதரோடு ஒப்பாகாமையால் பொருந்துவதன்று. |
| ஒப்பது ஆம் | = | பொருந்துவதாகிய ஒப்பாவது |

வெறுத்தக்க = உயிரோடு ஒற்றுமைப்படத்தக்க
பண்பு ஒத்தல் = குணங்களால் ஒத்திருத்தல் (ஆகும்)

**கருத்து:** மக்கள் அவயவங்களால் அல்லாமல் குணங்களால் ஒத்திருத்தலே உயர்வாகும்.

**கேள்வி:** மக்கள் எதனுல் ஒத்திருத்தல் வேண்டும்? ஏன்?

---

## நன்றியில் செல்வம்

### பிறர்க்குப் பயன்படாத செல்வம்

தருமபுரத்தில் அருட்செங்கோல்நடத்த, 11-வது குருநாதராக விளங்கியவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர். இவர் காலத்தில் ஒரு நாள் இரவு நடு யாமத்தில் வெளியிலிருந்து, "பசி, பசி, சோறு வேண்டும்" என்று ஒருவன் கூக்குரல் போடுவதைக் கேட்டார்கள். பணிசெய்பவர் எவரும் நித்திரையில் ஆழ்ந்திருந்தனர். அச்சொல் காதில்பட்டவுடனே குருநாதர் தாமே எழுந்து சமையல் அறையினுள் சென்று, ஓர் வெங்கலப்பாத்திரத்தில் சோறு, கறி யாவற்றையும் வைத்து எடுத்துவந்து வெளியில் கூக்குரல்போடுபவனிடம் கொடுத்துப் புசிக்கச் சொன்னூர். கூக்குரல் போட்டவன் பாத்திரத்தை எங்கே சேர்ப்பது? என்ருன். இவன் பேச்சைக் கொண்டு தமது ஞானத்தால் இவனை அரசன் என்று அறிந்து அரண்மனையில் சேர்க்கலாம் என்ருர். மறுநாட்காலையில் அரசன் சபை கூட்டி

மந்திரிகளிடம் ஞானதேசிகரின் கருணைத் திறத்தையும், எந்நேரத்திலும் உதவும் கொடையையும் பற்றிப் புகழ்ந்தான். "இவ்விதம் அளித்துத் தானும் உண்ணாத செல்வம் பயன் இல்லாத செல்வமாகும்" என்று வள்ளுவரும் கூறியுள்ளார்.

**கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய**
**கோடியுண் டாயினும் இல். (74)**

| | | |
|---|---|---|
| கொடுப்பதும் | = | (பிறர்க்கு) ஈவதும் |
| துய்ப்பதும் | = | (தான்) அனுபவிப்பதுமாகிய (இரண்டு செய்கையும்) |
| இல்லார்க்கு | = | உடையவரல்லாதவர்க்கு |
| அடுக்கிய | = | பலவாக அடுக்கிய |
| கோடி உண்டாயினும் | = | கோடிப் பொருள் இருந்தபோதிலும் |
| இல் | = | ஒன்றும் இல்லை. |

**கருத்து:** கொடுத்தலும், உண்ணுதலும் இல்லாதவர்க்குக் கோடிப்பொருள் இருந்தாலும் அதனாற் பயன் இல்லை.

**கேள்வி:** மக்கள் தாம் பெற்ற பொருளை யாதுசெய்தல் வேண்டும்?

---

## நாணுடைமை

### தமக்குத் தகாத செயலைச் செய்வதற்கு வெட்கப்படுதல்

தருமபுரம் அருட்செங்கோலை நடத்த ஆறுவது தலைவராக வந்த ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக

சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவர் சம்பந்த சரணாலயர். இவர் மைசூர் அரசனைக்கண்டபொழுது, அவன் சுவாமிகளின் தோற்றப்பொலிவைக் கண்டு, "அண்டங் காக்கைபோல் உளரே" என்றான். சுவாமிகள் புன்னகை பூத்து, "தாமே அண்டங் காக்கைக்குப் பிறந்தீர்" என்று சொன்னார்கள். அரசன் இதில் உள்ள சொல் நயம் கண்டு மகிழ்ந்து தம்முடன் சிலநாள் விருந்தாக இருக்கவேண்டினான். அவ்விதம் இருக்கும் காலத்தில் அரசன் சுவாமிகளைச் சிவிகையில் வைத்து நகர்வலம் செய்விக்க விரும்பினான். அப்போது சுவாமிகள் அரசனிடம் ஊண், உடை, உறக்கம் யாவும் எல்லார்க்கும்பொது; அதை அனுபவிப்பதில் எவ்வித தடையும் இல்லை. குருவாணையின்றி நகர் வலம் வந்தால் பழி பாவங்களுக்கு அஞ்சாமல் செய்த செயலாக அது முடியும். ஆனதால் 'உடன்படேன்' என்றார். பின் குருவாணை பெற்று அரசன் நகர்வலம் சுவாமிகளுக்குச் செய்வித்தான். வள்ளுவரும், "பழி பாவங்களுக்குப் பயந்து நடத்தலே மக்களின் சிறப்பாகும்" என்று கூறியுள்ளார்.

**ஊணுடை யெச்சம் உயிர்க்கெல்லாம்; வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு.** (75)

| | | |
|---|---|---|
| ஊண் உடை | = | ஆகாரமும், ஆடையும் |
| எச்சம் | = | இவை ஒழிந்தவைகளும் |
| உயிர்க்கு எல்லாம் | = | (மக்கள்) உயிர் யாவற்றிற்கும் |
| வேறல்ல | = | பொதுவாம். |

மாந்தர் சிறப்பு = நன் மக்கட்குச் சிறப்பாவது
நாண் உடைமை = (பழி, பாவங்களுக்கு) வெட்கப்படுதலே ஆகும்.

கருத்து: உணவு, உடை யாவர்க்கும் பொது; ஆனுலும், நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணமுடைமையாகும்

கேள்வி: மக்களுக்குச் சிறப்பை அளிப்பது எது?

---

## குடிசெயல்வகை

### குலத்தை உயரச் செய்தலின் திறம்

ஸ்ரீ கந்தப்பதேசிகர் 14வது தலைவராகத் தருமபுரத்தை ஆட்சிசெய்யுங்காலத்தில் தெக்ஷிணயாத்திரையாகத் திருநெல்வேலி சென்றுர்கள். அப்போது அங்கு வாழும்மக்கள் மழைபெய்யாமையால் நிலம் விளைவு இல்லை. வரிவாங்கவந்த கலெக்டரிடம் "மழை யின்மையால் விளைவில்லை, எவ்விதம் வரி செலுத்துவோம்" என்று முறையிட்டபோது துரையவர்கள்; "உங்கள் ஆச்சாரியரிடத்தில் தெரிவித்தால் மழை பெய்கிறது" என்று பரிகாசமாகச் சொன்னார்; எங்களுக்கு அங்கிதை பொறுக்கவில்லை என்று தேசிகரிடம் கூறினர். இதைச் செவிமடுத்த அடியார்கள் இரவு பூசையில் தவம்செய்வோம்', என்றுர்கள். சுவாமிகள் இரவு என்ன? "குலத்தைப் பாதுகாக்கும் மக்களுக்குக் காலம் வேண்டியதில்லை"

என்று அப்போதே தியானத்திலிருந்து பின் வரும் பாடலைப் பாடினர்.

**சைவ சமயம் சமயம்எனில் அச்சமயத்**
**தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில்—ஐவரைவென்று**
**ஆனந்த வெள்ளத்து அழுந்துவதே, முத்திஎனில்**
**வானங்காள் பெய்க மழை.**

இப்பாடல் பாடிய உடனே மேகங்கூடி மழைபெய்தன. அம்மழை எல்லா இடங்களிலும்நீரைநிரப்பின. துரையும் இதை அறிந்து "தான் பரிகசித்தமைக்கு வருந்தி 100. வராகன் பொன்னைப் பாத காணிக்கையாகவைத்துத் தம் குற்றத்தை நீக்கி அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினர். காலம் பார்த்துச் செய்யாமல் உடனே அருள்புரிந்ததால் அடியவர் குலம் புகழப்பட்டது. இக்கருத்தை உடையது இக்குறள் -

**குடிசெய்வார்க் கில்லை பருவம்; மடிசெய்து**
**மானங் கருதக் கெடும்.** (76)

| | | |
|---|---|---|
| மடி செய்து | = | (குலம் உயரச் செய்தலை) நோக்காது காலத்தை (நோக்கி) சோம்பல் செய்து கொண்டு |
| மானம் | = | மானத்தையும் |
| கருத | = | நினைப்பாராகில் |
| கெடும் | = | (குலம்) அழியும். (ஆதலால்) |
| குடிசெய்வார்க்கு | = | குடியை உயரச் செய்வார்க்கு |

பருவம் = கால நியதி
இல்லை = கிடையாது.

**கருத்து:** தன் குலத்தை உயரச் செய்பவர்க்குக் கால நியதி இல்லை.

**கேள்வி:** கால நியதி எவர்க்கு இல்லை?

---

## உழவு

### உழுதொழில்

ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் அவர்கள் 15வது தலைவராகத் தருமபுர ஆட்சியை நடத்தத் தொடங்கினார்கள். இவர்கள் காலத்தில் நட்டபயிர் வாடுகிறது. மரம் செடிகொடியும் வாடுகின்றன. குடி நீரும் இன்மையைக் கண்ட உழவர்கள் சுவாமிகளிடம் வந்து குறையை அறிவித்தனர். சுவாமிகள் பிறதொழில் களைச் செய்பவரும் முடிவில் ஏரை உடையவரிடம் சென்று யாசிக்கும் உழுதொழிலே முதன்மையானது. அத்தொழிலுக்குத் துன்பமாக மழை இல்லையே என்று தாம் பூசைசெய்யும் சொக்கலிங்கத்திடம் நின்று "புலனைந்தும் பொறிகலங்கி," என்னும் பாடலை இசையோடு பாடினர். இறைவன் அருளால் மழைபெய்தது. உழவர்யாவரும் மகிழ்ந்து சென்றனர். இவ்விதம் உலகம் உழவுத்தொழிலால் வாழ்கிறது. அதனல் உழவுத்தொழிலே சிறந்தது; அதற்கு

உதவவேண்டும் என்றே சுவாமிகள் உழவர்களிடம் கருணைமிகுந்து உதவிசெய்தார்கள்.

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்**
**உழந்தும் உழவே தலை.** (77)

| | |
|---|---|
| சுழன்றும் | = (பிற தொழில்களைச் செய்தும்) திரிந்தும் |
| ஏர் பின்னது உலகம் | = முடிவில் ஏரையுடையவரின் வழியே உலகத்தார் வருவார். |
| அதனால் | = ஆகையினால் |
| உழந்தும் | = பல துன்பம் அடைந்தாலும் |
| உழவே தலை | = உழுதொழிலே முதன்மையாகும். |

**கருத்து:** உலகம் உழவாலே உயிர்வாழவேண்டியிருத்தலின் உழுதொழிலே சிறந்தது.

**கேள்வி:** உழவைப்பற்றி வள்ளுவர் கூறும் சிறப்பு யாது.

---

## நல்குரவு

### அனுபவிக்கத்தக்க பொருள் யாவும் இல்லாமை

தருமபுர ஆதீன அடியாரில் ஒருவர் அட்சய லிங்க சுவாமிகள். இவர்கள் குருவின் சொற்படி வைத்தீஸ்வரன் கோயிலில் கட்டளை விசாரணை செய்யும் தலைவராக விளங்கினர். இவர் காலத்தில் கோவிலுக்கு உள்ள கொஞ்ச நிலத்தையும் உழ

ஒரு மாடு உண்டு. மற்ருெரு மாடு வாங்கப் பணம் இல்லை. பணம் இன்மையால், தாமே மற்ருெருபக்கத்தில் தம்கழுத்தை மாட்டி ஏரை இழுத்தனர். யாத்திரைக்காக வந்த அரசன் நேரில் கண்டு சுவாமிகளின் சிவத்தொண்டை வியந்தான். சுவாமிகளை அழைத்து இவ்விதம் செய்யக்காரணம் என்ன என்று வினவினன். அப்போது சுவாமிகள் அரசே! மந்திர மருந்து வலிமையால் நெருப்பிலும் தூங்க எளியேனல் முடியும். இந்த வறுமைத் துன்பத்தில் தூங்கினல் கொஞ்ச நிலமும் விளையாது பாழாகுமே" என்று மாட்டிற்குப் பதிலாக நான் இழுக்கிறேன்; ஒருமாடுவாங்கப் பணமில்லாத காரணமே நான் இழுப்பது ஆகும் என்ருர், இதைக் செவியுற்ற அரசன் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு, மேலும் நிலத்தையும் பொன்னையும் அளித்து வறுமையில்லாது வாழும்படியான ஏற்பாடுகளைச் செய்து சென்ருன். இக்கருத்தையுடையது பின்வரும் குறள்.

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்**
**யாதுஒன்றும் கண்பாடு அரிது. (78)**

| | | |
|---|---|---|
| நெருப்பினுள் | = | (மந்திர மருந்துகளால் ஒருவன்) தீயினுள் |
| துஞ்சலும் | = | தூங்குதலும் |
| ஆகும் | = | முடியும். |
| நிரப்பினுள் | = | தரித்திரம் வந்த இடத்தில் |
| யாது ஒன்றும் | = | எது ஒன்ருலும் |
| கண்பாடு | = | தூங்குதல் |
| அரிது | = | இல்லை. |

கருத்து: நெருப்பினுள் தூங்கினாலும் வறுமையில் தூங்க முடியாது.

கேள்வி: வறுமை செய்யும் துன்பத்தை வள்ளுவர் எவ்விதம் கூறியுள்ளார்?

---

## இரவச்சம்

### பெருமையை அழிக்கக் கூடிய பிச்சை எடுத்தலுக்கு அஞ்சுதல்

அருளாட்சிபெற்ற ஸ்ரீ சிவஞான தேசிகர் அவர்கள் 10-வது தலைவராகத் தருமபுர ஆதீனத்திற்கு வந்தார்கள். ஒருநாள் இவர்கள் திருவுலா வரும்போது பிரமராக்கதன் ஒருவன் இவர்கள் திருவடிகளில் வீழ்ந்து, "நல்லோரை நலிந்து பிடித்து அவர்களிடம் வேண்டியதைப் பிச்சைகேட்டுவாங்கி வாழும் இவ்வாழ்க்கையை விலக்கி அருளவேண்டும் என்று வேண்டினான். அப்போது சுவாமிகள் இவ்வுலகைப் படைத்தவன் உலகத்தோரை யாசகம் செய்து வாழப்படைத்தானாகில் அவன் அழியட்டும் என்று தாம் செய்துவரும் அநுட்டானங்களில் ஒரு கால அநுட்டானத்தை அவனுக்குத்தத்தம்செய்தார்கள். அவனும் அவ்வுருநீங்கித் தேவஉரு அடைந்து எல்லோருக்கும் கொடுத்துவாழும் வாழ்வைப் பெற்றான். இன்றும் இது நடைபெறுவது எவரும் அறி

வர். வள்ளுவரும் இவ்விதக் கருத்தையே இயற்றி உள்ளார்.

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான். (79)**

| | | |
|---|---|---|
| உலகு இயற்றியான் | = | இவ்வுலகத்தைப் படைத்தவன் (இவ்வுலகில் வாழ்வாங்கு முயன்று உயிர் வாழ்தலை அல்லாமல்) |
| இரந்தும் | = | யாசித்தும் |
| உயிர் வாழ்தல் வேண்டின் | = | உயிர் வாழ்தலை விரும்பிப் படைத்தானாயின் |
| பரந்து | = | அக்கொடியோன் தானும் அவர் போல் எங்கும் திரிந்து |
| கெடுக | = | அழிவானாக. |

**கருத்து:** இவ்வுலகைப்படைத்தவன் யாசகம்செய்யப் படைத்தானாகில், அவனும் அவர் போல் அலைந்து அழிவான்.

**கேள்வி:** "உலகியற்றியான் அழிக" என்று சொல்லக் காரணம் என்ன?

---

## கயமை

### நற்குணமில்லாத கீழோரது தன்மை

தருமபுர ஏழாவது தலைவராக விளங்கினவர் ஸ்ரீ திருவம்பல தேசிகர். இவர்கள் காலத்தில்

தஞ்சை அரசன் கடலாட விரும்பிச் சேனைசூழக் காவிரிப்பூம் பட்டினம் நோக்கிச் சென்றான். செல்பவன் தருமபுரம் அணுகினான். ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் மணி ஓசை கேட்டது. அருகிருந்தவரைக்கேட்டான். அர்த்தசாமபூசை நடக்கிறது என்றார்கள். உடனே குதிரையிலிருந்து கீழிறங்கி வணங்கிப் பின் சென்றான். வணங்கியதைக்கண்ட சில பொறாமையுடையவர், "தாங்கள் வணங்கியது சைவசமாதி ஆகும்; இதை அரசர்வணங்கினால் பிராயச்சித்தம் செய்யவேண்டும்" என்றார்கள். இதைக் கேட்ட அரசன், "இவ்விதம் உள்ள சமாதியை இடித்து எறியுங்கள்" என்று சொல்லிப் பின் தான் செல்லும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான். அரசன் உத்தரவின்படி ஆட்களும் இரும்புக் கோல் கொண்டு கட்டிடத்தை இடிக்கச் சென்றார்கள். இடிப்பதைக் கண்டு அடியவர் குழாம் ஓடிக் குருநாதரிடம் தெரிவித்தார்கள். குருநாதர் நீங்கள் எதிர்த்து யாதும் செய்யாதீர்கள்? அடங்கி இருங்கள்" என்று பின் வரும் பாடலைப் பாடினார்கள். அடியவர் குழாம் தம் இருப்பிடம் சென்று தங்கியது.

ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தின்
மோசம் வந்ததென்று மொழியலாம்—ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தான் ஆனால்
நோக்குவதென் யாம் பிறரை நொந்து.

இப்பாடல் சொன்னவுடனே இடித்தவர்கள் கண் பார்வை அழிந்து குருடராயினர். கடலை நோக்கிச் செல்லும் காவலன் கண் பார்வையும் கெட்டது. விழிதெரியாமையால் அரசன் மீண்டும் தருமபுரம் வந்து சுவாமிகளின் காலில் விழுந்து குற்றத்தைப் பொறுத்துக் காத்தருளவேண்டினன். சுவாமிகள் மனமிரங்கி விபூதி கொடுக்க ஒரு கண் தெரிந்தது. இடித்தவர்களுக்கும் விபூதி கொடுத்துக் கண் அறிவைஉண்டாக்கினர்கள். பின்கடலாடிவந்து 48நாள் சுவாமிகளை வழிபட்டிருக்க மற்றொரு கண்ணும் தெரிந்தது. அப்போது அரசன் சிலர் சைவசமாதி என்றார்களே! இதன்பெருமை என்ன? என்பதை எனக்கு விளக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொள்ள வருணாச்சிரம சந்திரிகை என்னும் நூலை, சுவாமிகள் இயற்றி அரசனுக்கு யாவற்றையும் அறியும்படிச் செய்தார்கள். இதனால் செருக்குள்ள கீழ் மக்களைத் துன்புறுத்தினால் அவர்கள் பிறர்க்குப் பயன்படுவர்; என்பதும், மேலோர் சொன்ன அளவிலே அடங்கி நடப்பர் என்பதும் அறியக்கிடக்கிறது. இக்கருத்தையே இக்குறளும் அறிவிக்க வந்துள்ளது.

**சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ். (80)**

சான்றோர் = மேலாயினோர்.
சொல்ல = பிறர் தங்குறையைச் சொன்னமாத்திரத்தில்

| | | |
|---|---|---|
| பயன் படுவர் | = | வருந்திப் பயன் படுவார்கள். |
| கீழ் | = | மற்றைய கீழ் மக்கள் |
| கரும்பு போல் | = | கரும்பைப் போல |
| கொல்ல | = | வலியவர் நைந்து போகும்படி நெருக்கிய இடத்து |
| பயன் படும் | = | பயன் படுவர். |

**கருத்து:** மேலார் பிறர்தம் குறையைச் சொல்லக் கேட்டு உதவி செய்வர். கீழோர் துன்பம் நிகழ்ந்தால் உதவி செய்வர்.

**கேள்வி:** கரும்புபோல் கொல்லப் பயன்படுப எவர்?

சேர்க்கை:

உ

குருபாதம்

# தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

சிவாகமபாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசைமுறைகளைப் பயிற்றுவிப்பது.

சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் வெளியிடுவது.

அறிஞரைக்கொண்டு ஆலயம்தோறும் அறவுரை வழங்குவது.

பிரசாரவாகனத்தின்மூலம் தமிழ்நாடெங்கும்சமயம்வளர்ப்பது

ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

ஆதீனக் கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

தமிழ்க் கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.

வடமொழிக் கல்லூரி நிறுவி சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

நூலாராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிடுவது.

சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

"ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்துவது.

சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

தமிழ்ப்பணி, சமயப்பணி செய்பவர்க் குதவுவது.

தமிழ்நாட்டுத் தலவரலாறு எழுதுவித்து வழங்குவது

புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

அடிக்கடி ஆதுலர்க்கு அறுசுவையுண்டி யளிப்பது.